# மூன்றாண்டு நிலைமை அறிக்கை

## 2021-2023

அரச வங்கிகள்

# உள்ளடக்கம்


| | | | பக்க இல. |
|---|---|---|---|
| **1.** | நிறைவேற்று பொழிப்புரை | | 2 |
| **2.** | நிதிக்கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் | | 4 |
| **3.** | அரச வங்கிகளின் அவதானிப்புக்கள் | | |
| | 3.1 | இலங்கை மத்திய வங்கி | 6 |
| | 3.2 | இலங்கை வங்கி | 9 |
| | 3.3 | மக்கள் வங்கி | 60 |
| | 3.4 | தேசிய சேமிப்பு வங்கி | 123 |
| | 3.5 | இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | 139 |
| | 3.6 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 168 |
| | 3.7 | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி | 173 |
| | 3.8 | மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீ | 180 |
| | 3.9 | இலங்கை சேமிப்பு வங்கி | 197 |

## 1. நிறைவேற்று பொழிப்புரை

2023 ஆண்டு இறுதி அளவில், வங்கிப் பிரிவு, 30 வங்கிகளை, அதாவது 11 வெளிநாட்டு வங்கிக் கிளைகள் உள்ளடங்களாக 24 அனுமதிப் பத்திரதார வர்த்தக வங்கிகள் மற்றும் 6 அனுமதிப் பத்திரதார வெளிநாட்டு வங்கிகளை உள்ளடங்கியதாகும். நிதிப் பிரிவின் முக்கிய பிரிவான வங்கிப் பிரிவு, 2023 ஆண்டு இறுதி அளவின் நிதிப் பிரிவின் மொத்த சொத்துக்களில் 61.5 சதவீதத்திற்கு உரிமை கொண்டுள்ளதுடன், குறைந்த பட்ச ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளை விடவும் அதிகளவில் பேணிக் கொண்ட மூலதனம் மற்றும் திரவத் தன்மை மட்டங்களின் உதவியுடன், பொருளாதார நெருக்கடியிலிருந்து மற்றும் பாதகமான உலகலாவிய நிலைமைகளிலிருந்து எழுந்த சவால்களை தாங்கிக் கொள்ள நேரிட்டன.

வங்கித் துறையின் மொத்த சொத்துக்களின் அளவு ஓராண்டினுள் ரூபா 989.4 மில்லியனினால் அதிகரித்ததுடன் 2023 திசெம்பர் அளவில் அது ரூபா 20 டிரிலியனை விஞ்சியது. 2022 ஆண்டு இறுதியில் அறிக்கையிடப்பட்ட 15.4 சதவீத வருடாந்த வளர்ச்சிக்கு ஒப்பாக, 2023 ஆண்டு இறுதியில் 5.1 சதவீத வருடாந்த வளர்ச்சி, வங்கிப் பிரிவின் சொத்துக்கள் அறிக்கை இடப்பட்டன. செலாவணி விகிதம் மிகை அளவை கொண்டது முதல் வெளிநாட்டு நிதியினால் பெயரிடப்பட்ட கடன் மற்றும் பெறவேண்டியவைகள் மற்றும் முதலீடுகள் இலங்கை ரூபாயிற்கு மாற்றப்பட்டமை இந்த வளர்ச்சியின் பின்னடைவிற்கு முக்கிய காரணமாக இருந்தது. கடன் மற்றும் பெறவேண்டியவைகள், 2022 ஆண்டிறுதியில் நிலவிய 5.5 சதவீதமான வருடாந்த வளர்ச்சிக்கு ஒப்பாக, 2023 ஆண்டில் 2.6 சதவீதத்தினால் வருடாந்த சுருக்கத்திற்கு உட்பட்டதுடன், 2023 ஆண்டு ஆரம்ப அரையாண்டினுள் நிலவிய இருக்கமான நிதிக் கொள்கை நிலைப்பாடு இதற்கு காரணம இருந்தது.

வங்கிப் பிரிவின் நிதி வழங்கும் முக்கிய மூலமாக தொடர்ச்சியாக காணப்பட்ட வைப்புக்கள், 2023 ஆண்டு இறுதியளவில் மொத்த ஐந்தொகை பொறுப்புக்களில் 81.5 சதவீதமானதுடன், கடன் பெறுவனவுகளின் பங்களிப்பு 6.8 சதவீதமானது.

3 ஆம் கட்டத்தின் கீழ் நிலவும் கடன் விகிதத்தின் மூலம் பிரதிபழிப்பதன் பிரகாரம், 2023 ஆண்டிறுதியில் வங்கிப் பிரிவின் கடன் ஆபத்து உயர் மட்டத்தில் நிலவியது. முக்கியமாக 3 ஆம் கட்டத்தின் கீழ் காணப்படும் கடன் அதிகரித்தமை மற்றும் கடன் மற்றும் பெறவேண்டியவைகளின் சுருக்கம் காரணமாக, வங்கிப் பிரிவில் 3 ஆம் கட்டத்தின் கீழ் காணப்படும் கடன் விகிதம், 2022 ஆண்டு இறுதியில் நிலவிய 11.3 சதவீதத்திற்கு ஒப்பாக 2023 ஆண்டிறுதியில் 12.8 சதவீதம் வரை அதிகரித்ததுடன், அதன் மூலம் வங்கிப் பிரிவில் கடன்களின் தரம் தொடர்பான பிரச்சினையான நிலைமையொன்று காண்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 3 ஆம் கட்டத்தின் கீழ் நிலவிய கடன்களிற்கான ஒதுக்கீடு (பயன்படுத்தப்படாத கடன் எல்லைகள் உள்ளடங்களாக) 18.4 சதவீதத்தினால் (வருடாந்தம்) அதிகரித்தன் மூலம், 2022 ஆண்டு இறுதியில் நிலவிய 3 ஆம் கட்டத்தின்

கீழ் காணப்படும் கடன் சேத காப்பு விகிதமான 44.9 சதவீதத்திற்கு ஒப்பாக, 2023 ஆண்டு இறுதியின் போது அது 49.3 சதவீதம் வரையான அதிகரிப்பை அறிக்கையிட்டது.
ரூபாவினால் பெயரிடப்பட்ட அரசாங்க காப்புப் பத்திரங்களினால் பிரதிநிதிப்படுத்தப்படும் திரவத்தன்மை சொத்துக்களின் அதிக வளர்ச்சி காரணமாக, நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதம் (SLAR) மற்றும் திரவத்தன்மை காப்பு விகிதம் (LCRs) மூலம் காண்பிக்கப்படும் வங்கிப் பிரிவின் திரவத்தன்மை 2023 ஆண்டின் போது வளர்ச்சியடைந்துள்ளது.
முக்கியமாக புதிய கடன் சேத கட்டணம் குறைவடைந்த காரணத்தால் ஆண்டினுள் இலாபத் தன்மை அதிகரிப்பையும் காண்பித்தது. 2023 ஆண்டினுள் வங்கிப் பிரிவின் வட்டி வருமானம் 25.5 சதவீதத்தால் அதிகரித்ததுடன், வட்டிச் செலவினம 42.7 சதவீதத்தால் அதிகரித்தமை, தேறிய வட்டி வருமானம் 4.9 சதவீதத்தால் குறைவடைய காரணமானது. அதன் விளைவாக, ஆண்டிறுதியில் 4.0 சதவீதமாக காணப்பட்ட தேறிய வட்டி எல்லை, 2023 ஆண்டு இறுதியின் போது 3.6 சதவீதம் வரை குறைவடைந்தது.
ஒட்டு மொத்தமாக, 2023 ஆண்டின் போது, குறைந்த மூலதன தேவைப்பாடுகளிற்கு இணங்குவதற்கு வங்கிப் பிரிவு உட்பட்டிருந்தது. முக்கியமாக, மொத்தக் கடன்களின் சுருக்கம், அரசாங்க காப்புப் பத்திரங்களின் முதலீடு அதிகரித்தமை, மற்றும் இலங்கை ரூபாய் பெறுமதி இறக்கமடைந்தன் காரணமாக, 2023 ஆண்டினுள் ஆபத்தின் மீது நிறையிடப்பட்ட சொத்துக்களின் அளவு வீழ்ச்சியடைந்ததால் 2022 ஆண்டு இறுதிக்கு ஒப்பாக, 2023 ஆண்டு இறுதியில் வங்கிப் பிரிவின் மூலதன தரப்படுத்தலில் வளர்ச்சியொன்று அறிக்கையிடப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

அரச வங்கிகளால் ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல் தகவல்களின் பொழிப்புகளை உள்ளடக்கிய வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் உண்மையான மற்றும் நியாயமான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்டபில் சுயாதீனமான சான்றுபடுத்தலொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்படும். நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை வழங்குவதன் மூலம் இந்த சான்றிதழ் வழங்கப்படுகின்றது. அரச வங்கிகளின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றுக்களின் நியாயமான நிலைமைகள் வெளிப்படுத்தப்படுகின்றதா இல்லையா என்பது மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அல்லது தற்போது சர்வதேச பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இந்த நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றதா இல்லையா என்பது தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை கணக்காய்வு அபிப்பிராயத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இணக்கமின்மைகள் மற்றும் விடயப்பரப்பிலான மட்டுப்படுத்தல்கள் மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு ஆகியவற்றுக்கு இடையே ஏற்படும் இணக்கமின்மைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டதன் பின்னர் நான்கு முறைகளில் அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படுகின்றது. அவை பின்வருமாறு.

**முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அல்லது இணக்கமின்மைகள் அறிக்கையிடப்படாத போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அல்லது இணக்கமின்மைகள் அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும் அவை நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் வியாபித்திருக்காத போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**பாதகமான அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள பொருண்மையான / பிறழ் கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்களில் வியாபித்துள்ள போது பாதகமான கணக்காய்வு அபிபிராயம் வழங்கப்படும்.

**மறுப்பு அபிப்பிராயம்**

விடயப்பரப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் கணக்காய்வுக்கு கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் கணக்காய்வினால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாத பிறழ் கூற்றுகள் காணப்படும் என தீர்மானிக்கின்ற போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

## அரச வங்கிகளின் அபிப்பிராயம் தொடர்பான தகவல்

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக 09 வங்கிகளுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| முனைப்பழியற்ற | 9 | 9 | 9 |
| முனைப்பழியுள்ள | - | - | - |
| மறுப்பு | - | - | - |
| பாதகமான | - | - | - |
| அபிப்பிராயம் இதுவரை தீர்மானிக்கப்படாத எண்ணிக்கை | - | - | - |
| நிதிக்கூற்றுக்கள் கிடைக்காத எண்ணிக்கை | - | - | - |

| | பெயர் | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|
| 1. | இலங்கை மத்திய வங்கி | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது |
| 2. | இலங்கை வங்கி | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது |
| 3. | மக்கள் வங்கி | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது |
| 4. | தேசிய சேமிப்பு வங்கி | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது |
| 5. | இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது |
| 6. | பிரதேச அபிவிருத்தி வங்கி | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது |
| 7. | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது |
| 8. | மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீ | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது |
| 9. | இலங்கை சேமிப்பு வங்கி | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது | முனைப்பழியற்றது |

## 3. அரச வங்கிகளின் அவதானிப்புகள்

### 3.1 இலங்கை மத்திய வங்கி

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | தேறிய சொத்துக்கள் ரூபா | வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 3,046,278,158,000 | 2,582,659,114,000 | 463,619,044,000 | 158,162,666,000 | முனைப்பழியற்றது |
| **2022** | 4,510,347,102,000 | 4,428,094,250,000 | 82,252,852,000 | (374,320,973,000) | முனைப்பழியற்றது |
| **2023** | 4,205,444,261,000 | 4,194,259,205,000 | 11,185,056,000 | (114,430,814,000) | முனைப்பழியற்றது |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | நுண்பாக நிதி வணிகத்தை மேற்கொள்ளும் கம்பனிகளின் உரிமம், ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வையானது 2016 இன் 06 ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டத்தின் கீழ் 2016 யூலை 15 முதல் வங்கியின் நாணயச் சபையால் அமுல்படுத்தப்படுகின்றது . வைப்புக்களை ஏற்று, குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு நிதி சேவைகளை வழங்கும் கம்பனிகள் மற்றும் நுண்பாக தொழில்முயற்சிகள் (நுண்பாக நிதி வணிகங்கள்) இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெறுதல் வேண்டும். வைப்புக்களை | 2021, 2022 | வைப்புக்களை ஏற்றுக்கொள்ளாத ஆனால் குறைந்த வருமானம் உள்ளவர்கள் மற்றும் நுண்கடன் நிறுவனங்களுக்கு நிதிச் சேவைகளை வழங்கும் கம்பனிகளை ஒழுங்குபடுத்த வேண்டும். | நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையை நிறுவுவதற்கான சட்டமூலம் 2024 சனவரி 09 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏற்றுக்கொள்ளாத, ஆனால் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு நிதி சேவைகளை வழங்கும் கம்பனிகள் மற்றும் நாட்டிலுள்ள நுண்பாக தொழில் முனைவோர்கள் இச் சட்டத்தின் கீழ் உரிமம் பெறத் தேவையில்லை. எனவே, அவ்வகையான கம்பனிகள் இச்சட்டத்தின் கீழ் 2023 நவம்பர் இறுதி வரையிலும் வங்கியின் நாணய சபையால் கட்டுப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுவதில்லை. | | | | |
| 2 | 2020.11.09 இல் நடைபெற்ற வங்கியின் கூட்டு முகாமைத்துவக் குழு அதன் கூட்டத்தில் வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்ட ஒருவருக்கு ஓய்வூதிய நலன்களுக்கான விதிகளை புதிய ஓய்வூதியத் திட்டத்தின் விதிகளில் உள்ளடக்குமாறு சிபாரிசு செய்திருந்ததுடன், 2020.12.23 இல் நடைபெற்ற நாணயச் சபையின் கூட்டத்தில் இதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்ட நபர் ஓய்வூதிய நலன்களை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவார். எனினும், வங்கியின் ஆளுநராக கடமையாற்றுவதற்கான குறைந்தபட்ச காலப்பகுதியானது, ஆளுநருக்குப் | 2021, 2022 | இதனை மீளாய்வு செய்வதற்கு ஆளுகை சபை இணங்கியிருந்த துடன் மீளாய்வு செயன்முறையை விரைவுபடுத்த பரிந்துரை செய்தது. | ஆளுகை சபை 2024 நவம்பர் 11 இல் நடைபெற்ற அதன் கூட்ட இல. 24/2024 இல், ஆளுநர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2024 நவம்பர் 11 முதல் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட வேண்டும் என்றும், ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான கோரிக்கைகள் எதுவும் மத்திய வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது என்றும் முடிவு செய்துள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

பொருந்தும் ஓய்வூதிய
விதிகளில்
குறிப்பிடப்பட்டிருக்காதமை
ம அவதானிக்கப்பட்டது.

## 3.2 இலங்கை வங்கி

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | தேறிய சொத்துக்கள் ரூபா | வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 3,803,283,843,000 | 3,602,524,011,000 | 200,759,832,000 | 37,590,107,000 | முனைப்பழியற்றது |
| **2022** | 4,336,459,704,000 | 4,082,275,561,000 | 254,184,143,000 | 31,972,408,000 | முனைப்பழியற்றது |
| **2023** | 4,411,748,315,000 | 4,160,033,595,000 | 251,714,720,000 | 26,693,526,000 | முனைப்பழியற்றது |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | சில முறைமை தோல்விகள் காரணமாக பொது பேரேட்டு மீதிக்கும் வங்கி வர்த்தக நிதி முறைமையின் நிலுவை மீதிகளிற்கும் இடையே ரூபா 397,565,454 வேறுபாடு அறிக்கையிடப்பட்டது.. 2021 ஆம் நிதியாண்டில் இது தொடர்பாக முழுமையான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | 2021 | உரிய திகதிகளில் தேவையான திருத்தங்களைச் செய்து, பொதுப் பேரேடு மற்றும் துணை முறைமைகளுக்கு இடையே உள்ள மீதிகளை அடிக்கடி கணக்கிணக்கம் செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. | நிலுவையாக உள்ள வட்டியை கணக்கிணக்கம் செய்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024.09.30 இல் உள்ளவாறு 90% இற்கும் அதிகமான கணக்கிணக்கங்கள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள கணக்கிணக்கங்கள் 2024.11.15 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும், மேலும் 2024.11.30 இற்கு முன்னர் இந்த நிதியேற்பாட்டை மாற்றியமைக்க முகாமைத்துவ அங்கீகாரம் பெறப்படும். | |
| | **சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட கடன்** சிலோன் | 2021 | ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு கடன்களை வழங்குவதற்கு | 1. ஆரம்பத்தில் வழங்கப்பட்ட வசதிகள், வசதிகளை மீளப்பட்டியலிட்ட | |

நியூஸ்பேப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு 2011 இல் முதல் வசதி வழங்கப்பட்டதுடன் 2014 இல் அவை மேம்படுத்தப்பட்டது. வசதிகள் ஆரம்பத்தில் 2015 இலும் மீண்டும் தவணைக்காலத்தை அதிகரித்து ஏற்கனவே உள்ள வட்டி விகிதங்களைக் குறைப்பதன் மூலம் 2017 இலும் மீளப்பட்டியலிடப்பட்டன. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்தக் கடன் போர்ட்போலியோ 13 முக்கிய கடன்கள் மற்றும் 11 துணைக் கடன்களைக் கொண்டுள்ளதுடன் மொத்த தொகுதி வெளிப்பாடு ரூபா 2,370 மில்லியன் ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2019 திசெம்பர் முதல் வழங்கப்பட்ட 13 பிரதான கடன்களில், 11 கடன்கள் ஏற்கனவே உள்ள கடன்களை மீள்பட்டியலிடுவதற்கு அல்லது தற்போதுள்ள நாணயக் கடிதங்கள் / உண்டியல்களை ஏற்றுக்கொள்ளுதல்/ கடன் தொடர் (ஒருமுறை மற்றும் அனைத்திற்கும்) வசதியின் கீழ் நிலுவையாக முன்னர் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் வங்கியால் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

பின்னர் 2017 ஆம் ஆண்டில் அட்டுறு வட்டியின் மூலதனமாக்கலுடன் மேம்படுத்தப்பட்டன.

2. அனைத்து காசுப்பாய்ச்சல் சிக்கல்கள் மற்றும் கம்பனியின் மோசமான நிதி பின்னணி இருந்த போதிலும் வணிகத்தைத் தொடர சில கடன் வசதிகள் தேவை என்று வங்கி கருதியது, மேலும் கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு சில சந்தர்ப்பங்களில் கடன் காலம்தாழ்த்தி மீளச்செலுத்துதல் வழங்கப்பட்டுள்ளது.
3. கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக அவர்களின் வருமானம் மெதுவாக தேறுவதை கருத்தில் கொண்டு, மாதாந்த திருப்பிச் செலுத்துதலுடன் பொருந்தக்கூடிய வகையில் மொத்த

உள்ளவற்றை மாற்றுவதற்காக வழங்கப்பட்டுள்ளன.

- 13 பிரதான கடன்களில், 9 கடன்கள் 24 மாத சலுகைக்காலத்துடனும் மற்றொரு கடன் 12 மாத சலுகைக் காலத்துடனும் வழங்கப்பட்டுள்ளன. எனவே இந்த 10 கடன்கள் இன்னும் செயற்படும் வகையிலேயே உள்ளன.
- கம்பனியின் ஒட்டுமொத்த நிதி செயலாற்றல் சாதகமாக காணப்படவில்லை. கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது 2011/12 முதல் 2019/20 வரை குறிப்பிடத்தக்க தேறிய நட்டத்தை பதிவு செய்துள்ளதுடன் கடந்த ஒன்பது வருட காலப்பகுதியின் போது நட்டம் கணிசமாக அதிகரித்து வருகிறது. 2019/2020 இல் கம்பனியின் எதிர்மறை தேறிய பெறுமதி ரூபா 3.7 பில்லியனை அடைந்துள்ளது. இந்தக் கடன்களை வழங்குவதற்கு முன்னர் கம்பனியின் சாதகமற்ற நிதி போர்ட்போலியோவை மீளக் கட்டமைக்க கம்பனி கோரியுள்ளது.

4. புதிய அரை தானியங்கி அச்சிடும் இயந்திரத்தை இறக்குமதி செய்வதன் மூலம் வணிகத்தை புத்துயிர் பெற செய்யவும், உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படும் வருமானத்தை அதிகரிக்கவும் புதிய கடன் வசதிகள் வழங்கப்பட்டதன் மூலம் வெளிப்பாடு ரூபா 2.3 பில்லியனாக உயர்த்தப்பட்டது. இது கழிவுகளை குறைத்து தயாரிப்பின் தரத்தை மேம்படுத்துவதை விளைவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகறிது. மேலும், புதிய அச்சிடும் இயந்திரத்தைப் பயன்படுத்திஇதழ் அச்சிடுதல், உடற்பயிற்சி புத்தக அச்சிடுதல் மற்றும் புத்தக அட்டை அச்சிடுதல் என தயாரிப்புக்களை பல்வகைப்படுத்துவதற்கு கம்பனி எதிர்பார்க்கிறது.

நிலைமையை வங்கி கருத்தில் கொண்டிருக்கவில்லை.

- சலுகைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் நிபந்தனைகளை கம்பனியால் பூர்த்தி செய்ய முடியவில்லை.
  - 2018 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கூறப்பட்ட மூலதனத்தை ரூபா 300 மில்லியனாக உயர்த்துதல்.
  - பணிப்பாளர்களால் மாதாந்தம் சான்றுறுதிப்படுத்தப்பட்ட இருப்புக்கள் மற்றும் புத்தகக் கடன் கூற்றுக்களை வழங்குதல்.
  - கொழும்பு 07, ஹோர்டன் பிளேஸில் அமைந்துள்ள கம்பனியின் தலைவரின் தனிப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் வருமானத்திலிருந்து ரூபா 365.4 மில்லியன் தொகையான காலக் கடன் வசதியின் கீழ் உள்ள மொத்த நிலுவையை தீர்ப்பனவு செய்தல்.

5. புதிய அரை தானியங்கி அச்சிடும் இயந்திரத்தின் வருகையுடன் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய புதிய வணிக உத்திகளுடன் கம்பனி ஒரு வணிகத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளது. CNL விளக்கியபடி, புதிய இயந்திரம் காகிதம், மை வீணாவதைக் குறைப்பதன் மூலம், மின்சார நுகர்வை குறைப்பதன் மூலம், உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் ரூபா 10.0 மில்லியன் மாதாந்த கிரய சேமிப்பை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
6. தொழிற்சாலையில் நிலையான இயந்திரத்தை இறக்குமதி செய்வதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம் மற்றும் பொருளாதாரத்தின் மெதுவாக நகரும் தன்மையைக் கருத்தில் கொண்டு, CNL 24 மாத தயவு கால அவகாசத்தைக் கோரியது,

- 2020 மே 12 ஆம் திகதிய 2.12 ஆம் இலக்க சபைக் கூட்டக்குறிப்பின் பிரகாரம் இந்த கம்பனிக்கு மேலும் எந்த வசதியும் வழங்க வேண்டாம் என சபை தீர்மானித்திருந்தது. எனினும் கம்பனியின் கோரிக்கையின் அடிப்படையில் ரூபா 850 மில்லியன் புதிய கடன் தொகுப்பு 2021 மே 06 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- 2021 நவம்பர் 17 ஆம் திகதிய 2.6 ஆம் இலக்க சபைக் கூட்டக் குறிப்பின் பிரகாரம் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களுக்கு **குழு மதிப்பீட்டாளரால் (Panel Valuer) முன்வைக்கப்பட்ட சந்தை பெறுமதியின்** அடிப்படையில் 100 சதவீதம் வரை முன்பண விகிதத்தை கருத்தில் கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது. எனினும், ஏனைய வசதிகளுக்கான சுற்றறிக்கையின் பிரகாரம் **வங்கியின் மதிப்பீட்டாளர்களால் முன்வைக்கப்படும் கட்டாய விற்பனை பெறுமதியின்** அடிப்படையில் முற்பண விகிதம் 60 சதவீதமாகக் கருதப்படுகிறது.

மேலும் மாதாந்த மீள்கொடுப்பனவை அதன் எதிர்வுகூறப்பட்ட காசுப்பாய்ச்சல்களுடன் பொருந்தச்செய்வதற்கு மீள்கொடுப்பனவு காலத்தின் கால அளவை மேம்படுத்துகிறது.

7. மொத்த வெளிப்பாடு குழு மதிப்பீட்டாளரால் முன்வைக்கப்பட்ட 100% சந்தை பெறுமதி வரையான முற்பண விகிதத்தைக் கருத்தில் கொண்டு தொழிற்சாலை வளாகத்தில் அமைந்துள்ள 4 சொத்துக்கள் மற்றும் இயந்திரங்கள் மீதானடி தற்போதைய மற்றும் மேலதிக ஈட்டினால் ஈடுசெய்யப்பட்டது,
8. 2018 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கூறப்பட்ட மூலதனத்தை ரூபா 300 மில்லியனாக அதிகரித்தல்.

இந்த நிபந்தனை கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி பல சந்தர்ப்பங்களில் கம்பனிக்கு

எனவே, வங்கியானது கம்பனிக்கு அதிக கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் மிகவும் சாதகமான நடவடிக்கைகளை வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

அறிவிக்கப்பட்டுள்ளது .

(அ) 2020.05.22 இல் AGM (கூட்டுத்தாபன உறவுகள்) கையொப்பமிட்ட ஒரு கடிதம், எமது வங்கி முகாமைத்துவத்தின் விடயங்களைத் தெரிவிப்பது தொடர்பாக CNP இன் முகாமைத்துவ பணிப்பாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) வாடிக்கையாளருக்கு அவ்வப்போது வழங்கப்பட்ட சலுகைக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட நிபந்தனைகளின் கீழ், ”கூறப்பட்ட மூலதனம் 2022.03.31 இல் அல்லது அதற்கு முன்னர் ரூபா 300.0 மில்லியன் வரை அதிகரிக்கப்பட வேண்டும்” என்று கூறப்பட்டது.

(இ) மேலும், 2022.03.31 இல் அல்லது அதற்கு முன்னர் கூறப்பட்ட மூலதனத்தை ரூபா 300.0 மில்லியன் வரை உயர்த்துவதாக கம்பனியிடமிருந்து ஒரு உறுதிமொழியைப் பெற்றுள்ளோம்.

(ஈ)கொவிட் -19 இற்குப் பிந்தைய விளைவுகளின் அந்த நேரத்தில் நிலவும்

சூழ்நிலைகள், அனைத்து பொருளாதார மந்தநிலைகள் இருந்த போதிலும் இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டிய அவசியம் மற்றும் எமது வங்கி அத்தகைய முயற்சியை ஆதரிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஆகியவற்றின் வெளிச்சத்தில், வங்கி வெளிப்படுத்திய நிபந்தனைகள் தொடர்பாக பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு வாடிக்கையாளர் நேர்மறையான பதிலைக் காட்டவில்லை அல்லது இணங்கவில்லை என்றாலும், வங்கி கம்பனிக்கு மேலும் நிதியுதவி அளித்துள்ளது.

9. பணிப்பாளர்களால் மாதாந்தம் சான்றுபடுத்தப்பட்ட பங்குகள் மற்றும் புத்தகக் கடன் அறிக்கைகளை வழங்குதல்.

கம்பனி முன்னதாக மாதாந்த அறிக்கைகளை வழக்கமாக அனுப்பவில்லை என்றாலும், 2021 யூன் முதல், கம்பனியின் பொது முகாமையாளரின் (அங்கீகரிக்கப்பட்ட

கையொப்பமிட்டவர்களில் ஒருவர்) கையொப்பத்தின் கீழ் எங்களால் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு வடிவத்தில் மாதாந்த அறிக்கைகளைப் பெற்றுள்ளோம்.

10. கொழும்பு 07, ஹார்டன் பிளேஸில் அமைந்துள்ள கம்பனி தலைவரின் தனிப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் வருமானத்திலிருந்துரூபா 365.4 மில்லியன் தொகையான கால கடன் வசதியின் கீழ் நிலுவையாக உள்ள மொத்த தொகையைத் தீர்ப்பனவு செய்தல்.

கம்பனி இந்தச் சொத்தை விற்று காலக் கடனைத் தீர்க்கும் எண்ணத்தைக் கொண்டிருந்தது. கம்பனியின் பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டவாறு, திரு. டிரான் அலஸுக்குச் சொந்தமான ஹார்டன் பிளேஸில் அமைந்துள்ள சொத்தை விற்பனை செய்வதற்கான

நியாயமான சலுகை அவர்களுக்குக் கிடைக்காததால், அது நிறைவேறவில்லை. எனவே, நீண்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்படக்கூடிய வகையில் கடனை மறுசீரமைக்குமாறு கோரப்பட்டது.

11. 2020 மே 12 ஆம் திகதிய 2.12 ஆம் இலக்க சபைக் குறிப்பின் பிரகாரம், இந்த கம்பனிக்கு மேலும் எந்த வசதிகளையும் வழங்க வேண்டாம் என்று சபை முடிவு செய்திருந்தது. எனினும், கம்பனியின் கோரிக்கையின் அடிப்படையில், ரூபா 850 மில்லியன் புதிய கடன் பொதி 2021 மே 06 இல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

1.0 கம்பனியின் நிலைப்பாடு, அதன் கடன் தகுதியின்மை, நிறுவனத்தின் தொடர்ச்சியான நட்ட நிலைமை மற்றும் இது தொடர்பாக பிரதம இடர் அதிகாரி வழங்கிய விரிவான கருத்துக்கள்

ஆகியவற்றை பணிப்பாளர் சபை பரிசீலித்த போதிலும், மறுசீரமைப்பு பொதி மற்றும் புதிய கடன் வசதிகளுக்கான அங்கீகாரம், விஞ்ஞாபனத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து பிணைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் CRO ஆல் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பின்வரும் காரணிகளைக் கணக்கிட்டு வழங்கப்பட்டுள்ளது;

i. கம்பனி கடந்த 10 ஆண்டுகளாக வாடிக்கையாளராக உள்ளது
ii. இந்த வசதியுடன் புதிய/புதிய பிணையங்கள் கொண்டு வரப்படுகின்றன.
iii. வாங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள புதிய இயந்திரம் வீணாவதைக் குறைக்கும், கம்பனியின் செயலாற்றலை மேம்படுத்தும்
iv. நாட்டில் இரண்டாவது பெரிய புழக்கத்தைக் கொண்ட செய்தித்தாள் கம்பனி என்பதால் இந்த நிறுவனத்திற்கு உதவ வேண்டிய

அவசியம் குறித்து.

2.0 கம்பனி விளக்கியபடி, புதிய அரை தானியங்கி அச்சிடும் இயந்திரத்தின் வருகையுடன், பயிற்சி புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளை தயாரிப்பதில் வணிகத்தை பன்முகப்படுத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனர். இந்த அணுகுமுறை கம்பனி சமர்ப்பித்த எதிர்வுகூறப்பட்ட காசுப்பாய்ச்சல் அறிக்கைகளின் பிரகாரம் வணிகத்திற்கு கணிசமான மேலதிக வருமானத்தை சேர்க்கும்.

3.0 கம்பனி சமர்ப்பித்த வணிகத் திட்டத்தின் பிரகாரம் கணிக்கப்பட்டமேலதிக வருமானத்தை பயன்படுத்தி வணிகத்தை மீண்டும் உயிர்ப்பிக்கவும், கம்பனிக்கு வழங்கப்பட்ட தற்போதைய கடனை அறவிடுவதற்கும் வங்கி கம்பனிக்கு புதிய வசதிகளை அங்கீகரித்துள்ளது.

12. 2021 நவம்பர் 17 ஆம் திகதிய 2.6 ஆம் இலக்க சபைக் குறிப்பின் பிரகாம் ஈடு வைக்கப்பட்ட

சொத்துக்களுக்கு குழு மதிப்பீட்டாளரால் முன்வைக்கப்பட்ட சந்தை பெறுமதியின் அடிப்படையில் 100 சதவீதம் வரை முற்பண விகிதத்தைக் கருத்தில் கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது. எனினும், ஏனைய வசதிகளுக்கான சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் வங்கியின் மதிப்பீட்டாளர்களால் முன்வைக்கப்படும் கட்டாய விற்பனை பெறுமதியின் அடிப்படையில் முன்பண விகிதம் 60 சதவீதமாகக் கருதப்படுகிறது. எனவே, வங்கி அதிக கடன் வசதிகளை அனுபவிக்க அனுமதிப்பதன் மூலம் நிறுவனத்திற்கு மிகவும் சாதகமான திருத்தங்களை வழங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

2020.01.29 ஆம் திகதிய OIC 13/2020 இன் பின்னிணைப்பு II (உ) இன் பிரகாரம்

அதிகபட்சமாக வழங்கப்பட்ட தொகை வங்கியின் அசையா சொத்துக்களின் மதிப்பீட்டின் FSV இன் 60% ஆக வரையறுக்கப்பட வேண்டும் என்பது குறித்துக்கொள்ளப்பட்டது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளைக் கருத்தில் கொண்டு. குழு மதிப்பீட்டாளரால் செய்யப்பட்ட மதிப்பீட்டின் 100% ஐக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள/முன்மொழியப்பட்ட வசதிகளைப் பத்திரப்படுத்த நாங்கள் முன்மொழிந்துள்ளோம், மேலும் 2021.05.06 ஆம் திகதிய பணிப்பாளர் அங்கீகாரமும் அதற்காகப் பெறப்பட்டுள்ளது.

i. ஏற்கனவே உள்ள பாதுகாப்பற்ற வசதிகளைப் பத்திரப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட வசதிகள் மறுசீரமைப்பிற்காக இருந்தன.

ii. காணி விலைகளின் உயர்வு மற்றும் முன்மொழியப்பட்ட வசதிகளில் பெரும்பாலானவை மாதாந்த மீள்கொடுப்பனவுடன் கூடிய காலக் கடன்களாக இருந்தன, இதனால் மொத்த வெளிப்பாடு குறைந்து கொண்டே இருக்கும்.

எனினும், 2021.04.29 ஆம் திகதிய பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்ட விஞ்ஞாபனத்தில் கடன் கொள்கையிலிருந்து விலகல் பிரிவு 4.2 இன் கீழ், அசையா சொத்துக்களுக்கு எதிராகக் கருதப்படும் முன்பண விகிதம் தொடர்பாக வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட கடன் கொள்கையிலிருந்து இந்த திட்டம் விலகியுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

வாடிக்கையாளரின் கடன் கோவை 2022.08.31 இல் வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இன்னும் மறுமலர்ச்சி செயற்பாட்டில் உள்ள

| | | | |
|---|---|---|---|
| | | | வணிகத்தை மீண்டும் உயிர்ப்பிக்க, தொடர்புடைய பிரதிநிதித்துவ அதிகாரிகளின் அங்கீகாரத்துடன். 2022.11.24 இன் மறுமலர்ச்சி பொதி வழங்கப்பட்டிருந்தது. |
| **டபிள்யூ எம் மெண்டிஸ் அன்ட் கம்பனி லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட கடன்கள்-** டபிள்யூ எம் மெண்டிஸ் அன்ட் கம்பனி லிமிட்டட் என்பது ஒரு தனியார் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும், மேலும் இது பரந்த அளவிலான தேங்காய் மற்றும் கலப்பு மதுபான தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் மற்றும் போத்தலில் இடுதலில் ஈடுபட்டுள்ளது. வங்கி கம்பனிக்கு கடன் பொதியை வழங்கியுள்ளதுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>• வங்கியானது 2016 யூன் 8, 2018 யூலை 09, 2019 செப்தெம்பர் 18 மற்றும் 2020 மே 12 ஆகிய திகதிகளில் டபிள்யூ எம் மெண்டிஸ் அன்ட் கம்பனிக்கு புதிய வசதிகள் மற்றும் ஏற்கனவேயுள்ள வசதிகளுக்கான பல விரிவாக்கங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. | 2021 | ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் வங்கியால் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. | எதனோல் உற்பத்தி செயற்பாட்டைத் தொடர்ச்சியான அடிப்படையில் இயக்கத் தேவையான உலர்த்தி குழாய் மூட்டையை (இயந்திரங்களின் ஒரு பகுதி) இறக்குமதி செய்வதற்கு, ஒரே நேரத்தில் மற்றும் அனைத்து அடிப்படையில் புதிய நாணயக் கடிதம்/ விலைப்பட்டியல் ஏற்பு/ ரூபா 110.0 மில்லியன் தொடர் கடன் வரம்பை வழங்குவதற்கும் 2023.03.31 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. (எதனோல் பிரித்தெடுக்கும் செயன்முறையின் (கசடு) தயாரிப்பு மூலம் திரவத்தை கோழி/ கால்நடை தீவனமாக கோழித் தொழிலுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் தூளாக மாற்றுவதற்குத் தேவையான இயந்திரத்தின் ஒரு |

2020 மே 12 இல் கம்பனிக்கு அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகுப்பில் ரூபா 2,055 மில்லியன் மீள்பட்டியலிடப்பட்ட காலக் கடன், ரூபா 240 மில்லியன் காலக்கடன், ரூபா 318 மில்லியன் இன்னொரு மீள்பட்டியலிடப்பட்ட கடன் மற்றும் ரூபா 500 மில்லியன் மேலதிகப்பற்று வசதி ஆகியன உள்ளடங்குகிறது. அனைத்து வசதிகளும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டுள்ளன.

- உற்பத்தி உரிமம் புதுப்பிக்கப்படாததால் 2020 ஒக்தோபர் முதல் கம்பனியின் வணிகம் இடைநிறுத்தப்பட்டுள் ளது. தற்போது கலால் திணைக்களம் கல்குடா ஆலையில் உற்பத்தியைத் தொடங்க எத்தனோல் உரிமத்தையும் வெலிசர தொழிற்சாலையில் ENA கலவையை மீண்டும் தொடங்குவதற்கான கலப்பட உரிமத்தையும் வழங்கியுள்ளதுடன் ஏற்கனவே 2022 பகுதி). கம்பனியின் வணிக மறுமலர்ச்சியைக் கருத்தில் கொண்டு இந்த வசதி அங்கீகரிக்கப்பட்டுள் ளதுடன் புதிய இயந்திர பாகம் இறக்குமதி செய்யப்பட்டு கல்குடா தொழிற்சாலையில் நிறுவப்படும் வரை 4 மாத தயவுக்கால அவகாசத்துடன் மாறும் மூலதன கொடுப்பனவு முறையில் திருப்பிச் செலுத்துதல் கட்டமைக்கப்பட்டுள்ள து. மீள்பட்டியலிடல் வசதிகள் 2023 யூன் மாதத்தில் வழங்கப்பட்டன. எனினும், பாதகமான வானிலை மற்றும் வாடிக்கையாளரால் விளக்கப்பட்ட ஏனைய பல்வேறு காரணங்களால் இயந்திரத்தின் வருகை மற்றும் தொழிற்சாலை வளாகத்தில் அதை நிறுவுவது எதிர்பாராத விதமாக தாமதமானது. உலர்த்தி குழாய் மூட்டை 2024 பெப்ரவரி முதல் செயற்பாட்டில் உள்ளது. தற்போது தயாரிப்பு கோழித் தொழிலுக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனினும், எதிர்பார்த்தபடி எத்தனால் உற்பத்தி தொடர்ந்து

செப்தெம்பர் 02 இல் கலப்பு உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

- 2017/2018 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் அறிக்கையின் பிரகாரம் கம்பனியின் தொடர்ச்சியான இழப்புகள் மற்றும் எதிர்மறை தேறிய சொத்துக்களின் நிலை காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு சந்தேகத்திற்குரியதாக உள்ளது. எவ்வாறாயினும், கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு பிரச்சினையை கருத்தில் கொள்ளாமல் வங்கி தொடர்ந்து கடன்களை வழங்கியுள்ளது.

- 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாடிக்கையாளரின் மொத்த நிலுவை மீதி ரூபா 3,417 மில்லியன் ஆகும். மொத்த நிலுவைத் தொகையில், ரூபா 858.6 மில்லியன் அல்லது 25 சதவீதம், இல. 309, கொழும்பு வீதி, வெலிசரவில் அமைந்துள்ள ஈடுவைக்கப்பட்ட சொத்திற்கு எதிராக மாத்திரமே பாதுகாக்கப்பட்டுள்ளது. ரூபா 2,558 மில்லியன் அல்லது

இயங்கவில்லை. கம்பனி விளக்கியவாறு, WMMC இன் விநியோகப் பிரிவுகளாக சகோதர கம்பனிகளான வால்ட் & ரோ அசோசியேட்ஸ் மற்றும் பிசினஸ் புறோசஸ் மனேஜ்மென்ட் பிறைவேட் லிமிட்டட் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட முன்னோக்கிய ஒருங்கிணைப்பு செயன்முறையுடன் பாட்டில் (bottling) செயற்பாட்டை படிப்படியாக மேம்படுத்தும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே உள்ள கடன்களை மறுசீரமைத்த பின்னர் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்வுகூறப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு கோழித் தீவனத்தை கோழித் தொழிலுக்கு விற்பனை செய்தல் மற்றும் வெளித்தரப்பினர்களுக்கு எத்தனோல் விற்பனை செய்தல் ஆகிய இரண்டு முக்கிய வருமான வழிகளையும் கம்பனி கருத்தில் கொண்டிருந்த போதிலும் அது இதுவரை நிறைவேறவில்லை. எனவே, மீள்பட்டியல் கடன்கள் வழக்கமான

75 சதவீத மிகுதி நிலுவை கடன்பட்டோர் மற்றும் இரண்டு பணிப்பாளர்களின் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்கள் மீதான அடமானத்திற்கு எதிராக மாத்திரமே பாதுகாக்கப்படுகிறது.

அடிப்படையில் வழங்கப்படவில்லை. எனினும், கம்பனி அதன் வருமானத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது, மேலும் தற்போது BOC மூலம் ஏறத்தாழ 80% இற்கும் அதிகமான காசுப்பாய்ச்சல் செலுத்தப்பட்டுள்ளது.

2022 செப்தெம்பர் முதல் இன்றுவரை கம்பனி அதன் மாதாந்த காசுப்பாய்ச்சலை பூச்சியத்திலிருந்து ரூபா 660.0 மில்லியன் வரை அதிகரிக்க முடியும். கடந்த ஆறு மாதங்களுக்குள் எமது கணக்குகளுக்கு சராசரியாக மாதாந்தம் ரூபா 660.0 மில்லியன் காசுப்பாய்ச்சல் அனுப்பப்படுகின்ற போதிலும் மதுபான வணிகத்தைத் தடையின்றித் தொடர்வதற்கு உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 55% இற்கும் அதிகமான கொடுப்பனவுகள் கலால் வரி மற்றும் IRD கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே, கம்பனி அவர்களின் வணிக காசுப்பாய்ச்சல்கள்

| | | | |
|---|---|---|---|
| | | | மூலம் நிதியளிக்கப்படுவதால், அவர்களின் விற்பனை கணிசமான அளவிற்கு அதிகரிக்கும் வரை, மீள்பட்டியலிடல் கடன்களுக்கான குறைந்தபட்ச பகுதியை மாத்திரமே அறவிடக் கோரியது. எமது கணக்குகள் மூலம் பெறப்பட்ட விற்பனை வருமானத்திலிருந்து 2024 பெப்ரவரி அளவில் ரூபா 110.0 மில்லியன் என்ற ஒரு முறை கடன் வசதியை கம்பனி தீர்ப்பனவு செய்துள்ளது.<br><br>தற்போது, மாதமொன்றிற்கு ரூபா 45.0 - 47.0 மில்லியனை (கடன்களுக்கான மாதாந்தத் தேவைப்பாடு - ரூபா 60.0 மில்லியன்) அறவிட்டு வருகிறோம், மேலும் 2024 திசெம்பர் அளவில் அறவீட்டை தேவையான அளவிற்கு அதிகரிப்பதற்கு கம்பனி இணங்கியது. |
| 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலான கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான கடன்கள் மற்றும் | 2022 | இலங்கை அரசாங்கம் மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சிகள் (SOEs) இரண்டும் ”அரசாங்கம்” என்ற ஒரே | கருத்துகளுக்கு இணைப்பு I ஐப் பார்க்கவும். |

முன்பணங்களின் மொத்த நிலுவை தொகை கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2019 முதல் 2022 வரை எஸ்.ஓ.இ.க்களின் மொத்த கடன் மற்றும் முன்பண நிலுவை 36.53 சதவீதம் முதல் 45.67 சதவீதம் வரை அதிகரித்து வருகிறது.

2022 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான நிதி அறிக்கையில் அல்லாத பெறுமதிகள் ஐந்தொகைக்கு பின்னரான மீதிகள் (கடன் மீதான கடிதம், ஏற்றுக்கொள்ளல் மற்றும் வங்கி உத்தரவாதங்கள்) ரூபா.197,087 மில்லியன், மேற்குறிப்பிட்ட நிதி அறிக்கையில் அல்லாத பெறுமதியையும் சேர்த்து, அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களின் மொத்த வெளிப்பாடு ரூபா.2,385,602 மில்லியன் பதிவாகியுள்ளதுடன், இது வங்கியின் மொத்த சொத்துக்களில் 62.72 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

இடர் பிரிவை உருவாக்குவதால் அவற்றின் மீட்சியை உன்னிப்பாகக் கண்காணிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

2022 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி முதல் 10 அரச நிறுவனங்களின்

2022

கடன் அபாயத்தைக் குறைப்பதற்கு, அறவீடுகளைப்

2024.06.30 இல் உள்ளவாறு முதல் 10 அரசு சாரா நிறுவனங்களின் வெளிப்பாடு (நேரடி மற்றும் மறைமுக) பின்வருமாறு:

(இலங்கை அரசாங்கம் உட்பட) மொத்த நிலுவைத் தொகை ரூபா.1,026,996 மில்லியன் பதிவாகியுள்ளது, இதில் ரூபா.1,003,725 மில்லியன் மூலதன நிலுவையும், ரூபா.23,271 மில்லியன் வட்டி நிலுவையும் அடங்கும். இது அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கு (இலங்கை அரசாங்கம் உட்பட) சொந்தமான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவையில் 96.31 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே, முதல் 10 வாடிக்கையாளர்களின் முக்கிய சார்பு பின்வருமாறு காணப்பட்டது.

| **நிறுவனம்** | **மொத்த நிலுவை 2022/12/31 இல் (ரூபா. மில்லியன்)** | **பாதுகா ப** |
|---|---|---|
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | 575,958 | திறைசே ரி நட்டஈ பி.எ.ஃப்.ஏ கணக்கில் 100% டாலர் மார்ஜின் |
| வீதி அபிவிருத் | 143,35 | திறைசே ரி |

பின்தொடரவும், பொருத்தமான வரம்புகளைப் பேணவும் பரிந்துரைக்கப்படுகிறது.

(ரூபா. மில்லியனில்)

| | வாடிக்கையாளர் பெயர் | 2024.06.30 இல் உள்ளவாறு வெளிப்பாடு |
|---|---|---|
| 1 | இலங்கை அரசாங்கம் | 487,199.73 |
| 2 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 119,627.46 |
| 3 | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் | 69,326.36 |
| 4 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 56,294.75 |
| 5 | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 42,703.43 |
| 6 | இலங்கை துறைமுக சபை | 41,715.65 |
| 7 | இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் (SPC) | 22,091.46 |
| 8 | ஓய்வூதியத் திணைக்களம் | 19,231.30 |
| 9 | இலங்கை மின்சார சபை | 14,739.24 |
| 10 | இலங்கை விமானப்படைத் தளபதி | 11,183.90 |

## SLAL

SLAL தொடர்ந்து வட்டியை செலுத்துகிறதுடன் வசதிகளின் கணிசமான பகுதி திறைசேரி உத்தரவாதம்/ திறைசேரி ஆறுதல் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

BOC உடனான ஐ.அ.டொலர் 105.0 மில்லியன் மற்றும் இலங்கை ரூபா 12.9 பில்லியன் பெறுமதியான பொறுப்புக்களை இலங்கை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கு 2024.03.04 இல் அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும், இது தொடர்பான எந்த உத்தியோகபூர்வ தகவல்தொடர்பும்

| | | | |
|---|---|---|---|
| தி அதிகாரசபை (RDA) | 0 | உத்தரவாதம் | 149,164 மில்லியன் |
| இலங்கை அரசாங்கம் | 115,502 | கடன் ஒப்பந்தம் | - |
| ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் | 71,473 | காப்பு கடிதம் | ரூபா 49,190 மில்லியன் |
| | | இலங்கை கேட்டரிங் நிறுவனத்தின் பங்குகள் மீதான அடமானம் | ரூபா 67,499 மில்லியன் |
| தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB) | 51,363 | சேமிப்புக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புகள் | ரூபா. 166,822 மில்லியன் |
| ஓய்வூதியத் திணைக்களம் | 18,927 | காப்பு கடிதம் | ரூபா 24,000 மில்லியன் |
| இலங்கை மின்சார சபை (CEB) | 17,241 | Clean | - |
| | | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 5,000 மில்லியன் |
| | | குத்தகைக்கு விடப்பட்ட வாகனங்கள் மீதான | - |

வங்கிக்கு கிடைத்திருக்கவில்லை.

2024.02.14, 2024.04.15, 2024.06.03 மற்றும் 2024.09.18 ஆகிய திகதிகளில் அரசாங்க திறைசேரியில் உரிமைக்கோரல்கள் தாக்கல் செய்யப்பட்டன. அனைத்து கடன்களையும் திருப்பிச் செலுத்துவது 2024.12.31 வரை அல்லது மறுசீரமைப்பு செயன்முறை இறுதி செய்யப்படும் வரை நிறுத்தி வைக்கப்பட்டது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளை தீர்ப்பதற்கு அல்லது நீடிக்கப்பட்ட ஆறுதல் கடிதம் மற்றும் திறைசேரி உத்தரவாதத்தை கிடைக்கச் செய்யக் கோரி 2024.08.22 மற்றும் 2024.09.10 இல் பொதுத் திறைசேரிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

GOSL மற்றும் SOEs மீதான வெளிப்பாட்டைக் குறைப்பதற்கு வங்கி அனைத்து முயற்சிகளையும் எடுக்கும். CPC, CEB, Lanka Coal போன்ற வணிக SOEs அவற்றின் வணிக காசுப்பாய்ச்சலின் அடிப்படையில் நிதியளிக்கப்படுகின்றன.

மேலும், SOEs வழங்கும் கால கடன்கள், வசதிகளை வழங்கும் நேரத்தில் இணங்கப்பட்ட திருப்பிச் செலுத்தும் திட்டத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தீர்க்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்கம்
2023 பாதீட்டின் முன்மொழிவு இல. 42.1 இன் பிரகாரம் திறைசேரி செயலாளர் 2023.02.14 ஆம் திகதிய தனது கடிதத்தின் மூலம், GOSL ஏற்கனவே 2022.12.31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 1,341.19 மில்லியன் (2023.03.31 இல் உள்ளவாறு ரூபா 488.31 பில்லியன்) தொகையை BOC இற்கு CPC இன் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று கடனை கையகப்படுத்தியுள்ளதாக வங்கிக்குத் தெரிவித்திருந்தார்.

| | | | |
|---|---|---|---|
| | | ஒதுக்கீடு | |
| இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 12,284 | பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகளை ஏற்றுக்கொள்வதற்கான காப்பு கடிதம் | ரூபா 5,876 மில்லியன் |
| | | சுத்தமான & BOE/Shipping ஆவணங்கள் | - |
| ஸ்ரீலங்கா டெலிகொம் | 11,651 | Clean | - |
| நெல் சந்தைப்படுத்தல் சபை | 9,246 | திறைசேரி பொறுப்பேற்றல் | - |
| | | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 500,000 மில்லியன் |
| **மொத்தம்** | **1,026,995** | | |

லாசார்ட் (இலங்கை அரசாங்கத்தின் ஆலோசகர்), நிதி அமைச்சு (MOF) மற்றும் CBSL அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள், கூட்டங்கள், பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், வங்கி 2024.06.04 மற்றும் 2024.06.07 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் ST இன் சமீபத்திய மறுசீரமைப்பு முன்மொழிவைப் பெற்றது, மேலும் 2024.06.06 ஆம் திகதிய எமது கடிதத்தின் மூலம் தெளிவுபடுத்தல்களுக்காக பதிலளித்ததுடன் 2024.07.29 ஆம் திகதிய பதில் தலைவரின் கடிதத்தின் மூலம் மேற்கூறிய முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்தது. 2024.08.27 இல் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில், மீண்டெழும் செலவினங்களுக்காக (BOC மற்றும் PB இரண்டிற்கும்) ரூபா 130 பில்லியனை வழங்குவதற்கான பாராளுமன்றத் தீர்மானத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இறுதி செய்யப்பட்ட மறுசீரமைப்பு முன்மொழிவுக்கு அங்கீகாரம் அளித்தனர். மேலும், வரைவு கடன் உடன்படிக்கை 2024.11.09 அன்று பொது கருவூலத்தால் பகிரப்பட்டது, மேலும் அது வங்கியின் கருத்துகள்/எதிர்பார்க்கப்படும் திருத்தங்கள் போன்றவற்றுடன் இலங்கை அரசுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

மேலும், 2024.09.18 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபை அதன் கூட்டத்தில், 2024.06.04 மற்றும் 2024.06.07 ஆம் கடிதங்கள் மூலம், ST பகிர்ந்து கொண்ட மறுசீரமைப்பு கடன் வசதிக்கான ஒப்புதல், 2024.09.13 இல் கடன் குழுவின் பரிந்துரையுடன் பெறப்பட்டது.

**ஸ்ரீலங்கா டெலிகொம் பிஎல்சி**

ஸ்ரீலங்கா டெலிகொம் பிஎல்சி என்பது ஒரு பொது பட்டியலிடப்பட்ட

| | | | |
|---|---|---|---|
| | | | நிறுவனம், இது இலாபம் ஈட்டும் நோக்கில் வணிகத்தை வெற்றிகரமாக நிர்வகித்து வருகிறது. எனவே, கம்பனியின் இலாபம் மற்றும் நிதி நிலைமை ஏற்றுக்கொள்ளத்தக்கது. அரசாங்கத்தின் இந்த வாடிக்கையாளரில் சார்ந்திருப்பது மிகவும் குறைவாகும். |
| 2022 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி முதல் 10 செயல்படாத வாடிக்கையாளர்களின் மொத்த நிலுவைத் தொகை ரூபா.27,781.85 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா.6,001.7 மில்லியன் வட்டி உட்பட ரூபா.33,783.63 மில்லியனாக இருந்தது. இது 31 டிசம்பர் 2022 நிலவரப்படி வங்கியின் மொத்த செயல்படாத கடன்கள் மற்றும் முற்பணங்களில் 28.50 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, அதே நேரத்தில் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 57.5 சதவீத அதிகரிப்பைக் குறிக்கிறது.<br><br>கே.டி.எபர்ட் அண்ட் சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிடெட், அனுதன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிடெட், ருஹுனு டெவலப்மென்ட் கான்ட்ராக்டர்ஸ் & இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிடெட், சிந்தேசி லிமிடெட், டபிள்யூ.எம்.மெண்டிஸ் & கம்பெனி லிமிடெட், ஸ்ரீ எக்யூப்மென்ட் பைனான்ஸ் லிமிடெட் மற்றும் அல்மார் டிரேடிங் கோ | 2022 | எதிர்காலத்தில் கடன்களை வழங்குவதற்கு முன்னர் அறவீடுகளைப் பின்தொடர்ந்து திருப்திகரமான வாடிக்கையாளர் கடன் மதிப்பீடுகளை உறுதி செய்வது பரிந்துரைக்கப்படுகிறது. | **ஸ்ரீ இக்குயுப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட்**<br>SIFL மற்றும் SEFL நிர்வாகியின் CoC கூட்டத்தில் முன்மொழியப்பட்ட தீர்வுத் திட்டங்களுக்கு வாக்களிக்குமாறு கோரப்பட்டது. மேலே உள்ள மூன்று வருங்கால வாங்குபவர்கள் மற்றும் வரைவு கடன் வழங்குநர்கள் வாரியான விநியோகத் திட்டத்திலிருந்து பெறப்பட்ட நிதி முன்மொழிவை மதிப்பீடு செய்த பின்னர், மற்ற மூன்று வரைவுத் தீர்மானத் திட்டங்களில் நஷனல் அசற் றிகென்சிடரேஷன் கம்பனி லிமிட்டட் (NARCL) இடமிருந்து பெறப்பட்ட வரைவுத் தீர்மானத் திட்டத்திற்கு வாக்களிக்க BOC பணிப்பாளர் சபையிடம் அங்கீகாரத்தை பெற்றது.<br><br>அனைத்து கடன் வழங்குநர்களும் வாக்களித்து, அங்கீகரிக்கப்பட்ட தீர்வுத் திட்டமாக நஷனல் அசற் றிகென்சிடரேஷன் கம்பனி லிமிட்டட்டை (NARCL) தெரிவுசெய்தனர்.<br><br>RBI அங்கீகரித்த விநியோகத் திட்டத்தின் படி, இலங்கை வங்கி ஒப்புதல் பெற்ற ECB (வெளிப்புற வணிகக் கடன்கள்) கடன் வழங்குநர்கள் பிரிவின் கீழ் உள்ளது.<br><br>CIRP செயன்முறையின் பிரகாரம் ஐ.அ.டொலர் 2.35 மில்லியன் அறவிடப்பட்டது.<br><br>மிகுதி தீர்மானத் திட்டம் பின்வருமாறு. |

(பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் முறையே 2018,2019,2020,2021 மற்றும் 2022 ஆண்டு முதல் வங்கியின் முதல் 10 செயல்படாத கடன் வாடிக்கையாளர்கள் பட்டியலில் தொடர்ந்து இடம்பிடித்துள்ளன.

மேலும், 2022 டிசம்பர் 31 நிலவரப்படி வங்கியின் முதல் 10 செயல்படாக்கடன் வாடிக்கையாளர்களில் லா.்.ப்ஸ் கேஸ் பிஎல்சி மற்றும் தேஷிகா எம்பிராய்டரி சொல்யூஷன் (பிவிடி) லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் புதிதாக பட்டியலிடப்பட்டுள்ளன.

| இல. | வாடிக்கையாளர்களின் பெயர் | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ எக்யூப்மெண்ட் பைனான்ஸ் லிமிடெட | |
| 2. | சிந்தேசி லிமிடெட் | |
| 3. | கே.டி.எபர்ட் அண்ட் சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | |
| 4. | தோலிய இன்வெஸ்ட்மென்ட் (பிரைவேட்) லிமிட்டெட் | |
| 5. | டபிள்யூ.எம்.மெண்டிஸ் & கம்பெனி லிமிடெட் | |
| 6. | லா.்.ப்ஸ் கேஸ் | |

விருப்ப மாற்றத்தக்க திபெஞ்சர்கள் (OCD) வெளியிடப்பட்டன - INR 349.7 மில் (ஐ.அ.டொலர் 4.19 மில்)

மூலதன பங்குகள்

இந்திய ரூபா 11.3 மில் (ஐ.அ.டொலர் 0.13 மில்)

பெற வேண்டிய மொத்த தொகை ஐ.அ.டொலர் 4.66 மில்

இந்திய ரிசர்வ் வங்கி (RBI) / கடன்கொடுநர் குழு (COC) கூட்டத்திலும், வங்கியின் சார்பாக இலங்கை வங்கி – கரைகடந்த வங்கிப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, கூட்டங்களில் பங்கேற்க அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக கடன் (சென்னை கிளை) சிரேஷ்ட துணைத் தலைவர் திரு. எஸ். ராமானுஜத்தை பணிப்பாளர்கள் நியமிக்க வேண்டும்.

**சின்தேசி லிமிட்டட்:**

ஏற்கனவே தொடங்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளைத் தொடர்தல். பின்வரும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன:

CHC 151/2022/MR - அடுத்த விசாரணை திகதி - 2024.03.07 (நடவடிக்கைகள் மற்றும் நகர்த்தல்கள்)
CHC 153/2022/MR - அடுத்த விசாரணை திகதி - 2024.10.16
CHC152/2022MR - அடுத்த விசாரணை திகதி - 2025.01.27

ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கு எதிராக செயற்படுத்தப்பட்ட பரேட் ஏலத்தின் வருமானத்திற்கான பறிமுதல் உத்தரவைப் பெறும் பணியில் சட்டத் துறை ஈடுபட்டுள்ளது.

**கே டி எல்பேர்ட் & சன்ஸ் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டட்**
புத்துயிர் வாடிக்கையாளர்களை

| | | |
|---|---|---|
| | பிஎல்சி | |
| 7. | அல்மார் டிரேடிங் கோ (பிரைவேட்) லிமிடெட | 2,667.30 |
| 8. | அனுதன் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | 2,614.04 |
| 9. | தேஷிகா எம்பிராய்டரி சொல்யூஷன் (பிவிடி) லிமிடெட் | 2,338.63 |
| 10. | ருஹுனு டெவலப்மென்ட் கான்ட்ராக்டர்ஸ் & இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் | 1,856.74 |
| | **மொத்தம்** | **33,783.63** |

மகிழ்விக்கும் அதே வேளையில், BRRU வழிகாட்டலுக்கு இணங்க, எதிர்வுகூறப்பட்ட சாத்தியமான வணிக செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கடன் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.

**தொழியதூ இன்வெஸ்ட்மென்ட் - மாலி**

வங்கி உத்தரவாததாரர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு அமலாக்க வழக்கை சிவில் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. அமலாக்க நடவடிக்கையின் போது, BML மற்றும் SBI தலையிடுமாறு கேட்டுக்கொண்டன. தற்போது SBI, தொழியதூ தீவுக்கான புதிய மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது, நீதிமன்றம் விரைவில் தீவை விற்பதற்கு முன்கூட்டியே பறிமுதல் செய்யும் உத்தரவை பிறப்பிக்கும்.

ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா (உதவி துணைத் தலைவர் - கடன்) தற்போதைய நிலையை பின்வருமாறு மின்னஞ்சல் மூலம் புதுப்பிக்கிறது.

நீதிமன்றத் தீர்ப்பின் படி, SBI உள்ளூர் செய்தித்தாள் ”மிஹாரு” மற்றும் வலைத்தளத்தில் 2024.09.03 முதல் 2024.10.15 வரை ஏல அறிவிப்பை வெளியிட்டதுடன் SBI வலைத்தளத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பையும் வெளியிட்டது.

**டபிள்யூ எம் மெண்டிஸ் & கம்பனி லிமிட்டட்**

மேற்படி பந்தி 3 இல் விளக்கமளிக்கப்பட்டவாறு தற்போது, மாதமொன்றிற்கு ரூபா 45.0 - 47.0 மில்லியனை (கடன்களுக்கான மாதாந்த தேவைப்பாடு -ரூபா 60.0 மில்லியன்) அறவிடுகிறோம். தற்போதுள்ள வசதிகளை மறுசீரமைத்த பின்னர் வணிககாசுப்பாய்ச்சல் எமது

கணக்குகள் மூலம் செலுத்தப்பட்டதால், 2024.10.13 இல் உள்ளவாறு மூலதனமாக ரூபா 75.06 மில்லியனையும், வட்டியாக ரூபா 365.0 மில்லியனையும் அறவிட்டுள்ளோம்.

**M/S லாஹற்ப்ஸ் காஸ் பிஎல்சி**

1. அரசாங்கத்தால் LPG விலைகள் கட்டுப்படுத்தப்பட்டதால் நிறுவனத்தின் வணிக காசுப்பாய்ச்சல் பாதிக்கப்பட்டது. எனவே 2021 ஒக்தோபர் முதல் LPG இன் நுகர்வோர் விலைகள் சந்தை சக்திகளால் மாத்திரமே தீர்மானிக்கப்படுகின்றதுடன் அதிகாரிகளின் ஒழுங்குமுறை கட்டுப்பாடுகள் இல்லாமல் உள்ளன.
2. இரண்டாவது வழியைக் கருத்தில் கொள்வதற்கு முன்னர், வணிக காசுப்பாய்ச்சலிலிருந்து NPA வசதிகளை மீட்டெடுக்கும் பணியில் வங்கி ஈடுபட்டிருந்தது. தேவையான மேலதிக காசுப்பாய்ச்சலை வழங்குவதன் மூலம் NPA தீர்வுக்கு வாடிக்கையாளர் நேர்மறையாகக் கடைப்பிடிக்கப்பட்டார்.
3. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், கம்பனி ரூபா 3,480.36 மில்லியன் NPA நிலுவையை கொண்டிருந்ததுடன் கம்பனியால் 2024 மே மாதமளவில் மொத்த NPA ஐ படிப்படியாக தீர்க்க முடிந்திருந்தது.

| வசதி வகை | 2022.12.31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள (மூலதனம்) NPA (ரூபா. மில்லியன்) | 2024.05.15 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள (மூலதனம்) NPA (ரூபா. மில்லியன்) |
|---|---|---|
| இறக்குமதி | 832.89 | இல்லை |

| | | |
|---|---|---|
| கடன்/ BLR | | |
| காலக்கடன் | 2,634.07 | இல்லை |
| மேலதிகப்பற்று | 13.38 | இல்லை |
| மொத்தம் | 3,480.36 | இல்லை |

4. இன்றைய திகதியில் (2024.10.15) உள்ளவாறு கம்பனியின் அனைத்து வசதிகளும் வழக்கமான பிரிவில் உள்ளன, நிலுவைகள் எதுவும் பதிவு செய்யப்படாததுடன் தீர்ப்பனவுகள் திருப்திகரமாக உள்ளன.
5. சாதகமான சந்தை நிலைமைகளின் கீழ், கம்பனி அதன் தயாரிப்புக்களை செலவு குறைந்த விலையில் விற்க வாய்ப்பு உள்ளது, இது அதன் வருமான உருவாக்கம் மற்றும் இலாபத்தை வலுப்படுத்தும். இறுதியில் இது கடன் வசதிகளை திருப்திகரமான முறையில் தீர்ப்பதை உறுதிப்படுத்தும்.
6. கம்பனிக்கு வழங்கப்பட்ட வசதிகளையும், அவற்றை சரியான நேரத்தில் தீர்ப்பதையும் உறவுக் குழு கண்டிப்பாகக் கண்காணித்து வருகிறது.

**அல்மார் டிரேடிங் கோ. (பிறைவேட்) லிமிட்டட்**

வழக்கு இலக்கங்கள் CHC/21/2024/MR CHC/22/2024/MR மற்றும் CHC/23/2024/MR ஆகியவற்றின் கீழ் ஐ.அ.டொலர் 5.5 மில்லியன் பெறுமதியான வசதிக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது

2024.12.06 இல் வழக்கு இலக்கங்கள் CHC/21/2024/MR மற்றும் CHC/22/2024/MR இற்கான விசாரணைக்காக முந்தைய அழைப்பு.

வழக்கு இல. CHC/23/2024/MR இற்கான விசாரணைக்காக முந்தைய அழைப்பு திகதி 2025.01.27 இல் நிர்ணயிக்கப்பட்டது.

மற்ற வசதிகளுக்கான கோரிக்கை

கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன, மேலும் கடன் அறவீடு / பண அறவீட்டு நடவடிக்கையின் கீழ் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**அனுதன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்:**
கம்பனி யூன், யூலை, ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களுக்கு ரூபா 8.0 மில்லியனை வைப்பு செய்துள்ளது (ஒவ்வொரு மாதத்திற்கும் ரூபா 2.0 மில்லியன்). TOD வசதி வட்டி சலுகையுடன் முழுமையாக அறவிடப்பட்டுள்ளது.

பொது முகாமையாளருடன் கலந்துரையாடி, வணிகத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை இப்போது தேடுகிறேன். மீண்டும் உயிர்ப்பிக்க முடியாவிட்டால், வங்கி வெளியேறும் உத்தியைப் பின்பற்றும்.

**தேஷிகா எம்பிராய்டரி சொல்யூஷன் (பிறைவேட்) லிமிட்டட்**
வசதி 1-5 - 2024.12.15 இற்குப் பின்னர் மீண்டும் தொடங்கப்பட வேண்டிய பரேட் நடவடிக்கைகள்
வசதி 6-8 – இல, 4319/2024/DMR மற்றும் 4320/2024/DMR மீதான மொரட்டுவ மாவட்ட நீதிமன்ற வழக்கு கோவைகள்
வசதி 9 - வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.
வசதி 10 - கொழும்பில் உள்ள வணிக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது (விசாரணைக்கு முந்தைய நிலை)

**ருஹுணு டெவலப்மென்ட் கொன்ட்ரக்ரேர்ஸ் & எஞ்சினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்**
புத்துயிர் பெறும் வாடிக்கையாளர்களை மகிழ்விக்கும் அதே வேளையில், BRRU வழிகாட்டலின் பிரகாரம் எதிர்வுகூறப்பட்ட சாத்தியமான வணிக செயலாற்றலின் அடிப்படையில்

பொருத்தமான கடன் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.

2022 ஆம் ஆண்டில் கடன் வழங்கப்பட்டு [illegible] (மறுசீரமைக்கப்பட்ட வசதிகளில் நீங்கலாக) என்பிஎல் மாற்றப்பட்ட முதல் 10 செயல்படாக் கடன் வாடிக்கையாளர்களின் மொத்த நிலுவைத் தொகை 31 டிசம்பர் 2022 ரூபா.1,555.66 மில்லியனாக இருந்தது. இது 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மற்றும் என்பிஎல் பிரிவுக்கு மொத்த நிலுவையில் உள்ள கடன்களில் 73.5 சதவீதத்தைக் குறிக்கிறது (மறுசீரமைக்கப்பட்ட வசதிகளைத் தவிர).

| வாடிக்கையாளர்களின் பெயர் | 31 டிசம்பர் 2022 இன்படி | | |
|---|---|---|---|
| | கடன் தொகைகளின் எண்ணிக்கை | 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன் (ரூபா. மில்லியன்) | 31.12.2022 நிலுவையில் உள்ள மொத்தத் தொகை (ரூபா. மில்லியன்) |
| டிரெண்ட் செட்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட | 5 | 951.12 | 979.79 |
| நவலோக பைலிங் (பிரைவேட்) லிமிட்டெட் | 10 | 131.50 | 138.58 |
| எம்ஜி கன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | 4 | 121.20 | 137.68 |
| அக்ஸோர்ன் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட | 12 | 83.52 | 95.53 |
| எஃப்ஜபிசி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் | 6 | 59.71 | 63.46 |
| திரு.பி.கே.ஜயதிலக | 1 | 35.00 | 39.51 |
| வயாம்ப லங்கா கொக்கோ (பிரைவேட்) லிமிட்டெட் | 1 | 27.77 | 30.84 |

2022 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் வங்கியால் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

மாதாந்த அடிப்படையில் வழங்கப்பட்ட திகதியிலிருந்து முதல் ஆறு மாதங்களுக்குள் NPCEs ஆகக் கருதப்படும் வசதிகளைப் அறிக்கையிட்டு மதிப்பீடு செய்வதற்கான ஒரு வழிமுறையை அமுல்படுத்துவதற்கு 2022.05.25 இல் நடைபெற்ற கூட்டுத்தாபன முகாமைத்துவக் குழுவின் (CMC) அங்கீகாரம் அதன் கூட்டத்தில் பெறப்பட்டுள்ளது.

அதன்படி, மாதாந்த அடிப்படையில் கடன் குழுவிற்கு குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

சில்லறை வாடிக்கையாளர்களின் மதிப்பீடுகள் மற்றும் கடன்வழங்கல்கள் தொடர்புடைய கடன் பிரிவுகளால் (கிளை கடன் வரம்பு 1, வரம்பு 11) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும், NPA பிரிவுக்கு மாற்றப்பட்ட பின்னர், கூறப்பட்ட முதல் 10 இடங்களில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு சாத்தியமான அனைத்து அறவீட்டு நடவடிக்கைகளும் நடைமுறைகளும் பின்பற்றப்பட்டுள்ளன.

**டிரென்ட் செற்றேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**

டிரென்ட் செற்றேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் ஆயத்த ஆடைகளை உற்பத்தி செய்வதிலும் ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டுள்ளது. கொவிட்-19 தொற்றுநோய்க்கு முன்னர் நிதி நெருக்கடி சூழ்நிலையின் கீழ் கம்பனியால் வணிகத்தை நிர்வகிக்க முடிந்தது. எனினும், வழக்கமான வாங்குபவர்களிடமிருந்து அவர்களின் மெலிந்த காலத்திற்கு போதுமான கட்டளைகளைப் பெற்றுக்கொள்ள கம்பனியால் முடியவில்லை. எனவே கம்பனி 2022 ஒக்தோபர் முதல் அதன்

| | | | |
|---|---|---|---|
| ஏஎம்எஸ்கே கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | 2 | 22.96 | 27.12 |
| திரு.பி.ஏ.ஜய சேகர | 1 | 20.50 | 21.93 |
| திரு.எம்.எ.்.ப ்.நிரோஷன் பெர்னாண்டே டா | 1 | 19.78 | 21.22 |
| **மொத்தம்** | | **1,473.06** | **1,555.66** |

செயற்பாடுகளை நிறுத்தியது. போதுமான காசுப்பாய்ச்சலின்மை காரணமாக கம்பனி வங்கி வசதிகளுக்கு உடனடியாக சேவை செய்யத் தவறிவிட்டது, மேலும் கடன் வசதிகள் 2022.10.30 முதல் NPA பிரிவுக்கு மாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கம்பனியின் நிலுவையாக உள்ள கடன்களைத் தீர்ப்பதற்காக வங்கி கம்பனி அதிகாரிகளுடன் பல பேச்சுவார்த்தைகளை நடாத்தியது. இதற்கிடையில், கம்பனி ஏற்கனவே 2024.07.16 இல் ரூபா 80.0 மில்லியன் பெறுமதியான அனைத்து LKR வசதிகளையும் தீர்த்து வைத்தது. மேலே குறிப்பிடப்பட்ட தீர்வு மூலம் ஏற்கனவே தீர்க்கப்பட்ட அதே ஆண்டில் ரூபா 14.65 மில்லியன் பெறுமதியான ஒரு கடன் NPA ஆக மாற்றப்பட்டது.

மீதமுள்ள பிற வசதிகளுக்கான கோரிக்கை கடிதங்கள் மற்றும் இறுதி அறிவிப்புகளை வங்கி ஏற்கனவே அனுப்பியுள்ளது.

**நவலோகா பைலிங் (பிறைவேட்) லிமிட்டட்**

2022 ஆம் ஆண்டில், கம்பனி ரூபா 150.0 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட தொடர் கடன் வசதியின் கீழ் 10 வசதிகளைப் பெற்றுள்ளது. அந்தக் காலப்பகுதியில் கம்பனி ஆற்றிய செயற்திட்டத்தின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக, செயற்திட்டத்தின் வருமானத்தை வங்கிக்கு ஒதுக்குவதன் மூலம் வங்கி அந்த வசதிகளை வழங்கியுள்ளது. நாட்டின் மன அழுத்த சூழ்நிலை காரணமாக, கம்பனியால் பாதிடப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாதிருந்ததுடன் வங்கி வசதிகளை தீர்ப்பனவு செய்ய முடியவில்லை. வணிகச் சொத்துக்கள் மீதான அடமானதாரரின் பாதுகாப்பிற்கு எதிராக பொருள்

வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. வசதிகளை திருப்பிச் செலுத்துவதற்கான தீர்வைக் கண்டறிவதற்கு வங்கி கம்பனியுடன் பலமுறை பேச்சுவார்த்தை நடாத்தியது, ஆனால் அதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைக் காண முடியவில்லை. எனவே, மீட்பு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு அனைத்து வசதிகளும் 2024 செப்தெம்பரில் கூட்டுத்தாபன அறவீட்டு பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளன.

**எம்ஜீ கென்சல்ரன்ற் (பிறைவேட்) லிமிட்டட்**

அங்கீகரிக்கப்பட்ட விலைப்பட்டியல் கழிவிடல் வசதியின் கீழ் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு இந்த வசதிகள் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளன. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொடுப்பனவில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, இணங்கப்பட்ட காலப்பகுதியினுள் கம்பனியால் அதை தீர்க்க முடியவில்லை. 4 வசதிகளில், வாடிக்கையாளர் வணிக வருமானத்தைப் பயன்படுத்தி 2 வசதிகளை தீர்த்து வைத்துள்ளார், மேலும் மற்ற இரண்டு வசதிகளுக்கு பகுதி தீர்வு செய்துள்ளார். மீதமுள்ள ரூபா 49.3 மில்லியன் மூலதன நிலுவை மற்றும் ரூபா 23 மில்லியன் திரண்ட வட்டி என்பன 2024.06.26 இல் மறுசீரமைக்கப்பட்டுள்ளன, மேலும் 2024.10.15 இல் உள்ளவாறு வாடிக்கையாளர்களுக்கு 03 தவணைகளாக சேவை செய்யப்பட்டுள்ளது, மேலும் தவணைகளில் எந்த நிலுவையும் காணப்படவில்லை.

**ஆக்சோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்**

இன்னும் மறுமலர்ச்சி செயற்பாட்டில் உள்ள வணிகத்தை மீண்டும் தொடங்குவதற்கு 2023.12.27 இல் தொடர்புடைய பிரதிநிதி அதிகாரிகளின் அங்கீகாரத்துடன்

மறுமலர்ச்சி பொதி வழங்கப்பட்டது.

**FIBC லங்கா (பிறைவேட்) லிமிட்டட்**
வழக்கமான பிரிவில் வாடிக்கையாளர்.

**பி.கே. ஜயதிலகே**
வசதி தீர்க்கப்பட்டுள்ளது.

**வயப லங்கா கொகோ (பிறைவேட்) லிமிட்டட்**
வசதி மீள்பட்டியலிடப்பட்டுள்ளதுடன் வாடிக்கையாளர் கடனை செலுத்துகிறார்.

**AMSK கென்ஸ்ரக்சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**
இது RDA ஆல் நடாத்தப்படும் 100,000கிமீ நிகழ்ச்சித்திட்ட வீதி செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஒரு விலைப்பட்டியல் கழிவிடல் கடன் ஆகும். விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவு RDA ஆல் 9 மாதங்களுக்கும் மேலாக தாமதப்படுத்திவிட்டதால், கடன் NPA இற்கு மாற்றப்பட்டுள்ளது. எனினும், நிதி பெறப்பட்டுள்ளதுடன் தலைப்பு கடன்கள் ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளன.

**திரு. பி.ஏ. ஜெயசேகர**

கொவிட் 19 தொற்றுநோய் காலத்திற்குள் வாடிக்கையாளரின் பணிப்பாளர் கட்டணம் கணக்கிற்கு வராததால் கடன்கள் NPA இற்கு மாற்றப்பட்டன. இருப்பினும், தலைப்பு கடன் உட்பட வாடிக்கையாளர் அவருக்கு வழங்கப்பட்ட அனைத்து கடன்களையும் முழுமையாக செலுத்திவிட்டார்.

**எம்.எவ். நிரோஷன்.பெர்னாண்டோ**

வாடிக்கையாளர் கடன் தவணையை செலுத்துகிறார்.

| | | | |
|---|---|---|---|
| நிதி கொடுக்கல் வாங்கல் அறிக்கை சட்டம், 2006 இன் இல. 6 இன் கீழ் மேற்படி | 2022 | தொடர்புடைய பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். | • நிதி புலனாய்வுப் பிரிவிலிருந்து (FIU) புதிய தடைப் பட்டியல்(கள்) அல்லது தடைப் பட்டியலில் திருத்தங்கள் குறித்த அறிவிப்பைப் |

ஒழுங்குமுறையின்படி அனைத்து வர்த்தக உறவுகளிலிருந்தும் வாடிக்கையாளரை அடையாளம் காணத் தவறிய காரணத்திற்காக இலங்கை மத்திய வங்கி 13 அக்டோபர் 2022 அன்று ரூபா.3 மில்லியன் அபராதம் விதித்தது.

பெற்றவுடன், அனைத்து நிதிகளையும் மற்ற நிதி சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்களையும் முடக்குவதற்கு முறையான பொறிமுறை அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.

- புதிய வாடிக்கையாளர்களை சேர்க்கும்போது, தடைப் பட்டியலுக்கு எதிராக நிகழ்நேரத் திரையிடல் டவ் ஜோன்ஸ் தரவு ஊட்டத்தைப் பயன்படுத்தி வங்கியின் ஆவண முகாமைத்துவ முறைமை (DMS) மூலம் Clari5 முறைமையால் செய்யப்படுகிறது.

- எந்த நேரத்திலும் எந்த வாடிக்கையாளரையும் திரையிடும் வசதி முறைமையில் கிடைக்கிறதுடன் அனைத்து கிளைகள்/ வணிக அலகுகளின் பயனர்களுக்கும் அத்தகைய வசதி உள்ளது.

- தடைப் பட்டியலின் ஒவ்வொரு புதுப்பிப்புக்கும் பின்னர், வங்கி ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர் தரவுத்தளத்தின் கையேடு மற்றும் அரை தானியங்கி திரையிடலை நடாத்துகிறது, மேலும் அடையாளம் காணப்பட்ட அனைத்து வணிக உறவுகளும் உடனடியாக முடக்கப்படுகின்றன.

- அதே நேரத்தில், DMS மூலம் அடையாளம் காணப்பட்ட தடை தரப்பினருக்கு புதிய கணக்குகளைத் திறப்பதைத் தவிர்ப்பதற்கான பொறிமுறை உள்ளது.

- தடை கணக்குகளைக் கையாளும் தொடர்புடைய இணக்க பதவியணியினர் தவிர அனைத்து பதவியணி உறுப்பினர்களுக்கும் அணுகல் குறியீடு கட்டுப்பாடுகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் அனுமதிக்கப்பட்ட கணக்குகள்

மற்றும் அவற்றின் CIFs இன் அணுகல் மற்றும் மாற்றங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

- ஏதேனும் புதிய உறவுகள் உருவாக்கப்பட்டால் அவற்றை அடையாளம் காண்பதவற்கு, உள்ளூர் தடைப் பட்டியலுக்கு எதிராக ஒரு தடைக்குப் பிந்தைய சரிபார்ப்பு பொறிமுறை நடைமுறையில் உள்ளது.

- அடுத்த நாள் தடை தரப்பினரின் கணக்கு வழியாக நடாத்தப்படும் எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களையும் பதிவு செய்வதற்கு விசேட கொடுக்கல்வாங்கல் கண்காணிப்பு முறைமை நிறுவப்பட்டுள்ளது.

- அனைத்து தொடர்புடைய உள்ளூர் மற்றும் சர்வதேச தடைப் பட்டியல்களும் வங்கியின் உள்-வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன, இதில் அனைத்து பதவியணி உறுப்பினர்களுக்கும் அணுகல் கிடைக்கிறது.

- தேவையை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு, அனைத்து வாடிக்கையாளர் சேவை முறைமைகளின் ஒருங்கிணைப்புடன் விரிவான AML தீர்வு தேவைப்படுகிறதுடன் வங்கி பெறுகை செயன்முறையில் உள்ளது.

- மேற்படி முறைமை நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, இலக்கு வைக்கப்பட்ட நிதித் தடைகள் மற்றும் அனுமதி சரிபார்ப்பு முக்கிய தொகுதிகளாக இருக்கும் பதவியணி உறுப்பினர்களுக்கான இணக்க பிரிவு பௌதீக மற்றும் ஒன்லைன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகிறது. இலக்கு வைக்கப்பட்ட நிதித் தடைகளுக்கான முறைமைகள் மற்றும் நடைமுறைகள்

| | | | |
|---|---|---|---|
| | | | நடைமுறையில் இருப்பதை உறுதிசெய்வதற்கு உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வு நடாத்தப்படும். |
| 31 டிசம்பர் 2022 இன் படி "போலி காசோலைகள் மற்றும் மோசடிகள் மீதான இருப்பு" கணக்கில் ரூபா 78.5 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது.<br><br>11 நவம்பர் 2022 அன்று இறந்த வாடிக்கையாளருக்குச் சொந்தமான இல. 88380782 கொண்ட சேமிப்புக் கணக்கிலிருந்து ரூபா.65 மில்லியன் மோசடியாகப் பணம் எடுக்கப்பட்டது.<br><br>தொடர்புடைய கணக்கு பல முறை விசாரிக்கப்பட்டது மற்றும் பெரும்பாலான விசாரணைகள் தனிப்பட்ட கிளையிலிருந்து கேட்கப்பட்டது. காசாளரியின் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி 12 செப்டம்பர் 2022 அன்று ரூபா.95 மில்லியன் ரொக்கம் நிறுத்தி வைக்கப்பட்டு, புதிய பாஸ்புதாகம் வழங்கப்பட்டு, சந்தேகத்திற்கிடமான கேஷ் டெல்லர் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி பதியப்படட்டுள்ளது. பாஸ்புத்தக இருப்பு கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் இந்த மோசடி செயலுக்கு பங்களித்துள்ளன. ரூபா.65 மில்லியன் | 2022 | உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் மற்றும் அவற்றின் இணக்கத்தை கண்காணிக்க பொறிமுறை தேவை. | கூறப்பட்ட சம்பவம் குறித்து உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் புலனாய்வுத் துறையால் விசாரணைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, வங்கியின் ஒழுங்குமுறை அதிகாரசபையின் விசாரணைகளுக்குப் பின்னர் தொடர்புடைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br><br>மேலும், புலனாய்வுத் துறை 26 ஊழியர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கும், விசாரணை அறிக்கை மூலம் 1.0 மில்லியனுக்கும் அதிகமான கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கப்பட்ட அதிகார வரம்புகள் குறித்து பொருத்தமான முடிவை எடுப்பதற்கும் பரிந்துரைத்துள்ளது.<br><br>மத்திய வங்கி கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட பொதுவான குறைபாடுகள் குறித்து மாகாண அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.<br><br>மாகாண மட்டத்தில் உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறையை வலுப்படுத்துவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>• தொகுதி ICOs ஐ கண்காணிப்பதற்கு மாகாண மட்டத்தில் கிளை ஒழுங்குமுறை மேற்பார்வை அதிகாரிகளாக உத்தியோகத்தர்களை அறிமுகப்படுத்துதல்.<br>• கிளையின் தரத்திற்கு ஏற்ப தொகுதி உள்ளக கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களை வலுப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| திரும்பப் பெறுதல் தனிநபர் கிளையில் பணம் செலுத்துபவர் (PF எண். 219338) மூலம் எடுக்கப்பட்டது மற்றும் மீளப்பெறலுக்கான A வகுப்பு அல்லது B வகுப்பு கையொப்பம் பெறுவதற்கான சீட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. பணம் செலுத்துபவர் தனது கடவுச்சொல்லையும், “A” வகுப்பு அதிகாரிகளின் கடவுச்சொல்லையும் மேலெழுதுவதற்காகப் பயன்படுத்தியுள்ளார் மற்றும் சுற்றறிக்கை எண். 116/2006 ன்படி பெற்றோர் கிளைக்கு இந்தப் பணத்தைப் பெறத் தவறிவிட்டார். இந்த சம்பவத்தின் மூல காரணம், கடவுச்சொல் கட்டுப்பாடு போன்ற அடிப்படைக் கட்டுப்பாடு உள்ளிட்ட விதிகளை பின்பற்றாததுதான். | | | |
| **செயல்படாத பணியாளர் கடன்**<br><br>30 ஏப்ரல் 2023 நிலுவையில் உள்ள ஊழியர்களின் செலுத்தாத கடன்களின் மொத்த நிலுவைத் தொகை ரூபா.248.6 மில்லியன் ஆகும். வயதுப் பகுப்பாய்வின்படி, ஊழியர்களின் கடன் நிலுவை ரூபா.28.7 மில்லியன், ரூபா.54.9 மில்லியன் மற்றும் ரூபா.165 மில்லியன் ஆகியவை முறையே | 2022 | மீட்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். | சட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட மீட்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன, மேலும் 2023 ஏப்ரல் 30 முதல் செயற்பாடற்ற பதவியணியினரின் கடன்களிலிருந்து ரூபா 42,983,376.84 ஐ வங்கி அறவிட்டுள்ளது.<br><br>பின்வருமாறு அறவிடப்பட்டது:<br><br>**1 வருடத்திற்கு மேல்**<br>ரூபா 23,495,989.16<br><br>**2 வருடத்திற்கு மேல்**<br>ரூபா 6,047,711.19<br><br>**3 வருடத்திற்கு மேல்**<br>ரூபா 13,439,676.49 |

ஒரு வருடத்திற்கும் குறைவாகவும், ஒன்று முதல் இரண்டு வருடங்கள் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் திரும்பப் பெறாமல் நிலுவையில் உள்ளன.

மொத்தம்- ரூபா 42,983,376.84

2018 முதல் 2022 வரையிலான கடந்த ஐந்து ஆண்டுகளில் தள்ளுபடி செய்யப்பட்ட தொகைகள் மற்றும் தள்ளுபடி நிலுவைகளிலிருந்து மீட்டெடுப்புகளின் பகுப்பாய்வு பின்வருமாறு.

| **ஆண்டு** | **தள்ளுபடி செய்யப்பட்ட தொகை (ரூபா. மில்லியன்)** | **வருடத்தின் போது மீட்கப்பட்ட தொகை (ரூபா. மில்லியன்)** |
|---|---|---|
| 2018 | 35.50 | 47.65 |
| 2019 | 710.30 | 36.50 |
| 2020 | 5.63 | 57.03 |
| 2021 | 73.73 | 1.66 |
| 2022 | 13.61 | 0.65 |
| **Total** | **838.77** | **143.48** |

- வங்கியின் கடந்த ஐந்தாண்டுகளுக்கான தள்ளுபடியின் திரட்டப்பட்ட தொகை ரூபா.838.77 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது, மேலும் இதில் 2019 ஆம் ஆண்டில் டான்டோன்ட் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்குச்

2022

அறவீடுகள் பின்தொடரப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தைகள், வழக்குகள் மற்றும் சொத்து மீட்பு மூலம் NPCFs ஐ மீட்டெடுக்க வங்கியின் மீட்புப் பிரிவுகள் ஒவ்வொரு முயற்சியையும் எடுக்கின்றன.

அனைத்து நடவடிக்கைகளும் தோல்வியடைந்தால், வங்கி கடன் பதிவழிப்பு கொள்கையின்படி, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வசதிகளை பதிவழிப்பு செய்யும்,

- கடன் வாங்கியவர்/உத்தரவாததாரர்களின் பெயர்கள் இயல்புநிலை பதிவுகள் மற்றும் கடன் தகவல் பணியகத்தில் தக்கவைக்கப்பட வேண்டும்
- இந்த கடன் தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களை வசூலிக்க வங்கி எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும்.
- கடன் பதிவழிப்பு எந்த சூழ்நிலையிலும் கடன் வாங்கியவருக்கோ அல்லது வேறு எந்த தரப்பினருக்கோ வெளியிடப்படாது.

| | | | |
|---|---|---|---|
| சொந்தமான ரூபா.616.46 மில்லியனின் அதிகபட்ச தள்ளுபடி நிலுவைத் தொகையும் அடங்கும்.<br>- 2020 ஆம் ஆண்டைத் தவிர கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் தள்ளுபடி நிலுவைகளிலிருந்து மீளப்பெறுவது படிப்படியாகக் குறைந்துள்ளது மற்றும் கிரெடிட் கார்டு மையத்தைத் தவிர, 2022 ஆம் ஆண்டில் தள்ளுபடி வசதிகளிலிருந்து மீளப்பெறவில்லை. | | | |
| 2014 இலங்கை வங்கியின் கொள்முதல் கையேட்டின் வரையறையின்படி, "சேவைகள் என்பது ஆலோசனைச் சேவைகளைத் தவிர மற்ற சேவைகளைக் குறிக்கிறது". எவ்வாறாயினும், வங்கிக்கான ஆலோசனை சேவையை வாங்குவதற்கு எந்த உள்ளக வழிகாட்டுதலும் உருவாக்கப்படவில்லை. அதன் மூலம், 2007 ஆம் ஆண்டில் தேசிய கொள்முதல் முகமை (NPA) ஆலோசகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் வேலைவாய்ப்பிற்கும் வழங்கிய தனி | 2022 | வங்கிக்கான வழிகாட்டலைத் தயாரிக்க வேண்டும் அல்லது NPA வழிகாட்டலைப் பயன்படுத்த வேண்டும். | தற்போது ஆலோசகரைத் தெரிவுசெய்வதற்கு தேசிய பெறுகை முகவராண்மை (NPA) வழிகாட்டலைப் பயன்படுத்துகிறதுடன் நிதி அங்கீகாரத்திற்காக இலங்கை வங்கியின் பெறுகை கையேட்டின் அதிகார நிலைகளைப் பயன்படுத்துகிறது.<br><br>மேலும் இது 2025 ஆம் ஆண்டுக்கான புதுப்பித்தலின் போது பெறுகை கையேட்டில் சேர்க்கப்படும். |

வழிகாட்டுதலை வங்கி பின்பற்ற வேண்டும். இருப்பினும், வங்கிக்கு சொந்தமான வழிகாட்டுதல்கள் இல்லாவிட்டாலும், அந்த வழிகாட்டுதல்களை வங்கி பின்பற்றவில்லை.

திறைசேரியின் பிரதிச் செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை அரசாங்கம், ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை அரசாங்கம் (USD வசதி), தேசிய நீர் சபை, ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை மின்சார சபை, லங்கா கோல் கம்பனி பிறைவேட், அரச மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதல் 10 அரசுக்கு சொந்தமான நிறுவனங்களாக (SOEs) இனங்காணப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை மீதி ரூபா 890,125.58 மில்லியனாக இருந்தது, இதில் ரூபா 868,321.60 மில்லியன் மூலதன நிலுவையும், ரூபா 21,803.98 மில்லியன் நிலுவை வட்டியும் உள்ளடங்குகிறது. இது இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு (SOEs) சொந்தமான மொத்த நிலுவையிலுள்ள

2023

வங்கியின் ஆபத்து விருப்பத்திற்கு ஏற்ப, GOSL மற்றும் SOEs இற்கான கடன்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவில் இருப்பதை உறுதிசெய்தல்.

கடன் அபாயத்தைக் குறைப்பதற்கும், காசுப்பாய்ச்சல், வருமானம் மற்றும் மூலதனத்தை ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு மேல் திருப்திகரமான மட்டங்களில் பேணுவதற்கும், அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கடன் வசதிகள் சரியான நேரத்தில் தீர்ப்பனவு செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கு, அவற்றை உன்னிப்பாகக் கண்காணித்து பின்தொடர்வதற்கு

இலங்கை அரசாங்கம் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்கள் மீதான வெளிப்பாட்டைக் குறைக்க வங்கி அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் CPC, CEB, லங்கா கோல் போன்ற வணிக அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வணிக காசுப்பாய்ச்சல்களின் அடிப்படையில் நிதியளிக்கப்படுகின்றன.

மேலும், உடமையாக்கப்பட்ட நிறுவனங்கள் நிறுவனங்கள் வழங்கும் கால கடன்கள், வசதிகளை வழங்கும் நேரத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட திருப்பிச் செலுத்தும் திட்டத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தீர்க்கப்படுகின்றன.

2024.06.30 இல் உள்ளவாறு முதல் 10 அரசு உடமையாக்கப்பட்ட நிறுவனங்களின் வெளிப்பாடு (நேரடி மற்றும் மறைமுக) பின்வருமாறு:

(ரூபா. மில்லியனில்)

| | **வாடிக்கையாளரின் பெயர்** | **2024.06.30 இல் உள்ளவாறு வெளிப்பாடு** |
|---|---|---|
| 1 | இலங்கை அரசாங்கம் | 487,199.73 |
| 2 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 119,627.46 |
| 3 | இலங்கை ஏர்லைன்ஸ் லிமிட்டட | 69,326.36 |
| 4 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 56,294.75 |
| 5 | தேசிய நீர் வழங்கல் மற்றும் | 42,703.43 |

கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதியில் இருந்து 94.81 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே, முக்கிய பத்து GOSL & SOE வாடிக்கையாளர்களின் மீது ஒரு முக்கிய சார்பு உள்ளது.

| நிறுவனம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி ரூபா. மில்லியன் | பிணை |
|---|---|---|
| திறைசேரியின் பிரதிச் செயலாளர் (CPC கடனை மாற்றிய பின்) | 435,060.95 | கடன் உடன் க்கை |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை | 136,382.12 | திறை( உத்த ாதம்<br>நிலை ன வைப்ட கள் |
| இலங்கை அரசாங்கம் (USD வசதி) | 78,094.30 | நிபந்த னயற் |
| இலங்கை எயார்லைன்ஸ் | 69,492.19 | திறை( உத்த ாதம்<br>ஆறுத கடிதம்<br>ஸ்ரீ லங்கஎ கேட்ட லிமிட் |

பரிந்துரைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | வடிகாலமைப்பு சபை | |
| 6 | இலங்கை துறைமுக அதிகாரசபை | 41,715.65 |
| 7 | அரச மருந்துக் கூட்டுத்தாபனம் (SPC) | 22,091.46 |
| 8 | ஓய்வூதியத் திணைக்களம் | 19,231.30 |
| 9 | இலங்கை மின்சார சபை | 14,739.24 |
| 10 | இலங்கை விமானப்படைத் தளபதி | 11,183.90 |

## SLAL

SLAL தொடர்ந்து வட்டியை செலுத்துகிறதுடன் வசதிகளின் கணிசமான பகுதி திறைசேரி உத்தரவாதம்/ திறைசேரி ஆறுதல் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

BOC உடனான ஐ.அ.டொலர் 105.0 மில்லியன் மற்றும் இலங்கை ரூபா 12.9 பில்லியன் பெறுமதியான பொறுப்புக்களை இலங்கை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கு 2024.03.04 இல் அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும், இது தொடர்பான எந்த உத்தியோகபூர்வ தகவல்தொடர்பும் வங்கிக்கு கிடைத்திருக்கவில்லை.

2024.02.14, 2024.04.15, 2024.06.03 மற்றும் 2024.09.18 ஆகிய திகதிகளில் அரசாங்க திறைசேரியில் உரிமைக்கோரல்கள் தாக்கல் செய்யப்பட்டன. அனைத்து கடன்களையும் திருப்பிச் செலுத்துவது 2024.12.31 வரை அல்லது மறுசீரமைப்பு செயன்முறை இறுதி செய்யப்படும் வரை நிறுத்தி வைக்கப்பட்டது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளை தீர்ப்பதற்கு அல்லது நீடிக்கப்பட்ட ஆறுதல் கடிதம் மற்றும் திறைசேரி உத்தரவாதத்தை கிடைக்கச் செய்யக் கோரி 2024.08.22 மற்றும் 2024.09.10 இல் பொதுத் திறைசேரிக்கு

| | | | |
|---|---|---|---|
| | | டின் சாதாரண பங்குகள் மீதான அடமானம் | |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 59,563.53 | திறைசேரி இழப்பீடு | ரூபா 100,000 மில் |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | 49,404.07 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 33,152.10 மில் USD 107.49 மில் |
| ஓய்வூதிய திணைக்களம் | 19,088.88 | நிபந்தனையற்றது | - |
| இலங்கை மின்சார சபை | 15,969.27 | கடன் உடன்படிக்கை | - |
| லங்கா கோல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | 15,689.56 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 4,780 மில் |
| அரச மருந்துப் பொருள் கூட்டுத்தாபனங்கள் | 11,380.71 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 49,500 மில் |
| **மொத்தம்** | **890,125.58** | | |

கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் கடன்கள் வழங்கப்பட்ட வாடிக்கையாளர்களும் இருந்தனர், அந்த கடன்கள் அதே ஆண்டில் என்பீஎல் வகைக்கு மாற்றப்பட்டன (மறு திட்டமிடப்பட்ட வசதிகள் விலக்கப்பட்டுள்ளன). மேற்கூறிய வகைக்குள்

2023

அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் தகுதியுள்ள வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் மற்றும்

வழங்கப்பட்ட நாளிலிருந்து முதல் ஆறு மாதங்களுக்குள், NPCFகளாகக் கருதப்படும் வசதிகளை மாதாந்த அடிப்படையில் அறிக்கை செய்து மதிப்பீடு செய்வதற்கான ஒரு பொறிமுறையை அமுல்ப்படுத்துவதற்கு கூட்டுத்தாபன முகாமைத்துவக் குழுவின் (CMC) அங்கீகாரம் 2022.05.25 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில்

வரும் முதல் 10 வாடிக்கையாளர்களின் பகுப்பாய்வின்படி, 2023 ஆம் ஆண்டில் இந்த 10 வாடிக்கையாளர்களுக்கு ரூபா.514.92 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது மற்றும் வழங்கப்பட்ட தொகையிலிருந்து 456.45 மில்லியன் அல்லது 88.64 சதவீதம் அதே ஆண்டில் செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டுள்ளது.

முற்பணங்களை வழங்குவதற்கும், திறம்படவும் திறமையாகவும் அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

பெறப்பட்டுள்ளது.

அதன்படி, மாதாந்த அடிப்படையில் கடன் குழுவிற்கு குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

மேலும், இந்த வசதிகளை வழக்கமான பிரிவில் வைத்திருக்கத் தவறியதற்கான காரணங்களையும், தொடர்ச்சியான பின்தொடர்தல் நடைமுறையுடன் அவற்றை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் விசாரிக்கும் கடிதங்கள் தொடர்புடைய கிளைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

**இஸ்லாமிய வங்கிப் பிரிவால் வழங்கப்பட்ட கடன்**

2019 முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் இந்த அலகின் செயற்பாடற்ற கடன் வெளிப்பாடு படிப்படியாக அதிகரித்துள்ளது, மேலும் இது 2023 ஆம் ஆண்டில் NPA இன் குறிப்பிடத்தக்க சதவீதத்தை பின்வருமாறு குறிக்கிறது;

| **Year** | மொத்த கடன் வெளிப்பாடு | மொத் NPA வெளிப் |
|---|---|---|
| 2019 | 2,278,623,393 | 346,71 |
| 2020 | 1,581,289,830 | 820,03 |
| 2021 | 982,212,331 | 688,24 |
| 2022 | 1,160,511,860 | 669,24 |
| 2023 | 861,845,84 | 661,56 |

2023

அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் தகுதியுள்ள வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குவதற்கும், திறம்படவும் திறமையாகவும் அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

உண்மையான மொத்த கடன் வெளிப்பாடு மற்றும் மொத்த NPA வெளிப்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | மொத்த கடன் வெளிப்பாடு | மொத்த NPA வெளிப்பாடு | மொத்த கடன் வெளிப்பாட்டிலிருந்து NPA % |
|---|---|---|---|
| 2019 | 2,280,525,258.00 | 346,704,320.00 | 15.20% |
| 2020 | 1,673,824,312.00 | 629,469,748.00 | 37.61% |
| 2021 | 1,169,716,452.00 | 699,071,917.00 | 59.76% |
| 2022 | 1,494,493,685.00 | 677,957,256.00 | 45.36% |
| 2023 | 1,451,447,860.00 | 669,621,847.00 | 46.13% |

மேலும், 2024 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு NPA விகிதம் 15.5% ஆகக் குறைக்கப்பட்டது. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| | 7 | 8 | | |

மொத்தச் செயற்பாடற்ற கடன் வெளிப்பாட்டில், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலகின் முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களால் ரூபா 656.81 மில்லியன் அல்லது 99.28 சதவீதம் மேவுகை செய்யப்பட்டதுடன் முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களில் ஒரு வாடிக்கையாளர் இஸ்லாமிய வங்கி பிரிவின் மொத்தச் செயற்பாடற்ற கடன் வெளிப்பாட்டில் 49.53 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| வாடிக்கையாளரின் பெயர் | 2023.12.31 இல் உள்ளவாறு மொத்த O/S **(ரூபா. .000)** | |
|---|---|---|
| ஓசன்பிக் (பிறைவேட்) லிமிடெட் | 327,708.11 | |
| ஹார்கோர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 183,553.32 | |
| பார் டெக் (பிறைவேட்) லிமிடெட் | 44,692.58 | |
| அம்பாறை ஏகாபத்த கொவி சமகம் லிமிடெட் | 43,423.11 | |
| சீமசஹித (ஜனதா) ஏகபத்த கொவி சா | 34,094.60 | |

| ஆண்டு | மொத்த கடன் வெளிப்பாடு | மொத்த NPA வெளிப்பாடு | மொத்த கடன் வெளிப்பாட்டிலிருந்து NPA % |
|---|---|---|---|
| 2024 செப் | 4,229,964,738.00 | 663,950,724.00 | 15.70% |

சிறந்த 10 NPA வாடிக்கையாளர்களில், IBU பின்வரும் வாடிக்கையாளர்களுக்கு அறவீட்டு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

| வாடிக்கையாளர் பெயர் | IBU ஆல் தொடங்கப்பட்ட அறவீட்டு நடவடிக்கை |
|---|---|
| ஓசன்பிக் (பிறைவேட்) லிமிடெட் | மீள்பட்டியலிடுவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டது. |
| ஹார்கோர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை நடைபெற்று வருகிறது |
| பார் டெக் (பிறைவேட்) லிமிடெட் | சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டது |
| சீமசஹித (ஜனதா) ஏகபத்த கொவி சா | சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டது |
| பயோ எனர்ஜி சொல்யூஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டது |
| ஏனையவை | பேச்சுவார்த்தை |

| | | |
|---|---|---|
| பயோ எனர்ஜி சொல்யூஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 13,543.87 | 2.05 |
| திரு ஏ ஏ எம் முஸம்மில் | 4,692.23 | 0.71 |
| திரு. எம் என் முகமது ஷனாஸ் | 1,970.65 | 0.3 |
| நியாஸ் அம்மை | 1,736.10 | 0.26 |
| திரு. எம்.யூ.எம்.நெளபர் | 1,396.87 | 0.21 |

**பதிவழிப்பு கடன்கள்** 2023

2018 முதல் 2023 வரை கடந்த ஆறு ஆண்டுகளில் பதிவழிப்பு செய்யப்பட்ட தொகைகள் மற்றும்அவற்றின் அறவீடுகளின் பகுப்பாய்வு பின்வருமாறுள்ளது;

| ஆண்டு | பதிவழித்த தொகை (ரூபா. மில்லியன்) |
|---|---|
| 2018 | 35.50 |
| 2019 | 710.30 |
| 2020 | 5.63 |
| 2021 | 73.73 |
| 2022 | 13.61 |
| 2023 | 17.17 |
| **மொத்தம்** | **855.94** |

- வங்கியின் கடந்த ஆறு வருடங்களில் திரட்டப்பட்ட தள்ளுபடி

அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் தகுதியுள்ள வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குவதற்கும், திறம்படவும் திறமையாகவும் அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

பேச்சுவார்த்தைகள், வழக்குகள் மற்றும் சொத்து மீட்பு மூலம் NPCFs ஐ அறவிடுவதற்கு வங்கியின் அறவீட்டுப் பிரிவுகள் அனைத்து முயற்சிகளையும் எடுக்கின்றன.

அனைத்து நடவடிக்கைகளும் தோல்வியடைந்தால், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வங்கி வசதிகளை பதிவழிப்பு செய்யும்.

- கடன் வாங்கியவர்/ உத்தரவாததாரர்களின் பெயர்கள் பின்வருவனவற்றிற்கு உட்பட்டு, இயல்புநிலை பதிவுகள் மற்றும் கடன் தகவல் பணியகத்தில் தக்கவைக்கப்பட வேண்டும்
- இந்த பதிவழிப்பு செய்யப்பட்ட கடன்களை அறவிடுவதற்கு வங்கி ஒவ்வொரு முயற்சியையும் எடுக்க வேண்டும்.
- எந்த சூழ்நிலையிலும் கடன் வாங்கியவருக்கோ அல்லது வேறு எந்த தரப்பினருக்கோ பதிவழிக்கப்பட்ட கடன்கள் வெளியிடப்படாது.

வலுவான மற்றும் வழக்கமான நடைமுறைகளைக் கொண்ட வங்கி, 2023 ஆம் ஆண்டில் ரூபா

தொகை ரூபா.855.94 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இதில் அதி உயர் தள்ளுபடி தொகையான 2019 ஆம் ஆண்டில் டான்டோன்ட் லங்கா (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான ரூபா.616.46 மில்லியனும் உள்ளடக்கியது. 2023 ஆம் ஆண்டில் வங்கி ரூபா.17.17 மில்லியன் கடனைத் தள்ளுபடி செய்தது, அதில் ரூபா.5.71 மில்லியன் அல்லது 33.25% வெளிநாட்டுக் கிளை தொடர்பான பதிவழிப்பைக் குறிக்கிறது.

- முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின்பதிவழிப்பு மீதிகளிலிருந்து அறவீடுகள் அதிகரித்திருந்த போதிலும், மீளப்பெறாத ஒட்டுமொத்த பதிவழிப்பு மீதிகளுடன் ஒப்பிடும்போது ஒட்டுமொத்த 25.54 மில்லியன் பதிவழிப்புக்களை அறவிட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| அறவீடுகள் திருப்திகரமான அளவில் காணப்படவில்லை.<br>- வேறுபாடு நாணயமாற்று விகிதக் கருத்தில்கொள்ளல் (நிதி பிரிவு 1USD = ரூபா 317.41 என்றும், வெளிநாட்டுப் பிரிவு 1USD = ரூபா 323.9233 என்றும் கருதப்படுகிறது) காரணமாக நிதிக்கூற்றில் பதிவழிக்கப்பட்ட தொகைக்கும், வணிக அலகுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட விபரங்களுக்கும் இடையே ரூபா 0.11 மில்லியன் வேறுபாடு இனங்காணப்பட்டது,. | | | |
| **பணியாளர் கடன்**<br>2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட செயற்பாடற்ற நீண்டகால நிலுவையிலுள்ள (1 வருடத்திற்கு மேற்பட்ட) ரூபா 259,213,771 ஊழியர் கடன் மீதி அடையாளம் காணப்பட்டது. ஊழியர்களிடமிருந்து நீண்ட காலமாக நிலுவையில் உள்ள நிலுவைத் தொகையை வசூலிக்க வங்கி திருப்திகரமான | 2023 | அதன் பதவியணியினரின் நீண்டகால நிலுவை மீதிகள் அறவிடப்படுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. | அனைத்து கடன் வசதிகளும் மாற்றுவதற்குத் தேவையான செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டன.<br>அனுமதிக்கப்பட்ட ஒத்திவைப்பு காலத்தின் போது தொடர்புடைய வட்டி பெறப்பட்டது. மூலதனம் மட்டும் ஒத்திவைக்கப்பட்டது.<br>(மார்ச் மாதத்திற்கான, ஒத்திவைக்கப்பட்ட வட்டி மிகையூதியத்திலிருந்து அறவிடப்பட்டது)<br>(i) பணியாளர் கடன்கள் |

நடவடிக்கைகளை எடுக்கவில்லை, மேலும் IFRS வகைப்பாட்டிற்கு மாறாக வங்கி இந்த கடன்களை செயல்படாத வகைக்கு மாற்றாததால் இந்த நிலுவைகள் அனைத்தும் செயல்படாத கடன்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் வகைப்படுத்தப்படவில்லை. மேலும் பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான ஒத்திவைப்புகளை வழங்கும்போது வட்டி நிலுவை அடையாளம் காணப்படவில்லை,

(i) பணியாளர் கடன் வசதிகள் ICBS முறைமை மூலம் பராமரிக்கப்படுவதில்லை. மேலும் HCM முறைமையில் பேணப்படுகின்றன. அதன்படி, தானியங்கி அங்கீகாரம் காரணமாக HCM முறைமையில் வழக்கமான பிரிவிலிருந்து கடன்களை தாமதமான பிரிவாக வகைப்படுத்துவதில் நியாயமான தாமதங்கள் காணப்பட்டன.

(ii) உள்ளகக் கொள்கை / முடிவு இல்லாத காரணத்தால் அறவீடுகள் நேரடியாக ஊழியரின் சம்பளத்திற்கு வழங்கப்படுவதால், ICBS முறைமையில் பணியாளர் கடன்களை பராமரிக்க முடியாது. சம்பள செயன்முறை ஒவ்வொரு ஒரு மாதத்திற்கு ஒரு முறை செய்யப்படுகிறதுடன் சம்பளம் செயன்முறைப்படுத்தப்பட்ட பின்னர் வங்கி NPA ஐ காலாவதியான பிரிவுக்கு மாற்றியது.

செயற்படாத முற்பணங்கள் தொடர்பான தானியங்கி அறிக்கைகளை உருவாக்குவதற்கு HCM முறைமையை உருவாக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இத்தகைய அறிக்கைகளைப் பயன்படுத்தி, வகைகளிடையே கடன்களை மாற்றுவதற்கு உள்ளீடுகளை கைமுறையாக அனுப்ப வேண்டும். கைமுறை செயன்முறை பயன்படுத்தப்படும், ஏனெனில் GL A/C ICBS இல் பராமரிக்கப்படுகிறதுடன் HCM இல் கடன்கள் பேணப்படுகின்றதுடன் இரண்டு முறைமைகளுக்கு இடையே எந்த தொடர்பும் காணப்படவில்லை.

(ii) பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் கடன்களுக்கான தெளிவான வழிகாட்டல்களுடன் சுற்றறிக்கைகள் புதுப்பிக்கப்படும்.

(iii) சில சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்ட போது வங்கி அதனை ஆராய்ந்து அதன் பரிந்துரைகளுடன் விசாரணை

பல்வேறு மோசடிகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கையின் விளைவாக பணிநீக்கம் செய்யப்பட்ட அல்லது சேவையை விட்டு வெளியேறிய ஊழியர்களுக்கு பணியாளர் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் (ஊழியர் வீட்டுக் கடன் வசதிகள் தவிர) மாற்றப்படாமல் இருக்கின்றன.

(iii)2021 ஒக்டோபர் 12 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்த இலங்கை வங்கியின் ஒழுக்காற்று விதிக்கோவையின் 23.2(எ) பிரிவின் பிரகாரம் ‘‘முதற்கட்ட விசாரணை முடிவடைந்த 21 நாட்களுக்குள், விசாரணை அதிகாரி தனது அறிக்கையை குற்றப்பத்திரிகையின் வரைவுடன் சம்பந்தப்பட்ட உதவி பொது முகாமையாளருக்கு தலைமை உள்ளக கணக்காய்வாளருக்கான அறிவிப்புடன் அனுப்ப வேண்டும்’’. ஒழுக்காற்று விதிக் கோவையின் பிரிவு 25.2 இல் ‘‘பூர்வாங்க அறிக்கையை வெளியிடும். அதன்பிறகு, சட்டத் துறையிடமிருந்து கருத்துகளைப் பெற்ற பின்னர், புலனாய்வுத் துறையால் சம்பந்தப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு வரைவு குற்றப்பத்திரிக்கை வழங்கப்படுகிறது. அதன் பின்னர் புலனாய்வு அறிக்கை மற்றும் வரைவு குற்றப்பத்திரிக்கையின் அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் குற்றப்பத்திரிக்கை வழங்கப்படும். முறையான ஒழுக்காற்று விசாரணையொன்று (இடைநீக்கம் செய்யப்பட்டிருப்பின் அல்லது விசேட வேண்டுகோளின் பிரகாரம்) நடாத்தப்பட்டு விசாரணை அறிக்கை ஒழுக்காற்று அதிகாரசபையின் முன் சமர்ப்பிக்கப்படும். குற்றஞ்சாட்டப்பட்ட ஊழியரை பதவி நீக்கம் செய்வதே இறுதித் தீர்மானமாக இருப்பின் பணிப்பாளர் சபையின் (BOD) அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கொவிட்-19 தொற்றுநோய், பயணக் கட்டுப்பாடுகள், எரிபொருள் நெருக்கடி, குற்றம் சாட்டப்பட்ட பல ஊழியர்கள் வழங்கிய ஆதரவின்மை மற்றும் குற்றம் சாட்டப்பட்ட ஊழியர்களால் வங்கிக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்தல் போன்ற காரணங்களால் 2020 - 2023 காலப்பகுதியில் குறித்த செயன்முறையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஒழுக்காற்று விதிக் கோவையின் 25.2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘பூர்வாங்க விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் குற்றப் பத்திரத்தை வழங்குவதற்கான

விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கை ஒன்றை வழங்குவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டும்” எவ்வாறாயினும், மாதிரி சோதனையின் போது வங்கியின் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் மற்றும் முறைகேடுகளுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் செயன்முறையில் நியாயமான தாமதங்கள் அடையாளம் காணப்பட்டன, மேலும் இந்த தாமதம் நீண்ட காலத்திற்கு நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளை மீட்காமல் இருந்து வருகிறது.

(iv) பணிநீக்கம் செய்யப்பட்ட, பதவி விலகிய மற்றும் இறந்த ஊழியர்களுக்கு சொந்தமான நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கடன்களை வசூலிப்பது பலவீனமான மட்டத்தில் உள்ளது, ஏனெனில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்” என்பது ஒழுக்காற்று கோவையின் 59 ஆம் பிரிவு – கட்டாயமற்ற காலப்பகுதிகளின் பிரகாரம் கட்டாயமானதல்ல.

(iv)/(v)/(vi)

3023.12.31 இல் உள்ளவாறான மீதியில் ரூபா 42.9 மில்லியன் அறவிடப்பட்டது (5 ஊழியர்கள் முழுமையாக தீர்ப்பனவு செய்தனர்)

தொடங்கப்பட்ட ஏனைய அறவீட்டு நடவடிக்கைகள் பின்வருமாறுள்ளன:

- 15 உறுப்பினர்களுக்கு வழக்கமான பிரிவுக்கு மாற்றவும்
- 29 உறுப்பினர்களுக்கான வீட்டுக் கடன் தவிர ஏனைய கடன்கள் அறவிடப்பட்டன
- 10 உறுப்பினர்களுக்கு வீடு மற்றும் UGL தவிர ஏனைய கடன்கள் அறவிடப்பட்டன
- கடனை அறவிடுவதற்கு 18 உறுப்பினர்களுக்கு PF மீதிகள் விடுவிக்கப்படவில்லை.
- 3 உறுப்பினர்களுக்கான கடன்களை 2024.12.31 இற்குள் தீர்ப்பனவு செய்வதற்கு ஒப்புக்கொண்டது
- நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் 7 உறுப்பினர்களுக்கான PF மீதிகளில் இருந்து கடன்களை அறவிடலாம்
- 1 உறுப்பினருக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- 11 உறுப்பினர்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது.
- 12 உறுப்பினர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கை முடிவு

| | |
|---|---|
| முறையான பிணையங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை மற்றும் அந்த நிலுவைகளை வசூலிக்க திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | நிலுவையில் உள்ளது.<br><br>தற்போது இலங்கையில் பரேட் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது, 5 மில்லியனுக்கு மேற்பட்ட வீட்டுக் கடனை அறவிடும் நிலையில் நாங்கள் இல்லை. |

### 3.3 மக்கள் வங்கி

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | வரிக்குப் பின் இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| 2021 | 2,647,640,536,000 | 2,511,563,440,000 | 136,077,096,000 | 23,720,143,000 | முனைப்பழியற்ற |
| 2022 | 2,972,028,452,000 | 2,826,734,321,000 | 145,294,131,000 | 17,192,058,000 | முனைப்பழியற்ற |
| 2023 | 3,038,195,018,000 | 2,878,136,439,000 | 160,058,579,000 | 10,082,806,000 | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | I. 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பீஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்கள் தொடர்பில் உழைக்கும் போதே செலுத்தும் வரியைக் கழித்து, அதை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு பணிப்பாளர் சபை மற்றும் பொது நிறுவனங்களின் உயர் முகாமைத்துவம் என்பன பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அரச வங்கிகளுக்கும் உரிய தொழிற்சங்கங்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு | 2021 | பீஈடி சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். | கிடைக்கப்பெறவில்லை | நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2023 ஜனவரி 12 ஆம் திகதிய PED/01/2023 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2023 ஜனவரி 01 ஆம் திகதி முதல் வரி செலுத்தவேண்டிய ஊழியர்களிடமிருந்து APIT இனை கழிப்பதற்கு வங்கி |

| | | | | |
|---|---|---|---|---|
| உடன்படிக்கையின் பிரகாரம் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்படாமல் ஊழியர்களின் வருமான வரிப் பொறுப்பை வங்கியால் செலுத்த அறிவுறுத்துகிறது. அதன் அடிப்படையில், 2021/22 மதிப்பீட்டு ஆண்டிற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர்களின் உழைப்புக்களில் இருந்து கழிக்காமல் வங்கியின் நிதியில் இருந்து ஊழியர்களின் சார்பாக ரூபா 56.86 மில்லியன் தொகையை உழைக்கும் போதே செலுத்தும் வரியாக வங்கி செலுத்தியுள்ளது. | | | | ஆரம்பித்துள்ளது. |
| II. 2006 ஆம் ஆண்டில் அமைச்சரவையால் வெளியிடப்பட்ட அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள், அரசாங்க பெறுகை செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கும், தாமதங்களைக் குறைப்பதற்கும், அதிக நிதி ரீதியாக சாதகமான மற்றும் உயர்தர வேலை மற்றும் வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகின்ற | 2021 | வங்கியானது தேசிய பெறுகை முகவராண்மை வழிகாட்டல்களை பின்பற்றியதாக முகாமைத்துவம் குறிப்பிட்ட போதிலும் தேசிய பெறுகை முகவராண்மை வழிகாட்டல்களுடன் பல இணக்கமின்மைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டமையினால், | குறிப்பிடப்பட்டதற்கு அமைய, தற்போதுள்ள சகல நிர்மாண செயற்திட்டங்களுக்காக 2022 யூலை மாதத்தில் இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேலை மற்றும் ஆலோசனைக்கான பெறுகை கையேடுகளை பின்பற்றுவோம். | - |

ன. எனினும், வங்கி நிதிச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டு குறித்த வழிகாட்டல்களை வங்கி பின்பற்றியிருக்காததுடன் வங்கியின் சொந்த வேலை பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெறுகை முகவர் பின்பற்ற வேண்டிய வங்கிக்கு சொந்தமான நடைமுறையை உருவாக்கத் தவறியிருந்தது. அதன் பிரகாரம் 2017 முதல் 2021 வரையிலான காலப்பகுதியின் போது 11 பணிகள் தொடர்பாக பணிகளின் மதிப்பிடப்பட்ட 7,092 மில்லியன் பெறுமதி குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டலை பின்பற்றாமல் பெறுகை செய்யப்பட்டன.

வங்கி எதிர்காலத்தில் 2022 யூன் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட வேலைகள் மற்றும் ஆலோசனை சேவைகளுக்கான சொந்த பெறுகை கொள்கையை வங்கி கடைபிடிக்க வேண்டும்.

III. வங்கி 2013 ஆம் ஆண்டில் ரூபா 257.9 மில்லியன் பெறுமதியான காணியை யாழ்ப்பாணத்தில் உத்தேசிக்கப்பட்ட மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலகம் மற்றும் கிளையை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்து 04 வருடங்களின் பின்னர் லிங்க் எஞ்ஜினியரிங்

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள முன்மொழியப்பட்ட பிராந்திய தலைமை அலுவலகம் மற்றும் மக்கள் வங்கியின் கிளையின் எஞ்சிய வேலைகளுக்கான ஒப்பந்தம்

| | | |
|---|---|---|
| | பிறைவேட் லிமிட்டட்டிற்கு 550 நாட்கள் தவணைக்காலத்துடன் ரூபா 597.2 மில்லியன் கிரயத்தில் முன்மொழியப்பட்ட நிர்மாணத்தை வழங்கியிருந்த போதிலும் 8 ஆண்டுகள் கடந்தும் வங்கி விரும்பிய நோக்கத்தை அடைந்துகொள்ளத் தவறியிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டம் எதிர்பார்த்த திகதியில் பூர்த்தி செய்யப்படாததால், வங்கிக்கு ரூபா 13.12 மில்லியன் அலுவலக வாடகை மற்றும் பாதுகாப்பு செலவினங்களாக சிக்கனமின்றி ஏற்பட்டிருந்தன. | 2022 ஜுன் மாதத்தில் தகுதிவாய்ந்த விலைமனுதாரருக்கு வழங்கப்பட்டதுடன் செயற்திட்டம் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது. |
| IV. | ஆலோசகர்களைத் தெரிவுசெய்து ஆட்சேர்ப்பு செய்தல் பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் செய்யப்பட்டிருக்காததுடன் பெறுகை பணிகள் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை, ஆலோசனை நிறுவனம் (டிசைன் குஷரூப் பைவ் இன்டர்நேஷனல் (பிறைவேட்) லிமிட்டட்) ஆலோசனை | - |

பணிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாகவே பணிகளைத் தொடங்கியிருந்தமை இதற்கு சான்றளிக்கின்றது. இந்த செயற்திட்டத்தின் ஒப்பந்த நிர்வாகம் மற்றும் மேற்பார்வை கிரயம் ரூபா 26.5 மில்லியன் அல்லது மதிப்பிடப்பட்ட செயற்திட்ட கிரயத்தில் 4.5 சதவீதம் ஆகும். ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர் செயற்திட்ட முகாமையாளர் மற்றும் பொறியியலாளர்கள் உட்பட 12 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை முழுநேர மற்றும் பகுதிநேர அடிப்படையில் செயற்திட்டத்தில் பணிக்கமர்த்த வேண்டும். நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பகுதியில் உள்ள பௌதீக குறைபாடுகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, 12 உத்தியோகத்தர்கள் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் நியமிக்கப்பட்டார்களா

, அவர்கள் முறையாக மேற்பார்வை செய்யப்பட்டார்களா என்பது சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

மேலும், இச் செயற்திட்டத்தின் நிர்மாணம் திட்டமிட்டதை விட அதிக காலதாமதத்தை காட்டுகின்றமை, வேலைத்தள இடையூறுகள், நாளாந்த பணியாளர்களின் குறைவான வருகை, பணியிடத்தில் அத்தியாவசிய மூலப்பொருட்கள் மற்றும் பொருட்கள் கிடைக்காதமை, மூலப்பொருள் மாதிரிகளின் தட்டுப்பாடு மற்றும் தொழில்நுட்ப சமர்ப்பிப்புகள், முன்னேற்ற அறிக்கைகளின் முறையற்ற சமர்ப்பிப்பு மற்றும் பட்டை விளக்கப்படங்களை (bar charts) முறையாக சமர்ப்பிக்க இயலாமை ஆகியன காரணமாக ஒப்பந்த உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஆலோசனை நிறுவனத்தைத் தெரிவுசெய்தல், கேள்வி ஆவணங்களைத்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தயாரித்தல், கேள்வியை மதிப்பீடு செய்தல், ஒப்பந்ததாரரைத் தெரிவுசெய்தல், ஒப்பந்தங்களை பூர்த்தி செய்தல், ஒப்பந்தப் பணிகளைச் செய்தல், அவற்றைக் கண்காணித்தல் மற்றும் ஆலோசனை நிறுவனங்களின் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் போன்றவற்றில் உள்ள குறைபாடுகள் இந்த ஒப்பந்தத்தின் முடிவுறுத்தலிற்கு தாக்கம் செலுத்திய முக்கிய காரணிகளாகும்.<br><br>வங்கி ரூபா 204.84 மில்லியன் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 27 சதவீதத்தை செலவிட்டிருந்ததுடன் வெளிநாட்டு நாணய பெறுமதி மாற்றம் மற்றும் மூலப்பொருள் விலைகள் அதிகரிப்பு ஆகியவற்றால் பூர்த்தி செய்யப்படாத பணிகளுக்காக ரூபா 659.08 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயம் ஆரம்பத்தில் ரூபா 634.62 மில்லியன் வரை திருத்தப்பட்டு மீண்டும் ரூபா 693.65 மில்லியன் வரை திருத்தப்பட்டது. | | | | |
| V. | ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைகின்ற போதிலும் 2021 ஆம் | 2021 | புதிய நாணயக் கடிதத்தினை திறக்கும் போது அந்நியச் செலாவணி | காணப்படும் தகவலின் பிரகாரம் இலங்கை ரூபா மற்றும் வெளிநாட்டு நாணயம் | தற்போது வங்கி திரவத்தன்மை பற்றாக்குறை யை |

| | | | |
|---|---|---|---|
| ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலரை கொள்வனவு செய்வதற்காக வங்கி பல ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா இடமாற்று (swap) உடன்படிக்கைகள் மேற்கொண்டுள்ளதுடன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஐ.அ.டொலரின் கொள்வனவு விலைவிகிதத்தை விட ஐ.அ.டொலரின் விற்பனை விலைவிகிதம் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனால் 2021 ஆம் ஆண்டில் அந்த இடமாற்று உடன்படிக்கைகள் தொடர்பாக வங்கிக்கு ரூபா 4,063,085,606 (எதிர்கால முதிர்ச்சியின் (far leg/maturity) போது உண்மையான விலைவிகிதத்தை சீர்செய்யாமல்) நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.<br><br>இந்த ஐ.அ.டொலர் இடமாற்ற கொள்வனவுகள் முக்கியமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நாணய கடிதத்தினை தீர்த்துவைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | நிலைமை பற்றி அதிக கவனம் தேவையாகும். | என்பவைகளின் எதிர்வுகூறப்பட்ட காசுப்பாய்ச்சல்களை திறைசேரி முன் அலுவலகம் (TFO) தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது. மேலும், TFO மூலம் வங்கியின் திரவத்தன்மை நிலைமை தொடர்பில் காலக்கிரம அடிப்படையில் சொத்து பொறுப்பு குழு இற்றைப்படுத்துகிறது. | எதர்கொள்ள வில்லை. 2024 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான வங்கிகளுக்கிடையிலான சந்தையில் வங்கி ஐக்கிய அமெரிக்க டொலர் 109 மில்லியன் தேறிய மிகையினை பதிவு செய்துள்ளது. செலுத்த வேண்டிய SWAP பரிவர்த்தனைகள் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இருக்கின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சார்பாக வங்கி ஐ.அ.டொலர் 1,054,265,967 மற்றும் யூரோ 139,736 தொகையான நாணயக் கடிதத்தினை திறந்திருந்தது. வங்கி பல சந்தர்ப்பங்களில் ALCO அங்கீகரித்த தேறிய அந்நிய செலாவணி நிலை வரம்பை (ஐ.அ.டொலர் 25 மில்லியன் நீண்ட அல்லது குறுகிய) தாண்டியுள்ளதுடன் தேறிய அந்நிய செலாவணி நிலை பெரும்பாலும் 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் பெரும்பாலும் எதிர்மறையாக இருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| VI. | ரன்டியா டிஸ்ரில்லரீஸ் பிறைவேட் லிமிட்டட்<br><br>கம்பனி மதுபானம் தயாரித்து போத்தலில் இடும் தொழிலில் ஈடுபடுகிறது. ஆரம்பத்தில் 1982 ஆம் ஆண்டில் ''ரியோ மார்கெடிங் சர்வீசஸ் பிறைவேட் லிமிட்டட்'' கம்பனி என உருவாக்கப்பட்டதுடன் பின்னர் அதன் பெயர் ரன்டியா டிஸ்ரில்லரீஸ் பிறைவேட் லிமிட்டட் என | 2021 | அறவீடுகள் தொடர்பாக தொடர்ச்சியான பின்தொடர்தலும் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்கள் கடைப்பிடிக்கப்படுதலும் அவசியமாகும். | வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதி வழங்கும் போது வங்கியில் உள்ள சுற்றறிக்கை வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்குமாறு சகல கடன் சேவை ஊழியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>அதுமட்டுமல்லாமல், அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவுகளின் நிதிக் கூறுகளை கண்காணிக்க அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>கடன் இடரினை | இந்த வசதி 2021 ஆகஸ்ட் 31 அல்லது அதற்கு நெருங்கிய திகதியில் மீளமைக்கப்பட்டதுடன் அதன் பின்னர் மாதாந்த தவணையினை அறவீடு செய்வதற்கு கம்பனி ரூபா 30.5 மில்லியன் தொகையினை தொடரச்சியற்ற வகையில் தவணை மீதிகளை செலுத்தியது. |

மாற்றப்பட்டிருந்தது.

இந்த வாடிக்கையாளர் வங்கிக்கு புதியவராக உள்ளதுடன் அவரது நடைமுறைக் கணக்கு 2020 மே 06 இல் திறக்கப்பட்டது. வங்கி ரூபா 250 மில்லியன் வசதியை வழங்கியுள்ளது. வங்கியின் கடன் நடைமுறை கையேட்டின் தலைப்பு 05 இன் 6.2.4 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபன உத்தரவாதங்கள் மற்றும்/அல்லது ஏனைய அசையும் ஆதனங்கள் உட்பட உத்தரவாததாரர்களின் பிணை மீது கருத்தில் கொள்ளப்பட்ட காலக் கடன்கள் குறிப்பாக குறித்துரைக்கப்பட்டால் தவிர 3 ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட வேண்டும். எனினும், சபை நிறைவேற்றுக் கடன் குழுவின் (BECC) அங்கீகாரத்தின் அடிப்படையில் இரண்டு பணிப்பாளர்களின் பிணைக்கு எதிராக இந்த வசதி வழங்கப்பட்ட போதிலும் மேற்கூறிய வசதி 05 ஆண்டுகளிற்கு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதோடு, கடன் நடைமுறை கையேட்டின் தலைப்பு

குறைத்துக்கொள்வதற்காக ஊழியர்களின் அறிவை மேம்படுத்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

மீண்டும் மீண்டும் ஞாபகமூட்டல்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் மீள்செலுத்தலை தொடர்சியாக செய்யாததன் விளைவாக கடன்பெற்ற கம்பனி மற்றும் இயக்குனர்களின் தனிப்பட்ட உத்தரவாதி என்பவர்களுக்கு எதிராக வழக்கினை தொடங்க வங்கி முடிவு செய்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| 05 இன் 9.6 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு தனியாள்/ பெருநிறுவனத்தின் உத்தரவாதமானது அவர் /அவள் வங்கியில் செயற்பாடற்ற ஒருவராக / வங்கி அல்லது வேறு ஏதேனும் நிதி நிறுவனத்தில் கடந்த கால கடன் வாங்கியவர் /உத்தரவாததாரராகத் தோன்றினால் அத்தகைய உத்தரவாதம் ஏற்றுக்கொள்ளப்படாது. எவ்வாறாயினும், மேற்கூறிய உத்தரவாததாரர்கள் இந்த வசதியை வழங்குவதற்கு முன்பு இலங்கை கடன் தகவல் பணியகத்திடம் இருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்பாடற்ற கடன் அறிக்கைகளை வைத்திருந்தனர் என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. | | | | |
| VII. நிலுவையாக உள்ள விநியோகம் (Pending Deliveries) தொடர்பான தொங்கல் கணக்கு கொடுப்பனவு (பேரேட்டு இலக்கம் – 393470)<br><br>தகவல் தொழில்நுட்ப | 2022 | நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது நீண்ட கால நிலுவைத் தொகைகளை தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நிலுவைத் | நிலுவையில் செயற்திட்டம் முடிந்ததும் தொங்கள் கணக்கு நிலுவைகள் தீர்ப்பனவு செய்யப்படும்.<br><br>தற்போது சிரேஷ்ட செயற்திட்ட முகாமையாளர் அலுவலகரின் கீழ் | **மீள் எழுதுதல் செயற்திட்டம்** இந்த செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டு அது மூடப்பட்டுள்ளது.<br><br>**தரவுக்** |

உபகரணங்களைப் பெறுவதற்கு வழங்குநர்களுக்கு அளிக்கப்படும் முன்பணங்கள் மேலே உள்ள கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன, மேலும் பணம் செலுத்தப்பட்டதும், பெறப்பட்ட சேவையின் தன்மையைப் பொறுத்து அது மூலதனமாக்கப்படும். 2022 டிசம்பர் 31 இல் மேற்கூறிய கணக்கில் ரூபா 1,185,766,976 மீதி காட்டப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

(அ) ரூபா 813,556,548 தொகையான குறிப்பிடதக்க மீதிகளை அகற்ற நடவடிக்கை எடுக்காமல் ஓராண்டுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன.

(ஆ) மேற்கூறியபடி, வழங்குநர்களுக்குச் செலுத்தப்பட்ட முன்பணங்கள் மேற்கண்ட கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தரவு களஞ்சிய திட்டம் (Datawarehouse Project) மற்றும் செயலி மீள் பதிவு நிகழ்ச்சித்திட்டம் (Application

தொகைகளை துல்லியமாக கண்டறிதல், வகைப்படுத்துதல் மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றை உறுதிசெய்வதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், இந்த உருப்படிகளில் பெரும்பாலானவை மென்பொருள் கொள்முதல் தொடர்பானவை என்பதால், செயற்திட்டத்தை முடிப்பதற்கு எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க கால தாமதத்துடன் இவை பயனுள்ளதாக இருக்காது.

(உதவி பொது முகாமையாளர் தரம்) செயற்திட்ட முகாமைத்துவ செயன்முறையொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், அதனால் தற்போது நடைமுறை மற்றும் நிலுவையில் உள்ள சகல செயற்திட்டங்களும் செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகத்தினால் மேற்பார்வை செய்யப்படுவதோடு புதிய செயற்திட்ட முகாமைத்துவ செயன்முறைகள் பின்பற்றப்படுகின்றன.

புதிய நியம செயன்முறைகள் தயாரிக்கப்பட்டு சகல பங்குதாரர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்டகால செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளை பூர்த்தி செய்தல் மற்றும் முடித்தல் ஆகியவற்றை முகாமைத்துவம் பின்பற்றுகின்றது.

**களஞ்சிய செயற்திட்டம்**
இந்த செயற்திட்டத்தின் பூரண தொகைக்கு நட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு பதிவளித்தல் செயற்பாட்டிற்கு உரிய அங்கீகாரம் பெறப்பட்டு வருகின்றது.

**டிஜிட்டல் வங்கியியல் செயற்திட்டம் (ரூபா 84,631,716.00)**
பணத்தினை அறவீடு செய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கை நடைபெற்று வருகின்றது.

Rewrite Program) என்பவற்றின் கீழ் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை வாங்குவதற்காக இரண்டு வழங்குநர்களுக்கு (ஜஸ்ட் இன் டைம் மற்றும் இனோவா ஐடி சிஸ்டம்ஸ்) ரூபா.184,220,563 முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையானது மேலே உள்ள கணக்கின் நிலுவையில் உள்ளது. எவ்வாறாயினும், சொத்துக்கள் இல்லாத காரணத்தினால் முழுத் தொகைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) வழங்கல் பிரிவு வழங்கிய அறிக்கையின் படி, ரூபா.84,631,716 தொகையானது நீண்ட காலமாக நிலுவையாக இருந்ததுடன் இது தொடர்பான விவரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், கிடைக்கக்கூடிய சான்றுகளின்படி, 2018 ஆம் ஆண்டில் JIT டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கு வங்கி

| | | | |
|---|---|---|---|
| ரூபா.84,631,716 செலுத்தியுள்ளதுடன் இது தொடர்பில் ஆவண சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இது வங்கியின் டிஜிட்டல் வங்கித் செயற்திட்டத்திற்கான ஒப்பந்தத்தின் கீழ் உள்ளடக்கப்படாத மேலதிக கட்டணமாகும் என்பதும் கணக்காய்வில் மேலும் தெரியவந்தது. | | | |
| VIII. பிம்புத் பைனான்ஸ் 2022 பிஎல்சி<br><br>பிம்புத் பைனான்ஸ் என்பது 2007 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட தயா குழுமத்தைச் சேர்ந்த ஒரு சிறு நிதிக் கம்பனியாகும் மற்றும் 2012 ஆம் ஆண்டு முதல் நுண் நிதிச் சேவைகளில் ஈடுபட்டு வருகிறது. 2017-2019 காலப்பகுதியில் மேற்கூறிய கம்பனிக்கு ரூபா.700 மில்லியன் வரை மூன்று காலக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்ட | அனுமதிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றிக்கைகள் என்பவற்றின் பிரகாரம் தகுதிவாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு கடன் மற்றும் முற்பணங்கள் வழங்குவதற்கும், அறவீடு செய்ய வினைத்திறனானதும் செயற்திறனானதும் தேவையான நடவடிக்கை எடுக்கவும். மேலும், இணங்காமை தொடர்பில் பொறுப்புவாய்ந்த தரப்பினர்களுக் | வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதிகள் வழங்கும் போது வங்கியில் உள்ள சுற்றறிக்கையின் வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்குமாறு சகல கடன் ஊழியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>அதுமட்டுமல்லாமல், அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூறுகளை கண்காணிக்க அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.<br><br>கடன் இடரினை குறைத்துக்கொள்வதற்காக ஊழியர்களின் அறிவை மேம்படுத்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. | கடன் பெற்றவரினை சீரமைக்கும் நோக்கிலும் கடன் பெற்ற கம்பனியின் தற்போதுள்ள நிதி நிலைமையினை மேம்படுத்தும் நோக்கிலும் அந்த கம்பனியின் கோரிக்கையின் படி 2022 மே 31 ஆம் திகதி இரண்டாவது மீள்அட்டவணை மேற்கொள்ளப்பட்டது. 734/2005 (17) ஆம் இலக்க பொது அறிவுறுத்தல் சுற்றறிக்கையி |

ன.

(அ) 2017 மார்ச் 10, 2018 டிசம்பர் 17 மற்றும் 2019 ஏப்ரல் 25 திகதியிட்ட கடன் சலுகைக் கடிதம் விஷேட நிபந்தனை இல. (1) இன் படி, ஒவ்வொரு அடுத்த காலாண்டின் முதல் வாரத்திலும் வங்கிக்கு நிறுவனத்தின் பெறத்தக்கவைகளின் கடன்கள் பட்டியலை வழங்குவது அவசியம். எவ்வாறாயினும், கடன் சலுகைக் கடிதங்களின் சிறப்பு நிபந்தனையின் பிரகாரம் அத்தகைய புதுப்பிக்கப்பட்ட கடன் பட்டியலைப் பெறுவதற்கு வங்கி நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) மேற்கூறிய கடன் சலுகைக் கடிதங்களின் சிறப்பு நிபந்தனை இல.2 மற்றும் 3க்கு மாறாக, கடன் வாங்குபவர் மூன்று மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் பெறத்தக்க ஒப்பந்தத்தை ஒரு செயல்பாட்டு ஒப்பந்தத்துடன்

கு எதிராக நடவடிக்கை எடுப்பதும், வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டை பலப்படுத்துவதும் அவசியமாகும்.

ன் வழிகாட்டுதல்களின் பிரகாரம் தற்போதுள்ள பிணைமுறியின் அடிப்படையில் இந்த மூன்று வசதிகளும் மீள்அட்டவணை செய்யப்பட்டது. அந்த மீள்அட்டவணைக் கட்டத்தில் கோவிட் 19 தாக்கத்துடன் கம்பனி எதிர்கொண்ட இடர்களினை கருத்திற்கொண்டு வாடிக்கையாளரின் மீள்கொடுப்பனவை வங்கி பிரதானமாக கவனம் செலுத்தியது. மீள்அட்டவணை குறித்து தொடர்ச்சியான கலந்துரையாடலின் போது கடன் வசதிகளுக்கான பிணைமுறிக்குரிய அசையாத சொத்துக்கள் அல்லது ஏனைய சொத்துக்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

மாற்ற வேண்டும் மற்றும் தீர்க்கப்பட்ட ஒப்பந்தங்களும் மாற்றப்பட வேண்டும். இருப்பினும், அத்தகைய பின்தொடர்தல் வங்கியால் செய்யப்படவில்லை.

(இ) வங்கியின் கடன் கையேட்டின் அத்தியாயம் 5 இன் பிரிவு 6.2.8 இன் படி, புத்தகக் கடன்களுக்கு எதிராக வழங்கப்பட்ட கடன்களுக்கான அதிகபட்ச திருப்பிச் செலுத்தும் காலம் ஒரு வருடம் ஆகும். எவ்வாறாயினும், கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறாக, 3 முதல் 5 ஆண்டுகள் வரை திருப்பிச் செலுத்தும் காலம் வழங்கப்பட்டது.

(ஈ) இயக்குனர் சபையின் நிர்வாகக் கடன் குழு (BECC) இல. 1133/2020 இடர் முகாமைப் பிரிவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின்படி (மறுதிட்டமிடும் நேரத்தில்), இந்தக் கடன்களின் பிணை

தற்போதுள்ள பிணைமுறிகளின் அடிப்படை தவிர வங்கிக்கு ஏனைய மாற்று வழிகளில்லை. பொதுவாக பிரச்சினைக்குரிய வாடிக்கையாளரின் தற்போதைய கடன்களுக்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய மீள்கொடுப்பனவினை எதிர்பார்த்து மாத்திரம் மீள்அட்டவணை செய்யப்பட்டது. அங்கு வாடிக்கையாளரின் கடன் மதிப்பீட்டில் தங்கியிருப்பது நியாயமானதல்ல. 734/2005 (17) ஆம் இலக்க பொது அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் 2.3.3 ஆம் பந்தியின் பிரகாரம் வாடிக்கையாளர் 3-6 தவணைகளை மொத்தமாக வைப்பு செய்தால், மீள்அட்டவணை செய்வது சாதகமாக கருதப்பட

பலவீனமாகவும், பிணை அபாயகரமானதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேற்கூறியவற்றைப் புறக்கணித்து, பாதகமான சூழ்நிலைகளின் அடிப்படையில் கடன்கள் அங்கீகரிக்கப்பட்டன, அதன்பின் அந்த மூன்று கடன்களும் செயல்படாமல் இருந்தன. அவை மீண்டும் மாற்றியமைக்கப்பட்டதுடன் அதே பாதுகாப்புடன் ஒரு மூலதன சலுகையும் வழங்கப்பட்டது.

(உ) கடன் கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின் படி இந்த வாடிக்கையாளரின் கடன் அபாய மதிப்பீடு 2019 முதல் 2022 வரையிலான காலக்கட்டத்தில் “BB” இலிருந்து “C” க்கு மோசமடைந்துள்ளது.

(ஊ) ஒப்புக்கொண்டபடி வட்டியை செலுத்தாததால், இந்த கடன்கள் 2022 செப்டம்பர் 06 அன்று செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டன.

முடியும். அதன் பிரகாரம், வாடிக்கையாளர் மீள்அட்டவணை செய்வதற்கு முதல் ரூபா 12.0 மில்லியனை செலுத்தினார். வாடிக்கையாளரின் நிதி நிலைமையினை மறுசீரமைக்கும் நோக்குடன் உள்ளக அங்கீகாரத்திற்கு உட்பட்டு மீள்அட்டவணை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. கடன் பெற்ற கம்பனி மாதாந்த தவணையினை குறைக்குமாறு கோரியிருந்தார். அதனால், சலுகை மாதாந்த தவணையினை சமர்ப்பிப்பதற்காக காலத்தினை மீண்டும் 06 ஆண்டுகள் வரை நீடிக்கப்பட்டது. இது 734/2005 (17) ஆம் இலக்க பொது அறிவுறுத்தல் சுற்றறிக்கையின்

கடன் வசூலிப்பு கையேட்டின்படி இந்த வகை கடன்களை ஒரு வருட காலத்திற்கு வழங்க முடியும். எவ்வாறாயினும், திருப்திகரமான வசூலிப்பின்றி வங்கி பிரதான கடன் காலத்தை 9 முதல் 11 ஆண்டுகள் வரை நீட்டித்துள்ளது. வலுவான பத்திரங்களைப் பெறாதது, சரியான திருப்பிச் செலுத்தும் திட்டம் கிடைக்காமை மற்றும் பலவீனமான கடன் மதிப்பீடு ஆகியவை இந்தக் கடன்களுக்கான முக்கிய பலவீனங்களாகக் அவதானிக்கப்பட்டன. 2022 செப்டம்பர் 06 ஆம் திகதியில் உள்ளவாறு மொத்தமாக வசூலிக்க வேண்டிய மீதி ரூபா 422.61 மில்லியன் என அறிக்கை செய்யப்பட்டுள்ளதுடன், இதில் மூலதன மீதி ரூபா 417.92 மில்லியன் உள்ளடங்கும்.

(எ) கடன் நிலுவைகள் ஏதும் இல்லை என்றாலும், 05 வாடிக்கையாளர் அடையாள இலக்கம் (CIF) அதே

அறிவுறுத்தல்களுக்கு இணங்க உடன்படுகிறது. மீள்அட்டவணை செய்யப்பட்ட பின்னர் மூலதனம் மற்றும் வட்டியாக வங்கிக்கு ரூபா 51.93 மில்லியன் பெறப்பட்டது. கடன் வசதிகள் செயற்பாடற்ற வகையினுள் உள்ள போதிலும், கடன்பெற்ற கம்பனியிடமிருந்து கொடுப்பனவினை பெறுவது மீள்அட்டவணை செய்வதின் பிரதான நோக்கமாக இருந்தது.

கடன் வசதிகளினை அறவீடு செய்யக்கூடியது தயா க்ரூப் (தனியார்) கம்பனியின் உத்தரவாதியில் தங்கியுள்ளது. உத்தரவாவாதிக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. திவாலான

| | | |
|---|---|---|
| வாடிக்கையாளருக்கு காணப்பட்டுள்ளதுடன் தகவல்கள் பின்வருமாறு உள்ளன. 450012095,1740003288, 2240046224,680023200<br><br>(ஏ) மேற்கூறிய கம்பனியின் வணிக உரிமம் 2023 செப்டம்பர் 01 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளதுடன் அதன்படி, மேற்கூறிய கடன்கள் திரும்பப் பெறப்படுவது சிக்கலாக உள்ளது. | | கம்பனியின் கடன் புத்தகம் தொடர்பாக அடமான முறிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது சாத்தியமற்றது என்பதால் வங்கி எந்த அடமான முறி நடடிவடிக்கைகளையும் தாக்கல் செய்யவில்லை. இந்த மீள்அட்டவணை மூலம் மூலதனம் மற்றும் வட்டியாக திரும்பப்பெற முடிந்தது. பணத்தினை அறவீடு செய்தல் மற்றும் வாடிக்கையாளருடன் கலந்துரையாடல் போன்ற இரு வழி மூலம் மீதிகள் அறவிடப்படும். 204/2023/MR ஆம் இலக்க வழக்கின் கீழ் கடன் பெற்ற கம்பனி மற்றும் பெருநிறுவன உத்தரவாதி என்பவர்களுக்கு எதிராக சட்ட வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் முன்னாள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | தரப்பினர் தீர்ப்பு 2024 நவம்பர் 11 இல் வழங்கப்படும். மேலும், 41/2024/CO ஆம் இலக்க வழக்கின் கீழ் HDFC மூலம் தாக்கல் செய்த கலைப்பு வழக்கில் கோரிக்கையை முன்வைக்க எங்களின் நீதி திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| IX. | <u>ஒலிம்பஸ் கட்டுமானங்கள்</u><br><br>ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் இற்கு வழங்கப்பட்ட கடன் தொகையானது தயா குரூப் கம்பனியின் துணைக் கம்பனி என தயா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற பெயரில் 2007 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு மீண்டும் ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற பெயரில் கட்டுமானத் துறையில் ஈடுபட்டுள்ள வணிகமொன்றாகும். 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக திறட்டிய கடன் விபரத்தின் பிரகாரம் | 2022 | அனுமதிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றிக்கைகள் என்பவற்றின் பிரகாரம் தகுதிவாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு கடன் மற்றும் முற்பணங்கள் வழங்குவதற்கும், அறவீடு செய்ய வினைத்திறனானதும் செயற்திறனானதும் தேவையான நடவடிக்கை எடுக்கவும். மேலும், இணங்காமை தொடர்பில் பொறுப்புவாய்ந்த | வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதிகள் வழங்கும் போது வங்கியில் உள்ள சுற்றறிக்கையின் வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்குமாறு சகல கடன் ஊழியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>அதுமட்டுமல்லாமல், அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூறுகளை கண்காணிக்க அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.<br><br>கடன் இடரினை குறைத்துக்கொள்வதற்காக ஊழியர்களின் அறிவை மேம்படுத்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. | ஒலிம்பஸ் கட்டுமானத்தின் அட்டுரு வட்டியை பிற்போடுவதற்குரிய முன்மொழிவு 962/2021 ஆம் இலக்க இயக்குனர் சபை பத்திரத்தின் பிரகாரம் வங்கியின் இயக்குனர் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில், 734/2005(17) ஆம் இலக்கம் கொண்ட பொது அறிவுறுத்தல் சுற்றறிக்கையானது செயற்பாடற்ற |

| | | |
|---|---|---|
| ரூபா 581.63 மில்லியன் (மூலதனம் ரூபா.518.12 மில்லியன், திரண்ட வட்டி ரூபா.57.42 மில்லியன், அபராத வட்டி மற்றும் தாமதக் கட்டணங்கள் ரூபா 6.019 மில்லியன்) வரையான மொத்தம் 07 கடன் கணக்குகள் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவைகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன. பின்வரும் அவதானிப்புக்கள் கண்டறியப்பட்டது.<br><br>(அ) இந்த கடன்கள் விதிவிலக்கான நிபந்தனைகளின் பேரில் நிர்வாகக் கடன் குழுவின் (BECC) ஒப்புதலுடன் வழங்கப்பட்டன மற்றும் பல மறுசீரமைப்புகளுக்குப் பிறகு நிர்வாகக் கடன் குழுவால் பல தள்ளுபடிகள் (Waive-off) அங்கீகரிக்கப்பட்டது. கணக்காய்வுக்கு அனுப்பப்பட்ட விவரங்களின்படி, வாடிக்கையாளருக்கு ரூபா.33.13 மில்லியன் தள்ளுபடி வழங்கப்பட்டது. | தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும், வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டை பலப்படுத்துவதும் அவசியமாகும். | முற்பணங்களினை மீள்அட்டவணை செய்வதற்கு வெளியிடப்பட்டதுடன் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் அட்டுருவான வட்டிக் கூறுகளில் 30 சதவீதத்தினை பிற்போட முன்மொழியப்பட்டது. மீள்அட்டவணையின் போது பிற்போட்ட வட்டியான ரூபா 15.30 மில்லியன் 2024 ஆகஸ்ட் 30 ஆம் திகதி முழுமையாக அறவீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தள்ளுபடி செய்யப்பட்ட வட்டி ரூபா 17.83 மில்லியன் வரை கழிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| X. டபிள்யூ.எம்.மெண்டிஸ் கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன்களானவை 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மேற்படி வாடிக்கையாளருக்கு வங்கியினால் ரூபா.3,063 மில்லியன் பெறுமதியான மொத்தக் கடன் மூலதனம் வழங்கப்பட்டது.<br><br>(அ) வங்கியின் கடன் நடைமுறைக் கையேட்டின் 5 ஆம் தலைப்பின் 12 ஆம் பந்தியின் படி, எந்தவொரு கடனையும் வழங்குவதற்கு முன், செயற்பாடற்ற கடன்கள் இல்லை என்பதை உறுதிசெய்வதற்கு வாடிக்கையாளரின் பொறுப்பு அறிக்கைகள் சரிபார்க்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்கூறியவற்றிற்கு மாறாக, மேற்படி வாடிக்கையாளருக்கு வங்கியினால் மொத்தமாக ரூபா.378 மில்லியன் பெறுமதியான 3 கடன்கள் வழங்கப்பட்டுள்ள | 2022 | அனுமதிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றிக்கைகள் என்பவற்றின் பிரகாரம் தகுதிவாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு கடன் மற்றும் முற்பணங்கள் வழங்குவதற்கும், அறவீடு செய்ய வினைத்திறனானதும் செயற்திறனானதும் தேவையான நடவடிக்கை எடுக்கவும். மேலும், இணங்காமை தொடர்பில் பொறுப்புவாய்ந்த தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும், வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டை பலப்படுத்துவதும் அவசியமாகும். | இவ்வகையான சூழ்நிலைகள் எதிர்காலத்தில் ஏற்படுவதை தவிர்க்க பொது அறிவுறுத்தல்கள் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன.<br><br>மேலும், அத்தகைய அறிவுறுத்தல்கள் மற்றும் கடன் கொள்கை கையேடு என்பவற்றை கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு வாடிக்கையாளர் தொடர்பு உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | மீட்பு முயற்சிகளின் கண்ணோட்டத்தில் கடன் ஒப்பந்தத்தை வலுப்படுத்த மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.<br><br>BECC/708/2021 இன் படி, ஆண்டுக்கு 24 சதவீதம் மேலதிகப்பற்று வசதிக்காக திரண்ட வட்டி ரூபா.1,051 மில்லியனில் ரூபா.400 மில்லியன் வட்டி நிவாரணம் வழங்கப்பட்டது. 2021 ஜூலை 19 திகதியிட்ட சலுகைக் கடிதத்தில் இது இணைக்கப்பட்டுள்ளது, திருப்பிச் செலுத்துதல் திருப்திகரமாக இருந்தால் மட்டுமே இந்தச் சலுகை அனுமதிக்கப்படும்.<br><br>தற்போது இயங்கி வரும் கல்குடா ஆலை மீதான இரண்டாம் நிலை அடமானம் |

ன.

(ஆ) 2021 ஜுன் 28 ஆம் திகதிய இயக்குனர் சபை நிர்வாக கடன் குழுவின் (BECC) குறிப்பு இல. 708/2021 இன் படி, அறவிடவேண்டிய ரூபா.3,062.7 மில்லியன் தொகையான மூலதனம் 7 ஆண்டுகள் வரை 9.75 சதவீத வட்டியில் (18 மாதங்கள் மூலதனத் திருப்பிச் செலுத்துவதற்கான சலுகைக் காலம்) 4 கடன்கள் மறுசீரமைக்கப்பட்டன மற்றும் ரூபா.806.9 மில்லியன் தொகையுடைய நிலுவைத் தொகை வட்டி மற்றும் அபராத வட்டி என்பன 3 ஆண்டுகள் வரை 9.75 சதவீத வட்டியில் 4 கடன்கள் மறுசீரமைக்கப்பட்டது.

- 28 ஜுன் 2021 திகதியிட்ட இயக்குனர் சபை நிர்வாக கடன் குழுவின் (BECC) குறிப்பு இல.708/2021 இன் பந்தி 9 இன் படி,

மற்றும் மொறகொல்லவில் உள்ள முதன்மை அடமானம் ஆகியவற்றிற்கு மேலதிகமாக எட்டு (08) மறுசீரமைப்புக் கடன்களுக்கும் தனிப்பட்ட உத்தரவாதமும் உறுதிமொழிக் குறிப்புகளும் எடுக்கப்பட்டுள்ளன.

முன்மொழியப்பட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்ட திரண்ட கடன்கள் வட்டி உட்பட மொத்த மூலதன நிலுவைத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட உத்தரவாதர்களின் சொத்து வெளிப்படுத்துகை படிவங்களில் உத்தரவாதர்களின் சொத்துதின் அடிப்படை தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

எவ்வாறாயினும்,

“வேறுபாடு மற்றும் பின்னர் பதிவழித்தல்” என மேலதிக வசதிகள் மீதான ரூபா.400 மில்லியன் வட்டியை நீக்கி கடன்கள் மறுசீரமைக்கப்பட்டது.

- மேலே உள்ள இயக்குனர் சபை நிர்வாக கடன் குழுவின் குறிப்பின் 11.4 ஆம் பிரிவின் படி இரண்டு சபை இயக்குநர்களின் தனிப்பட்ட உத்தரவாதங்களைப் பெறுவது பரிந்துரைக்கப்பட்டது. இதன்படி, ரூபா 1,632.2 மில்லியன் பெறுமதியான 7 கடன்களுக்கு மட்டுமே பணிப்பாளர்களின் தனிப்பட்ட உத்தரவாதங்களும் உறுதிமொழித் தாள்களும் பெறப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், உத்தரவாதம் அளிக்கப்பட்ட பணிப்பாளர்கள் தலா ரூபா.100 மில்லியன் பங்குகளின் மதிப்பை படிவ இல.149 மூலம் மட்டுமே சமர்ப்பித்துள்ளனர் மற்றும்

கம்பனியின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாகவும் மற்றும் வழக்கு மூலம் மொறகொல்ல ஆதனத்தின் வெற்றிட உரிமையை பெற்ற பிறகும் வழங்கிய கடனை மீளப்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| உறுதிப்படுத்தும் ஆதாரங்காள் கூட வங்கியால் பெறப்படவில்லை.<br><br>• ரூபா.3,869.2 மில்லியன் மூலதன நிலுவைத் தொகை மற்றும் ரூபா.507.6 மில்லியன் வட்டியை உள்ளடக்கிய மொத்த நிலுவைத் தொகையான ரூபா.4,376.86 மில்லியன்கள் மேலே உள்ள வாடிக்கையாளரின் கீழ் 2022 டிசம்பர் 31, இல் பதிவு செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தற்போதுள்ள ரூபா.1,912.8 மில்லியன் மதிப்புடைய பத்திரங்களின் (2022 ஒக்டோபர் 04 நிலவரப்படி) கடன் மதிப்பில் 43.7 சதவீதத்தை மீட்டெடுக்க மட்டுமே போதுமானது என அவதானிக்கப்பட்டது. | | | | |
| XI. தரவுக் களஞ்சியம் மற்றும் வணிக நுண்ணறிவு முறைமை செயற்திட்டம் | 2022 | வங்கி நிதிகளின் திறம்பட மற்றும் திறமையான பயன்பாட்டை | 2022 மே 04 ஆம் திகதி இடம்பெற்ற COPE கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டதன் படி வங்கியினால் | செயற்திட்ட முகாமைத்துவ தலைவர் மற்றும் கனிஷ்ட |

2022 மே 30 இல் உள்ளபடியாக மேலே உள்ள செயற்திட்டத்திற்கு ரூபா. 402,026,172 (வரிக்கு முன்) வங்கியால் செலுத்தப்பட்டதுடன் மற்றும் செயற்திட்டம்திட்டம் முடிக்கப்படவில்லை. முன்மொழியப்பட்ட 11 தொகுதிக் கூறுகளில், 4 தொகுதிகள் மட்டுமே [DW & DQ I Module, DW & DQ II Module (5 அறிக்கைகள் மட்டுமே), செயல்பாட்டு இடர் தொகுதிக்கூறு, சந்தை இடர் தொகுதிக்கூறு) நேரலையில் சென்றுள்ளதுடன் அந்த தொகுதிகளின் எதிர்பார்த்த முடிவுகள் பயனர்களுக்கு வழங்கப்படவில்லை. மேலும், மென்பொருள் உரிமம் 2020 ஆம் ஆண்டில் காலாவதியானது மற்றும் தற்போது பூர்த்தி செய்யப்பட்ட தொகுதிக்கூறுகளும் செயல்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

உறுதி செய்யவும் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். மேலும், வங்கிக்கு எந்தப் பயனும் இல்லாமல் கணிசமான செலவை ஏற்படுத்திய பின்னர் இடைநிறுத்தப்பட்ட தரவுக் களஞ்சிய மற்றும் வணிக நுண்ணறிவு முறைமை செயற்திட்டம் குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு, செலவை மீட்டெடுக்க அல்லது செயற்திட்டத்தை முடிக்க தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

விரவான உள்ளக கணக்காய்வு மீளாய்வு நடாத்தப்பட்டது. கணக்காய்வு அறிக்கை BAC எண். 07/2023) ஊடாக சபை கணக்காய்வு குழுவிற்கு (BAC) கையளிக்கப்பட்டு நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. அதன் பிரகாரம், எதிர்காலத்தில் இவ்வகையாக குறைபாடுகள் மீண்டும் ஏற்படுவதை தவிர்க்க செயற்திட்ட முகாமைத்துவக் கொள்கையின் தேவைகள் மற்றும் செயற்திட்ட முகாமையாளராக தகுதிவாய்ந்த அலுவலகர் அல்லது அலுவலர்களின் ஆட்சேர்ப்பு உட்பட உள்ளகக் கணக்காய்வாளரினால. மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்த BAC அறிவுரை வழங்கியது.

இயக்குனர் சபையின் அனுமதியினை பெற்ற பிறகு சிரேஷ்ட மட்ட செயற்திட்ட முகாமை பிரதானியினை நியமிப்பினை உள்ளடக்கி வங்கியானது முறையான செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகர் (PMO) ஒருவரை வெற்றிகரமாக

செயற்திட்ட அலுவலகர் ஏற்கனவே முகாமைத்துவ அலுவலகத்தில் உள்ளனர். அனுமதிக்கப்பட்ட கட்டமைப்பின் பிரகாரம் மேலதிக செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வருகின்றனர்.

ஸ்தாபித்தது. புதிய தகவல் தொழில்நுட்ப செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன் தொடர்புடைய பங்குதாரர்களுடன் இணைந்து முழுமையான சாத்தியள ஆய்வினை PMO மூலம் நடாத்துகிறது. இதற்கு மேலதிகமாக, செயற்திட்ட முகாமைத்துவ வாழ்க்கை வட்டத்தினை கட்டுப்படுத்த தேவையான சகல செயற்பாட்டு ஆவணங்களும் தயாரிக்கப்பட்டதோடு, அவைகள் செயற்பாட்டில் உள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| XII. | 2023 ஆம் ஆண்டின் போது வங்கியால் ரூபா.40.31 மில்லியன் மூலதனமும் ரூபா.26.93 மில்லியன் வட்டியும் என்றவாறு மொத்தமாக ரூபா.67.24 மில்லியன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தள்ளுபடி செய்யப்பட்ட நிலுவைகளில் இருந்து 2023 ஆம் ஆண்டில் ரூபா.190.57 மில்லியன் மீட்கப்பட்டது. | 2023 அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளின படி தகுதியுள்ள வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் மற்றும் முன்பணங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை சரியாகவும் மற்றும் திறமையாகவும் மேற்கோள்ளவும். மேலும், இணங்காததற்கு பொறுப்பான தரப்பினருக்கு எதிராக தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் மற்றும் வங்கியின் உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஆரோக்கியமான கடன் வகைகளினை பேணப்படுவதை உறுதிப்படுத்தி வங்கி நிறைய பிரிவுகளில் கடன் மதிப்பீட்டு நடவடிக்கையினை பலப்படுத்தியுள்ளது.<br><br>மேலும், வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் உரிய நேரத்தில் அறவிடுவதனை உறுதி செய்வதற்காக வங்கி பலமானதொரு மீட்பு செயன்முறையினை ஸ்தாபித்துள்ளது. | - |

| ஆண்டுகள் | ரூ. மில்லியன் | | | |
|---|---|---|---|---|
| | பதிவளிக்கப்பட்ட மீதிகள் | | | பதிவளிப்பு மீதிகளினை மீளப்பெற்றமை |
| | மூலதனம் | வட்டி | மொத்தம் | |
| 2021 | 108.86 | 761.26 | 870.12 | 15.29 |
| 2022 | 276.67 | 365.45 | 642.12 | 15□.35 |
| 2023 | 40.31 | 26.93 | 67.24 | 190.57 |

| | | | | |
|---|---|---|---|---|
| XIII. | 2023 டிசம்பர் 31 2023 இல் மத்திய அரசு மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு உரித்துடைய மொத்த நிலுவையில் உள்ள கடன்கள் மற்றும் முன்பணங்கள் ரூபா 781,402 மில்லியன் அல்லது வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 42.32 சதவீதம் என பதிவு செய்யப்பட்டுள்ளது . இருப்பினும், அரசுக்கு சொந்தமான நிறுவனங்ககளின் நிலுவையில் உள்ள கடன் நிலுவைகள் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா. 90,217 மில்லியனால் அல்லது 10.35 சதவீதத்தினால் குறைந்துள்ளது.<br><br>31 டிசம்பர் 2023 நிலவரப்படி, அரசாங்கத்திடமிருந்து முதலீடுகள் மற்றும் பிற வரவுகளின் மொத்தத் தொகை ரூபா.1,041,466 மில்லியனாக இருந்ததற்கு அமைய மத்திய அரசு மற்றும் அரசுக்கு | அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் படி தகுதியுள்ள வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் மற்றும் முன்பணங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை சரியாகவும் மற்றும் திறமையாகவும் மேற்கோள்ளவும். மேலும், இணங்காததற்கு பொறுப்பான தரப்பினருக்கு எதிராக தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் மற்றும் வங்கியின் உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வங்கியின் இடர் - விருப்பத்திற்கு ஏற்ப, GOSL மற்றும் SOE களுக்கான வெளிப்பாடுகளை குறுகிய மற்றும் நடுத்தர காலத்திற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு படிப்படியாகக் குறைப்பதற்காக, உள்ளக இடர் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரம்புகள் மற்றும் நிறுவப்பட்ட இலக்குகளை வங்கி தொடர்ந்து மதிப்பாய்வு செய்து திருத்துகிறது.<br><br>மேலும், வங்கியின் அளவு மற்றும் சிக்கலான தன்மையைக் கருத்தில் கொண்டு பொது திறைசேரியால் வழங்கப்படும் பிணையின் அடிப்படையில் SOE களால் பெறப்பட்ட கடன் வசதிகளை உறுதி செய்வதற்காக நெருக்கமான கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தல் ஆகியவை கடன் அபாயத்தைத் தணிக்கவும் மற்றும் பணப்புழக்கம், வருவாய் மற்றும் மூலதனத்தை ஒழுங்குமுறை தேவைகளுக்கு மேல் திருப்திகரமான அளவில் பராமரிக்கவும் சரியான நேரத்தில் சேவை செய்யப்படுகின்றன. | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சொந்தமான நிறுவனங்ககளின் மொத்த வெளிப்பாடு ரூபா.1,822,868 மில்லியனாக இருந்தது, மேலும் இது வங்கியின் மொத்த சொத்துக்களில் 60 சதவீதமாகும். | | | எந்த சந்தேகத்தையும் தவிர்க்க, இது சம்பந்தமாக பின்வருவனவற்றை முன்னிலைப்படுத்த வேண்டும்.<br>• பண வரம்பு வசதிகள் தவிர்த்து கொடுக்கப்பட்ட SOE வெளிப்பாடு வரம்புகளின் கீழ் மட்டுமே வசதிகள் கருதப்படுகின்றன.<br>• வரம்புகளை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு மாத இறுதியிலும் SOE வெளிப்பாடு DGMக்கு (இடர் முகாமை) தெரிவிக்கப்படுகிறது.<br>• பண வரவு வசதிகளைத் தவிர்த்து SOE களுக்குகக்கு புதிய வசதிகள் எதுவும் 2024 இல் கருதப்படவில்லை. | |
| XIV. | சிரேஸ்ட பிரஜைகள் நிலையான வைப்புகளில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய வட்டி நிலுவைத் | 2023 | மேலும் தாமதிக்காமல் பெறவேண்டிய பணத்தினை அறவீடு செய்வதற்கு தேவையான நடடிவடிக்கை எடுக்கவும். | தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இதன் விளைவாக, 2024 ஏப்ரல் 18 அன்று ரூபா 4.2 பில்லியன் பெறப்பட்டது. மீதிக்கான பின்தொடர்தல் | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகை 2023 திசெம்பர் 31 இல் ரூபா. 22,594.87 மில்லியன் என அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும் 2023 ஆம் ஆண்டில் பொது திறைசேரியிலிருந்து வங்கிக்கு ரூபா.959.49 மில்லியன் மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | | . | தொடர்கிறது. | |
| XV. | டிசென்றோ ரிஸோர்ட் தனியார் கம்பனி<br><br>2017 ஒக்டோபர் 17 முதல் 2018 ஆகஸ்ட் 31 வரையிலான 10 மாத காலப்பகுதியில் டிசென்றோ ரிஸோர்ட் தனியார் கம்பனிக்கு நான்கு (4) கடன் வசதிகள் மற்றும் 1 மேலதிகப்பற்று வசதி என்பன ரூபா.36.5 மில்லியனுக்கு அளிக்கப்பட்டது. இவை 2018-2019 காலப்பகுதியில் செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டது. 2023 டிசம்பர் 31 இல் ரூபா.84.48 மில்லியன் நிலுவைத் தொகை பதிவு செய்யப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட வசதிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள | 2023 | கடன் தவணைகளை வசூலிக்கவும், இணங்காமை தொடர்பில் பொறுப்புவாயந்த தரப்பினர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவும். | வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதிகள் வழங்கும் போது வங்கியில் உள்ள சுற்றறிக்கையின் வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்குமாறு சகல கடன் ஊழியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>அதுமட்டுமல்லாமல், அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூறுகளை கண்காணிக்க அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.<br><br>கடன் இடரினை குறைத்துக்கொள்வதற்காக ஊழியர்களின் அறிவை மேம்படுத்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. | - |

ன.

(அ) ரூபா.8.5 மில்லியன் பெறுமதியுடைய நிரந்தர மேலதிகப்பற்றுவசதி (POD)

- ரூபா.8.5 மில்லியன் நிலையான மேலதிகப்பற்று வசதியை வழங்குவது தொடர்பில் உதவி பொது முகாமையாளர் மூலம் (ஏஜீஎம்) மூலம் 2018 மார்ச் 08 ஆம் திகதியன்று தலைமை நிர்வாக அதிகாரிக்கு (சிஇஓ) வழங்கப்பட்ட குறிப்பாணையின்படி வணிகத்தின் செயல்பாட்டு மூலதனத்திற்காக அந்த வசதி கோரப்பட்டாலும், முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. மேலும், தற்போதுள்ள வருமானத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் ஆண்டு வருமானம், கடன்கள் மூலம் வருமானத்தின் மீதான கூடுதல் சுமையினை கணிக்க முடியாது என்பதுடன் இது திருப்பிச் செலுத்தும் கடனையும்

பாதிக்கும். உதவி பொது முகாமையாளர் (கடன் கட்டுப்பாடு) குறிப்பின் படி, குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள் காரணமாக திருப்பிச் செலுத்தும் திறன் குறைவாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- பெனல் மதிப்பீட்டாளர் மற்றும் பிராந்திய முகாமையாளர் (காலி) மூலம் நடாத்திய 2018 பெப்ரவரி 13 மற்றும் 2018 பெப்ரவரி 16 திகதிட்ட அறிக்கைகளின்படி, அடமானம் வைக்கப்பட்ட ஆதனத்தின் பயனுள்ள விற்பனை பெறுமதி ரூபா.40 மில்லியன் ஆகும். இருப்பினும், மதிப்பீட்டுக் குழுவின் துணைப் பொது முகாமையாளரின் (DGM) அறிக்கையின்படி, மேற்கூறிய அடமான ஆதனத்தின் கட்டாய விற்பனை பெறுமதி ரூபா.28.5 மில்லியனாக இருந்தது, இது ஒரு ஆலோசகர்

மதிப்பீட்டாளரால் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் இருந்தது.

- உதவிப் பொது முகாமையாளர் (கடன்) மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (கடன் கட்டுப்பாடு) ஆகியவற்றின் இரண்டு முகாமையாளரகள், பிராந்திய முகாமையாளரை விட அதிக அதிகாரம் பெற்றவர்கள், தங்கள் குறிப்பில் நிலையான மேலதிகப்பற்று வசதியை வழங்குவதற்கான அபாயத்தை வலியுறுத்தினர் மற்றும் DGM குழுவும் சொத்தின் கட்டாய விற்பனை பெறுமதியை ரூபா.28.5 மில்லியன் என குறிப்பிட்டுள்ளது. எவ்வாறாயினும், ரூபா.40 மில்லியனுக்கும் அதிகமான சொத்தின் கட்டாய விற்பனை பெறுமதி மீதான பிராந்திய முகாமையாளரின் (RM) சான்றிதழின் அடிப்படையில், சிரேஷ்ட

துணைப் பொது முகாமையாளரால் (SDGM) (வணிக வங்கி) மேலே உள்ள நிலையான மேலதிகப்பற்று வசதி தலைமை நிர்வாக அதிகாரியினால் பரிந்துரைக்கப்பட்டது. ரூபா.8.5 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட நிலையான மேலதிகப்பற்று வசதியுடன், 14 மார்ச் 2018 நிலவரப்படி, சொத்து அடமானத்தின் மீது வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கடன்களின் மொத்த மதிப்பு ரூபா.31.5 மில்லியனாக அதிகரிக்கப்பட்டு, அதன்படி, அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் கட்டாய விற்பனை பெறுமதி விட மேலதிகமாக ரூபா.3 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மேலும், மேற்கூறிய சொத்தின் அடிப்படையில் காலி பிராந்திய முகாமையாளர் , சிரேஷ்ட

முகாமையாளர் (கடன), உதவி பொது முகாமையாளர் (வணிகக் கடன்), பிரதி பொது முகாமையாளர் (வணிக வங்கி மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்) ஆகியவர்களின் சிபாரிசுகளின் அடிப்படையில் ரூபா.3.5 மில்லியன் மற்றும் ரூபா.1.5 மில்லியன் மதிப்புள்ள மேலும் 2 வசதிகள் தலைமை நிர்வாக அதிகாரியின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டன.

(இ) 2023 திசெம்பர் 31 இல் வாடிக்கையாளரின் மொத்த நிலுவைத் தொகை ரூ. 84.48 மில்லியன் இருந்ததுடன் அதில் மொத்த மூலதனம், வட்டி மற்றும் இதர நிலுவைகள் முறையே ரூ.34.48 மில்லியன், ரூ. 48.08 மில்லியன் மற்றும் ரூ.1.92 மில்லியன் ஆக இருந்தன. 2023 பெப்ரவரி 01 ஆம் திகதியிடப்பட்ட குழு மதிப்பீட்டாளரால்

சமர்ப்பிக்கப்பட்ட சமீபத்திய மதிப்பீட்டு அறிக்கையின்படி, அந்த ஆதனத்தின் கட்டாய விற்பனைப் பெறுமதி ரூ. 44 மில்லியன் ஆகும். இந்தச் ஆதனத்தின் ஏலம் 5 முறை இடைநிறுத்தப்பட்டு 2023 ஜூலை 19 அன்று இந்த ஆதனம் ஏலம் விடப்பட்டது மற்றும் ஏலத்தில் ஏலம் எடுக்க வாங்குபவர் யாரும் இல்லாததால் வங்கியால் கையகப்படுத்தப் பட்டது. வங்கி வழங்கிய தெளிவுபடுத்தலின்படி, கணக்காய்வு திகதியான 2024 மார்ச் 14 வரை வங்கியால் அந்த சொத்தை அகற்றுவதற்கு கம்பனிக்கு முடியாமல் இருந்தது.

(ஈ) மேலும், உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2023 திசெம்பர் 04 ஆம் திகதிய கணக்காய்வு அறிக்கையின்படி, மேற்கூறிய ஆதனத்தில்

| | | | | |
|---|---|---|---|---|
| புனரமைப்புகள் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் வெளித்தோற்றததில் அவ்வாறானவை எதுவும் கவனிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. | | | | |
| XVI. ஐடியா இண்டஸ்ட்ரீஸுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான அவதானிப்புகள்<br><br>(அ) தேசிய அபிவிருத்தி வங்கியில் தற்போதுள்ள தவணைக் கடனான ரூபா 890 மில்லியன் நிலுவைத் தொகையுடன் கையகப்படுத்துவதற்கான ஐடியா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திடம் இருந்து 2020 செப்தெம்பர் 25 ஆம் திகதியன்று கோரிக்கை பெறப்பட்டது. பூர்வாங்க மதிப்பீட்டின்படி, வாடிக்கையாளரின் திருப்தியற்ற கடன் பணியக அறிக்கை மற்றும் உயர் கியரிங் ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளன, மேலும் அதன் செயல்பாட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட | 2023 | கடன் தவணைகளை வசூலிக்கவும், இணங்காமை தொடர்பில் பொறுப்புவாயந்த தரப்பினர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவும். | இவ்வகையான சூழ்நிலைகள் எதிர்காலத்தில் ஏற்படுவதை தவிர்க்க பொது அறிவுறுத்தல்கள் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன.<br><br>மேலும், அத்தகைய அறிவுறுத்தல்கள் மற்றும் கடன் கொள்கை கையேடு என்பவற்றை கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு வாடிக்கையாளர் தொடர்பு உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | 2024 மே 15 அன்று வாடிக்கையாளருடன் கடைசியாக நடந்த கூட்டத்தின் கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிவின் அடிப்படையில், செயற்பாடற்ற நிலுவைகளை மீள்சீரமைக்க வாடிக்கையாளர் மற்றும் வங்கி பரஸ்பரமாக உடன்பட்டனர;<br><br>(i) செயற்பாடற்ற குறுங்கால (STL) நிலுவை மூலதனத்தினை ரூபா 262.32 மில்லியனை 06 மாத கருணை |

2017 முதல் 3 வருட காலப்பகுதியை மட்டுமே நிறைவு செய்துள்ளது. இருப்பினும், 2021 ஜனவரி 27 ஆம் திகதிய வணிக ஆய்வு அறிக்கையின்படி, இது பரிந்துரைக்கப்பட்டது. கம்பனியின் செயல்பாட்டு மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்ய கடன் வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஒக்தோபர் 07 ஆம் திகதிய CPM 581/2004(66) அத்தியாயம் 5 இன் பிரிவு 2.3 (சரிபார்ப்புப் பட்டியல்) மூலம் தேவைப்படும் தீர்ப்பனவுச் சான்றிதழ் பெறப்படவில்லை.

(இ) முகாமையாளர் மற்றும் உதவி பொது முகாமையாளர் - ஆ/ப் ஷோர் மற்றும் கார்ப்பரேட் பேங்கிங் 01 மூலம் 2021 பெப்ரவரி 18 ஆம் திகதிய சபை நிர்வாக கடன் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு எண்.CP/CB/OBU/

காலப்பகுதியினை உள்ளடக்கி 05 வருடங்களினுள் செலுத்தப்படும் தவணைக் கடனாக மாற்றுதல்.

(ii) அவ்வகையான செயற்பாடற்ற குறுங்கால (STL) நிலுவையின் அட்டுரு வட்டி ரூபா 105 மில்லியனை வட்டி மூலதன கடனாக (ICL) 05 வருடங்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு மறுசீரமைக்கப்படும் திகதி வரையான தண்ட வட்டியினை தள்ளுபடி செய்தல்.

கடன் மறுசீரமைப்பு முன்மொழிவு அடுத்த இயக்குனர் சபை நிர்வாக

BECC/016/2021 இல் உள்ள விவரங்களின்படி ஐடியா இண்டஸ்ட்ரீஸுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,236 மில்லியன் தொகையில் 2021 ஜனவரி 31 இல் உள்ளபடியான நிலுவையில் உள்ள கடன் நிலுவைத் தொகை ரூபா.1,115 மில்லியனாக இருந்தது. இருப்பினும், வழங்கப்பட்ட மூலதனம் ரூபா.2.5 மில்லியன் மட்டுமே மற்றும் 2020 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 இல் உள்ளபடியாக லிவரேஜ் விகிதம் முறையே 7.68 மற்றும் 13.80 என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், கடன் மற்றும் நடைமுறை கையேட்டின் தலைப்பு 26 இன் இணைப்பில் உள்ள இடர் ஏற்பு அளவுகோல் சரிபார்ப்புப் பட்டியலின்படி, கடந்த 3 ஆண்டுகளின் லிவரேஜ் விகிதம் 3 க்கும் குறைவாக இருக்க வேண்டும்.

கடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும்.

(ஈ) இயக்குனர் சபை நிர்வாகக் கடன்

குழு இல.239/2021 இன் வரம்புத் குறிப்பு விவரங்களின்படி, ஐடியா இண்டஸ்ட்ரீஸ் மற்றும் ஐடியா மெட்டலின் 2021/2022 நிதியாண்டிற்கான முன்மொழியப்பட்ட ஒருங்கிணைப்பைக் கருத்திற் கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அறிக்கையில் கடன்பெற்றவரின் நிதி நிலை மதிப்பீடு செய்யப்படடிருந்தன. எவ்வாறாயினும், ஐடியா மெட்டல் நிறுவனம் மற்றும் ஐடியா இண்டஸ்ட்ரீஸ் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை உறுதி செய்ய எந்த ஆவண சான்றுகளும் கடன் கோப்பில் காணப்படவில்லை. மேலும், ஐடியா இண்டஸ்ட்ரீஸுக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டதால், ஒருங்கிணைந்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில் செய்யப்பட்ட மதிப்பீடு துல்லியமாக இல்லை.

(உ) மேலும், ஐடியா இண்டஸ்ட்ரீஸின் ரூபா.2.5 மில்லியனை

ஒப்பிடும் போது, ஏனைய வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய ரூபா.1,115 மில்லியன் கடன் நிலுவைத் தொகை மிக அதிகமாக உள்ளதுடன் இந்த விடயம் BECC எண்.239/2021 இன் வரம்பு தாளில் சேர்க்கப்படவில்லை. மேலும், இடர் பிரிவு விளிம்பு நிலை வட்டி சேவை கவர் விகிதம் மற்றும் 3 இற்கு மேல் உள்ள லிவரேஜ் மட்டும் உயர்த்திக் காட்டியது.

(ஊ) அதன்படி, கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களுக்கான உரிமை, இயக்குனரின் தனிப்பட்ட உத்தரவாதம் மற்றும் மாதத்திற்கு ரூபா.1 மில்லியன் பண வரம்பை உருவாக்கும் பத்திரங்களின் அடிப்படையில் 2021 மார்ச் 12 ஆம் திகதிய 239/2021 திகதியிட்ட இயக்குனர் சபை நிர்வாகக் குழு குறிப்பு மூலம் நாணயக் கடிதம்/ ஏற்றுக்கொள்ளுதல்

/ குறுகிய காலக் கடன் உட்பட ரூபா 600 மில்லியன் கடன் தொகுதி ஐடியா இண்டஸ்ட்ரீஸுக்கு அனுமதிக்கட்டுள்ளது.

- 2015 ஒக்தோபர் 07 ஆம் திகதிய 581/2004(66) ஆம் இலக்க கடன் நடைமுறை கையேட்டின் தலைப்பு 5 இன் 9.4.1 அத்தியாயத்தின் பிரகாரமும் தலைப்பு 5 இன் 8.13 ஆம் அத்தியாயத்தின் பிரகாரமும் கடனை திருப்பிச் செலுத்தும் இயலுமையை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு உத்தரவாததாரருக்கும் சொந்தமான சொத்துகளின் பட்டியலைப் பெற வேண்டும் என்பதுடன் வங்கியின் முன் அனுமதியின்றி அந்த சொத்துக்களை அப்புறப்படுத்தாமல் இருப்பதற்கான எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தைப் பெறவும் வேண்டும்.

எனினும், உத்தரவாததாரர்களின் நிதி நம்பகத்தன்மையை மதிப்பிடுவதற்கான விவரங்கள் மற்றும் உத்தரவாதம் அளிப்பவர்களுடனான அத்தகைய ஒப்பந்தம் காணப்படவில்லை. உத்தரவாததாரரின் சொத்து விவரங்கள் வங்கியால் பெறப்பட்டாலும், அடமானத்தின் மூலம் சொத்துக்களின் தெளிவான உரிமை பெறப்படவில்லை. எனவே, மேற்கூறிய ஒப்பந்தம் அதற்கேற்ப செல்லுபடியான ஆவணமாக மாறாது.

- 2021 பெபரவரி 18 இல் கார்ப்பரேட் வங்கிப் பிரிவு (CBD-1) நிர்வாகக் கடன் குழுவிடம் சமரப்பிக்கப்பட்ட ஆவணத்தின்படி, தலைமை நிர்வாக அதிகாரி வணிக வீசா அடிப்படையில்

நிரந்தரமாக அவுஸ்திரேலியாவிற்கு இடம்பெயர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன் உதவி பொது முகாமையாளரின் (ஆ.்.ப் ஷோர் மற்றும் பெருநிறுவன வங்கியியல் - கடன்) 2023 ஜனவரி 31 ஆம் திகதி ஆய்வு அறிக்கையின் படி மேற்குறிப்பிட்ட நபர் அவுஸ்திரேலியாவில் வசிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு, நிரந்தர வதிவிட அடிப்படையில் அவர் ஆஸ்திரேலியாவிற்கு குடிபெயரவிருந்த போதிலும், தலைமை நிர்வாக அதிகாரியின் தனிப்பட்ட உத்தரவாதத்தை வங்கி ஏற்றுக்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

- 2021 மார்ச் 12 ஆம் திகதிய BECC குறிப்பு எண்.239/2021

இன் முடிவின்படி, மாதம் ரூபா 01 மில்லியனை மார்ஜின் கணக்கை உருவாக்க மாதத்திற்கு ரூபா 1 மில்லியனை மாற்றுமாறு பரிந்துரைக்கப்பட்ட போதிலும் 2021 மார்ச் 15 ஆம் திகதிய சலுகைக் கடிதத்தின்படி, மாதத்திற்கு 02 மில்லியனை மாற்றுமாரு வங்கியானது கடன் எடுத்தவருக்கு தெரிவித்திருந்தது. எவ்வாறாயினும், 2021 ஒக்டோபர் 27 ஆம் திகதிய BECC குறிப்பு எண்.1119/2021 இன் படி, (அனுமதிக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே) மாதத்திற்கு ரூபா.2,000,000 மதிப்புள்ள மார்ஜின் கணக்கை உருவாக்குவதற்கான தேவை வெளிநாட்டு நாணயக் கடித வசதிகளுக்கு தளர்த்தப்பட்டது. ரூபா.1

| | | | | |
|---|---|---|---|---|
| மில்லியன் வரம்பு இருந்தாலும், கம்பனியின் நன்னடத்தை காரணமாக கம்பனியினால் மாதாந்தம் ரூபா.2 மில்லியனை வைப்பு செய்துள்ளதாக மேற்படி தீர்மானம் நியாயப்படுத்தப்பட்டுள்ளதுடன் வங்கியினால் சலுகைக் கடிதத்தில் நிபந்தனை தொடர்பில் குறிப்பிடப்படவில்லை<br>(எ) கடனைத் திருப்பிச் செலுத்தாமை காரணமாக ஐடியா இண்டஸ்ட்ரீஸின் கிரெடிட் பேக்கேஜ் ஆனது செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டது. இதன்படி, 2023 டிசம்பர் 31 இல் மூலதன மீதி ரூபா.257.2 மில்லியன் மற்றும வட்டி மீதி ரூபா.58.9 மில்லியன் எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. | | | | |
| (xvii) இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெற வேண்டிய ஐ.அ.டொலர் 29.6 | 2023 | வங்கியின் கட்டுப்பாடுகளை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். | கிடைக்கக்கூடிய தகவலின் அடிப்படையில் திறைசேறி முற்ற அலுவலகத்தினால் (TFO) எதிர்வு | தற்போது வங்கி திரவத்தன்மை பற்றாக்குறையினை எதிர்கொள்ள |

மில்லியனுக்கு எதிராக இலங்கை மத்திய வங்கியுடனான ஐ.அ.டொலர் 43 மில்லியன் பரிமாற்ற (swap) ஒப்பந்தத்தின் தீர்வு

சபை பத்திர எண். 624/2023 இல் உள்ள விவரங்களின்படி, 2023 மே 02 அன்று USD 43 மில்லியன் SWAP முதிர்ச்சியடைகிறது என்றும் அதைத் தொடர்ந்து சுழற்ற முடியாது என்றும் இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச சர்வதேச செயல்பாட்டுத் துறை ஏப்ரல் மாதம் தெரிவித்தது. அதன்படி, 2023 மே 02 அன்று முதிர்ச்சியடையும் 43 மில்லியன் அமெரிக்க டொலர் பரிமாற்றத்தில் இருந்து 29.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை வங்கி செலுத்திய இலங்கை மத்திய வங்கிளின் பட்டியல்களின் மீதித் தொகையையும், மீதித் தொகையான 13.4 மில்லியன் அமெரிக்க டாலர்களையும் செலுத்துமாறு வங்கி கோரியது. 02 மே 2023 அன்று

கூறப்பட்ட இலங்கை ரூபா மற்றும் வெளிநாட்டு நாணயம் என்பன தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகிறது. மேலும், TFO மூலம் காலத்திற்கு காலம் வங்கியின் திரவத்தன்மை தொடர்பில் சொத்து மற்றும் பொறுப்பு குழுவிற்கு (ALCO ) இற்றைப்படுத்துகிறது.

எதிர்தீர்த்தல் தொடர்பில் தேவையான மாற்றங்களை திறைசேரி கொள்கையில் உள்ளடக்கி வங்கி தேவையான நடவடிக்கைகளை எடுத்ததோடு இயக்குனர் சபையினால் அனுமதிக்கப்பட்டது.

வில்லை.

வங்கி 2024 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு வங்கிகளுக்கிடையிலான சந்தையில் ஐ.அ.டொ. 109 தேறிய மிகையினை கொண்டுள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

நிலுவையான SWAP பரிவர்த்தனைகள் அனுமதிக்கப்பட்ட எல்லையினுள் உள்ளன.

வங்கி. அமெரிக்க டொலர் பரிவர்த்தனையை நிகர அடிப்படையில் எதிர்தீர்த்தல் செய்யும் போது ரூபாய் தொகையை மொத்த அடிப்படையில் செலுத்துமாறு மேலும் வங்கி கோரியுள்ளது. எவ்வாறாயினும், அமெரிக்க டொலர் மற்றும் இலங்கை ரூபா பரிவர்த்தனைகள் இரண்டும் SWAP இன் ∴பார் லெக் ரேட்டைப் பயன்படுத்தி நிகர அடிப்படையில் தீர்பனவு செய்யப்பட்டது. அதன் விளைவாக இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெற வேண்டிய ஐ.அ.டொலர் 29.6 மில்லியனுக்கு எதிராக இலங்கை மத்திய வங்கியுடன் 43 மில்லியன் அமெரிக்க டாலர்களை மாற்றியமைத்ததன் காரணமாக வங்கியின் கணக்குகளில் ரூபா.1,613.36 மில்லியன் நட்டம் என பதிவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட திறைசேரிக் கொள்கை அல்லது செயல்பாட்டின்

| | | | | |
|---|---|---|---|---|
| நடைமுறை - திறைசேரி முன் அலுவலகம் இந்த இடமாற்றுப் பரிமாற்றம் போன்ற செட் ஆ.்.ப் பரிவர்த்தனையை உள்ளடக்கியிருக்கவில்லை என்பதுடன் இது தொடர்பாக தெளிவான வழிகாட்டுதல்கள் எதுவும் காணப்படவில்லை. மேலும், மேற்கூறிய பரிவர்த்தனைக்கான முன் அனுமதி கிடைக்கவில்லை என்பதோடு இலங்கை மத்திய வங்கியால் செய்யப்படும் நாணயக் கடித பட்டியல்களுக்கான ஐ.அ.டொடர் கொடுப்பனவுகளுக்கு எதிராக அந்தந்த இடமாற்றத்தை அமைப்பதற்கு முன் CBSL உடன் வங்கி சரியான உடன்பாட்டை எட்டவில்லை. | | | | |
| (xviii) மக்கள் வங்கியின் டிரான்சிட் அட்டை திட்டத்தில் முதலீடு<br><br>2018 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 18/1960/808/051 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் டிரான்ஸிட் அட்டை கட்டமைப்பை செயல்படுத்துவதற்க | 2023 | வங்கிக்கு ஏற்பட்ட நட்டத்தினை அறவீடு செய்ய பின்தொடர் நடவடிக்கை எடுக்கவும் மற்றும் மதிப்பீட்டு செயன்முறைைய மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும். | செயற்திட்டம் வெற்றியளிக்காமையினால் எங்களின் சாதாரன வணிகத்தில் வரவு அட்டையினை வழங்குவதற்காக எஞ்சிய அட்டை இருப்புக்களை பாவிப்பதற்கு வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் பிரகாரம், 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு 12,964 வரவு | - |

ஈன ஆரம்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) அங்கீகரிக்கப்பட்ட லங்கா க்னியர் (பிறைவேட்) லிமிட்டட் மூலம் சமர்ப்பித்த தொழில்நுட்ப முன்மொழிவின் அடிப்படையில் டிரான்ஸிட் அட்டைகளை இலவசமாக வழங்குவதற்காக 2021 பெப்ரவரி 23 ஆம் திகதிய 21/0125/312/005 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. 2021 மார்ச் 26 அன்று நடைபெற்ற கூட்டத்தில் BP எண். 272/2021 வழியாக ட்ரான்ஸிட் அட்டை செயற்திட்டத்தைப் பயன்படுத்துவதற்காக, 2 இல் 1 (வரவு + களஞ்சியப்படுத்தப்பட்ட பெறுமதி) ஜப்பான் கிரெடிட் ப்யூரோ (JCB) அட்டைகளை வழங்குவதற்காக வங்கியின் இயக்குநர்கள் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளர்களுக்காக NCS/JCB வரவு அட்டை வழங்குபவராக அட்டைகளை வழங்குவதற்காக ரூபா 55.4 மில்லியன் தற்போதும் பாவிக்க முடியும்.

NCS/JCB கையகப்படுத்துவதற்காக செயற்திட்டத்திற்கு ஏற்பட்ட செலவு ரூபா 21.7 மில்லியன் ஆகும்.

இலங்கை மத்திய வங்கி வீதி வரைபடத்தின் பிரகாரம் கட்டாயமானதாகும். மக்கள் வங்கி மற்றும் ஏனைய வங்கியினால் NCS/JCB அட்டைகளை வழங்குவதுடன் இந்த முதலீட்டு பெறுபேறு பாவனையில் உள்ளது.

மக்கள் வங்கி உட்பட புதிய RFP செயன்முறைகளில் பங்குபற்ற முடியும் என்பதோடு முற்செலுத்துகை அட்டைகள், வரவு மற்றும் செலவு, இலங்கை QR அட்டை தெரிவுகளை வழங்க முடியும். இதனால், முதலீடு

அதன்படி, இலங்கை ட்ரான்ஸிட் அட்டையை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை போக்குவரத்து சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, லங்கா கிளியர் மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றுடன் நான்கு தரப்பு ஒப்பந்தம் 2021 ஏப்ரல் 22 அன்று கைச்சாத்திடப்பட்டது. மேற்படி செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் நிதி நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கிய வெளிப்படையான அழைப்புக்கு பதிலளிப்பதன் மூலம் மக்கள் வங்கி ரூபா. 93 மில்லியன் (சகல வருடாந்த உரிமக் கட்டணம், அட்டை உரிமக் கட்டணம் மற்றும் லங்கா கட்டணத்துடன் தொடர்புடைய மாதாந்திர கட்டணம் தவிர) முதலீடு செய்தது.

(அ) 2020 திசெம்பர் 30 ஆம் திகதியிட்ட 1312/2020 ஆம் இலக்க நிறைவேற்று செயற்பாட்டு குழு

இன்னும் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளது.

பத்திரத்தின் பிரகாரம் பிரகாரம், ஒரு அட்டைக்கான கிரயம் சுமார் ரூபா.250.00 ஆகும் என்பதுடன் வாடிக்கையாளரிட மிருந்து ரூபா.200.00 அல்லது வங்கி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் லங்கா பே ஆகியவற்றிலிருந் து 1∴3 அடிப்படையில் கட்டணம் அறவிட வேண்டும் என குழு கருதியது. இது 2021 ஜனவரி 29 ஆம் திகதிய 41/2021 ஆம் இலக்க சபை பத்திரத்தின் வழியாக இயக்குநர்கள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட து. 166/2021 ஆம் இலக்க சபை பத்திரத்தின் படி, லங்கா பே பரிந்துரைக்கப்பட் டபடி செயற்திட்டத்தின் செலவில் 1/3 பங்கை பகிர்ந்து கொள்ள மறுத்து விட்டது மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதற்கு பதிலளிக்கவில்லை ல. செயற்திட்டத்தின்

மொத்த செலவைக் கருத்தில் கொண்டு, மக்கள் வங்கிக்கு பிரத்தியேக உரிமை அல்லது செலவைப் பகிர்ந்து கொள்ளும் விருப்பம் இருக்க வேண்டும் என்று சபை வலியுறுத்தியது. இருப்பினும், அது வெற்றிபெறாததால், 2021 மார்ச் 26 அன்று நடைபெற்ற இயக்குநர ்கள் குழு கூட்டத்தில், ரூபா.300 டெபிட் கார்டுக்கு மற்றும் ரூபா. 250.00 ட்ரான்ஸிட் அட்டைக்கு வசூலித்து ஜேசிபி அட்டையினை வழங்குவதற்கு முடிவு செய்தது. 2021 பெப்ரவரி 23 ஆம் திகதிய 21/0125/312/005 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் ட்ரான்ஸிட் அட்டைகளை இலவசமாக வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த முடிவை வங்கி பரிசீலிக்கவில்லை.

(ஆ) லங்கா கிளியர் (பிரைவேட்) லிமிடெட் மூலம்

சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவு தொடர்பாக வங்கியின் சாத்தியக்கூறு மதிப்பீட்டிற்கான எந்த ஆதாரமும் காணப்படவில்லை.

(இ) முன்மொழியப்பட்ட செயற்திட்டத்தின் சிரமங்களை எடுத்துக்காட்டி 23/0909/608/060 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது (தற்போதுள்ள டிக்கெட் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட ஜேசிபி அட்டைகளைகளைப் பயன்படுத்துவதற்கு இணங்கவில்லை, பயணிகளிடையே ஜேசிபி அட்டைகள் பிரபலமாக இல்லை, பணத்தை மீண்டும் உள்ளிடுவது கடினம் போன்றவைகள்) மேலும் அமைச்சரவைப் பத்திரத்தில் உள்ள உள்ளடக்கத்தை மேலும் ஆய்வு செய்வதற்கும், இரண்டு வாரங்களுக்குள் பரிந்துரைகளுடன்

கூடிய விரிவான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் திறைசேரி செயலாளர் அல்லது திறைசேரியின் பிரதிச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை நியமிக்கவும் முடிவெடுத்தது. 9 உறுப்பினர்களை உள்ளடக்கிய மேற்படி குழு 2023 ஆகஸ்ட் 25 திகதியிட்ட அமைச்சரவைப் பத்திரம் எண் 23/0909/608/060-I மூலம் அவர்களின் அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளது நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் என்பவைகளின் அவதானிப்புக்களுடன் சேர்த்து அமைச்சரவையின் உப குழுவினால் அவை பரிசீலிக்கப்பட்டது. இதன்படி, இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் இரத்து செய்து, இந்த

செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புதிய முன்மொழிவு கோரிக்கையை (RFP) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மூலம் அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் அதற்கான ஒப்புதலை வழங்க அமைச்சரவைக்கு பரிந்துரைத்தனர். அதன் பின்னர் 2023 செப்டெம்பர் 11 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்படி தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

(ஈ) குழுவின் பரிந்துரை மற்றும் 2023 செப்தெம்பர் 06 ஆம் திகதிய NP/CM/COM/TRN/2023/11 ஆம் இலக்க அமைச்சரவை முடிவின் குறிப்பின் பிரகாரம் பொருத்தமான சேவை வழங்குனரைத் (மக்கள் வங்கியைத் தவிர) தேர்ந்தெடுப்பதற்கான முன்மொழிவுக்கா

| | | | | |
|---|---|---|---|---|
| | ன கோரிக்கையை (RFP) அழைக்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட செயற்திட்டத்திற்காக மக்கள் வங்கியால் ஏற்பட்ட செலவு வங்கிக்கு மொத்த இழப்பாக இருக்கலாம். | | | |
| (xix) | பொது தொழில்முயற்சி குழுவின் பணிப்புரைகளை பின்பற்றாமை<br><br>(அ) 2018 ஜூலை 17 அன்று நடைபெற்ற கோப் கூட்டத்தின் வழிகாட்டுதலின்படி, 60 வயதுக்கு மேற்பட்ட அதிகாரிகளின் சேவையை மற்ற அரச வங்கிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் நீட்டிக்கக் கூடாது என்று கோப் உத்தரவிட்டது. மேற்படி முடிவு 2018 ஆகஸ்ட் 10 அன்று வங்கிக்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், கோப் கூட்டத்திற்கு | 2023 | கோப் குழுவின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி வங்கி நிதியை முறையாகப் பயன்படுத்துவதை உறுதிசெய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்கவு | 2019 செப்டம்பர் 5 அன்று நடைபெற்ற கோப் கூட்டத்தில் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்கள் வங்கியால் ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, வங்கியால் கோப் குழுவிற்கு பரிந்துரைகளின் முன்னேற்றம் குறித்து அறிக்கையிடப்பட்டதுடன், எஞ்சிய விடயம் தொடர்பில் முன்னாள் பிரதான நிர்வாக அதிகாரி அல்லது பொது முகாமையாளர் திரு.வசந்த குமார அவர்களிற்கு ஒப்படைக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான் 2022 மே 04 அன்று நடைபெற்ற COPE இன் 13வது கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. |

முன்னர் 2018 ஜூன் 9 அன்று பெறப்பட்ட சபை அனுமதியின் அடிப்படையில் முன்னாள் பொது முகாமையாளரை 6 மாதங்களுக்கு நீடிப்புக்கு நிதி அமைச்சகத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. 2019 செப்டெம்பர் 05 அன்று நடைபெற்ற கோப் கூட்டத்தில் கமிட்டி வழங்கிய கட்டளையின்படி செயற்படாதது குறித்து கடும் கண்டனத்தை தெரிவித்ததுடன், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும், பொறுப்பான தரப்பினரிடம் இருந்து ஆறு மாத சேவை நீடிப்பு வழங்கியதால் ஏற்பட்ட நட்டத்தை மீளப்பெறுமாறும் அறிவுறுத்தியிருந்தனர். இருப்பினும், இது தொடர்பாக வங்கி நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) CAI - 4646 எனும் இலக்கமுடைய D Mercedes Benz வாகன அகற்றல்

2019 ஜூலை 19 ஆம் திகதிய 487/2019 ஆம்

இதன்படி, மேற்படி கூட்டத்தில், CAI - 4646 வாகனத்தை ஒப்படைப்பது குறித்து குழு கேள்வி எழுப்பியுள்ளதுடன், இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் விசேட அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அரச வங்கிகளில் வாகனப் பிரச்சினைகள் தொடர்பாக பொதுத் திறைசேரி மற்றும் பொது தொழில்முயற்சி திணைக்களத்திடமிருந்து பொதுவான வழிகாட்டியை வெளியிடுமாறு குழுவினால் குழு உத்தரவிட்டுள்ளதுடன், இவ்வாறான பரிவர்த்தனைகள் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஏதேனும் சந்தேகத்தைத் தவிர்க்க, மேற்கூறிய கூட்டத்தின் தொடர்புடைய பகுதி தொடர்பான குறிப்பு இத்துடன் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும என்ற கருத்தில் இருந்தது.

மேற்கோள் காட்டப்பட்டது

“ரூபா.16.6 மில்லியனுக்கு வாங்கப்பட்ட (CAI -

இலக்க இயக்குனர் சபை குறிப்பின படி, பின்வரும் குறிப்புக்களுக்கு உட்பட்டு தொழில்துறையின் நடைமுறையில் உள்ள நடைமுறையைக் கருத்தில் கொண்டு, மேற்கூறிய வாகனத்தை முன்னாள் பொது முகாமையாளருக்கு விடுவிப்பதற்கு சபையின் ஒப்புதல் வழங்கப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட KM-9238 ஆம் இலக்கமுடைய வாகனத்தினை மீண்டும் கையளித்தல்
- இலங்கை மத்திய வங்கியினால் எடுத்துக்காட்டியபடி அவருக்குச் செலுத்தப்பட்ட அதிகப் பணத்தினை செலுத்தித் தீர்த்தல்
- புத்தக மதிப்பில் வாகனத்தை விடுவிக்கவும்
- வங்கியிடமிருந்து தனக்கு வேறு எந்தக் உரிமைக்கோரிக்கையும் இல்லை என்று முன்னாள் பொது

4646) மெர்சிடிஸ் பென்ஸ் வாகனத்தை அவரிடம் ரூபா.113,698.63 ஒப்படைத்தது குறித்தும் மற்றும் அது தொடர்பாக இயக்குநர்கள் குழுவின் சிறப்பு ஒப்புதல் இருந்ததா என்றும் குழு கேள்வி எழுப்பியது.

ஓய்வுபெறும் பொது முகாமையாளர் (GM) தனது உத்தியோகபூர்வ வாகனத்தை தன்னுடன் எடுத்துச் செல்லலாம் என்பதால், இயக்குநர்கள் குழுவின் முடிவின்படி வாகனம் வழங்கப்பட்டதாக AO கூறினார். இது தொடர்பில் கண்டுபிடித்து அரச வங்கிகளில் உள்ள வாகனப் பிரச்சனைகள் தொடர்பாக பொதுக் திறைசேரி மற்றும் பொது நிறுவனங்களின் துறையிடமிருந்து பொதுவான வழிகாட்டுதலை வெளியிடுமாறு பிரதான தலைமை அதிகாரிக்கு அறிவுறுத்தியது. இவ்வாறான பரிவர்த்தனைகள் எதிர்காலத்தில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என குழு கருதியது. ”

முகாமையாளரிடம் இருந்து உறுதி செய்து ஏற்றுக் கொள்ளல்.

2019 செப்டம்பர் 05 ஆம் திகதி நடைபெற்ற கோப் கூட்டத்தில், வாகனத்தை வங்கிக்கு திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு குழு அறிவுறுத்தியது. எனினும்,

- 2020 ஜுன் 11 ஆம் திகதிய 470/2020 ஆம் இலக்க சபை பத்திர இலக்கத்தின் பிரகாரம், மேற்கூறிய வாகனத்தை விடுவிப்பதற்கு 487/2019 ஆம் இலக்க சபை பத்திர இலக்கத்தின் பிரகாரம் சபை அங்கீகாரம் வழங்கியது. இது கோப் குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு முரணானதாகும். வங்கியின் போக்குவரத்துக் கொள்கையின் 89/2016 இன் பிரிவு 15-A இன் படி 7 வருட உறுதியான சேவையை நிறைவு செய்த பெருநிறுவன நிர்வாக

மேற்கோள் முடிந்தது.

மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதலுக்குப் பதிலளிக்கும் வகையில், அரச வங்கிகளில் வாகனப் பிரச்சனைகள் குறித்த பொதுவான வழிகாட்டுதலை வகுப்பதில், வங்கியானது பின்வரும் ஆவணங்களை பரீட்சிப்பதற்கும் கருத்திற்கொள்வதற்கும் 2022 ஜுன் 10 அன்று திறைசேரி செயலாளரிடம் - நிதி அமைச்சு சமர்பித்தது.

(i) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி II இன் விதிகள் மற்றும் அனைத்து திறைசேரி மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கைகளில் இருந்து இரண்டு வங்கிகளுக்கும் விலக்கு அளிக்கப்பட்ட இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியை மறுசீரமைப்பதற்கான அரசாங்க முடிவு.

(ii) பெருநிறுவன நிர்வாகத்தின்

| | |
|---|---|
| உறுப்பினர் பயன்படுத்திய வாகனத்தை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டாலும், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த முன்னாள் பொது முகாமையாளர் வாகனத்தினை பெற தகுதி பெறவில்லை. மேலும், அத்தகைய நிபந்தனையானது ஒப்பந்தத்திலும் சேர்க்கப்படவில்லை. தற்போதுள்ள தகவல்களின் பிரகாரம் மேற்கூறிய வாகனம் 2015 ஏப்ரல் 27 அன்று ரூபா.16.6 மில்லியன் கிரயத்தில் வாங்கப்பட்டதுடன், 2021 ஜூலை 20 இல் புத்தக மதிப்பான ரூபா.113,698 இற்கு முன்னாள் பொது முகாமையாளருக்கு வழங்கப்பட்டது.<br><br>• இலங்கை மத்திய வங்கியினால் வலியுறுத்திய ரூபா.3.3 மில்லியன் மேலதிக கொடுப்பனவுகளுக்கு உட்பட்டு மேற்படி | உறுப்பினர்களுக்கான போக்குவரத்துக் கொள்கை - BP எண். 723/2019 |

வாகனத்தை
முன்னாள் பொது
முகாமையாளரு
க்கு
விடுவிப்பதற்கு
சபையின்
அனுமதி
வழங்கப்பட்டது.
எவ்வாறாயினும்,
மேற்கூறியவற்றை
ற
மீளப்பெறுவதற்கு
வங்கியினால்
நடவடிக்கை
எடுக்கப்படவில்லை
ல.

## 3.4 தேசிய சேமிப்பு வங்கி

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | வரிக்குப் பின் இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| 2021 | 1,579,097,748,000 | 1,503,084,991,000 | 76,012,757,000 | 22,119,624,000 | முனைப்பழியற்ற |
| 2022 | 1,616,686,128,000 | 1,543,793,899,000 | 72,892,229,000 | 2,529,667,000 | முனைப்பழியற்ற |
| 2023 | 1,686,964,592,000 | 1,605,590,339,000 | 81,374,253,000 | 7,216,483,000 | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் கைமுறையான தலையீடு அதிக ஆபத்து உள்ளதாகும். தலைமை அலுவலக பரீட்சை மீதி மற்றும் கிளை பரீட்சை மீதி என வெவ்வேறாக பிரதான பரீட்சை மீதிகள் 02 தயாரிக்கப்படுகின்றன. அனைத்து கிளைகளின் பரீட்சைமீதிகளும் CBOS முறைமையிலிருந்து சுருக்கப்பட்டு, அதை MS excel spread sheet வடிவத்திற்கு மாற்றி கிளைகளுக்கு ஒரு தனியான பரீட்சைமீதியை உருவாக்குகிறது. தலைமை அலுவலகப் பிரிவுகளின் பரீட்சைமீதிகள் தனித்தனியாக எடுக்கப்பட்டு அவைகள் தலைமை அலுவலகத்திற்கான தனியான பரீட்சைமீதிக்கு இணைக்கப்படுகின்றன. | 2021 | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் கைமுறையான தலையீடுகள குறைக்கப்பட வேண்டும். | தற்போதைய முறையில் கைமுறையாக தயாரிப்பதை தவிர்க்க கோ பேங்கிங் முறைமை ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளது. | 2024 செப்தெம்பர் 13 இல் உள்ளபடியாக வங்கியானது கோ பேங்கிங் முறைமையினை அமுல்படுத்தியது. |

| | | | | |
|---|---|---|---|---|
| இறுதியாக, இரண்டு பரீட்சைமீதிகளையும் பயன்படுத்தி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. | | | | |
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிளைகளுக்கு இடையேயான கணக்கு மீதி ரூபா 407,412,355 ஆகும். நிதிப் பிரிவினால் வழங்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் அந்த மீதிகள் பல இணக்கம் செய்யப்படாத மீதிகளைத் திரட்டி மொத்தம் ரூபா 408,813,260 ஆக இருந்தது. எனவே ரூபா 1,400,905 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இந்த கிளைகளுக்கு இடையேயான கணக்குகளின் மீதிகளை கணக்கிணக்கம் செய்வதற்கு வங்கியால் எந்த நடைமுறையும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளைக் குறைப்பதற்கு வங்கியால் வலுவான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். | வேறுபாடானது தொடர்ச்சியான இணக்கம் ஊடாக ரூபா 269,328,017 வரை குறைக்கப்பட்டுள்ளது டன் அந்த மீதிகளுக்கு எதிராக ரூபா 269,328,017 ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | 2024 செப்தெம்பர் 13 இல் உள்ளவாறு வரவு வங்கி முறைமை செயற்படுத்தப் பட்டவுடன் பொதுப் பேரேட்டுக் கணக்கு தன்னிச்சையாக்கப்பட்டதன் காரணமாக பிரச்சினை சரி செய்யப்பட்டுள்ளது. |
| புறக்கோட்டை கிளையின் பயன்பாட்டிற்காக வங்கி 4 மாடி கட்டிடத்தை வாடகைக்கு பெற்றிருந்த போதிலும், 4,629 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடத்தின் 2 தளங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. வங்கி 2021 திசெம்பர் வரை வாடகை செலவினங்களாக ரூபா 47.55 மில்லியனை செலுத்தியுள்ளது | 2021/2022 /2023 | வங்கி அதனது சொத்துக்களை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். | வங்கி இந்த கட்டடத்தினை அவ்வாறே பயன்படுத்தி எஞ்சிய இரு தளங்களை வங்கியின் சுற்றுலா விடுதியாக அல்லது ஏனைய பயனுள்ள நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யும். | தற்போதும் கட்டடத்தின் இரு தளங்கள் விளைவற்று உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| கொட்டாவ கிளையானது தற்போதுள ்ள கட்டிடத்தின் 1வது தளத்தை 2020 ஆகஸ்ட் முதல் 2025 ஆகஸ்ட் வரையிலான (5 வருடங்கள்) காலப்பகுதிக்கு ரூபா 200,000 மாதாந்த வாடகைக்கு பெற்றுள்ளதுடன் ஆரம்பத்தில், கிளை ரூபா 3,600,000 தொகையை வாடகை முற்பணமாக (18 வாடகைகள்) செலுத்தியிருந்தது. எனினும், புனரமைப்பில் ஏற்பட்ட தாமதம் காரணமாக வங்கி இதுவரை அந்த தளத்தைப் பயன்படுத்தியிருக்கவில்லை. | 2021/2022 /2023 | வங்கி அதனது சொத்துக்களை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். | பாதீட்டு வரையறைகள் மற்றும் தற்போதைய பொருளாதார நிலைமைகள் என்பவவை காரணமாக அதன் உள்ளக வேலைகள் பிற்போடப்பட்டுள்ளன. எனினும், எவ்வித உள்ளக அமைப்பு இல்லாமல் இந்த தளம் அவற்றின் களஞ்சியமாக பயன்படுத்துகின்றன. | வங்கி தற்போது வரை நவீனமயமாக்கலை பூர்த்தியாக்கவில்லை. |
| வங்கி இரண்டு நபர்களுக்கு ரூபா 164,730,000 பெறுமதியான இணைந்த ஆதனக் கடனை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(அ) குறித்த கடனை அறவிடுதல் தொடர்பாக கடன் வைத்திருப்பவர்களின் வருமான மூலங்களை சரிபார்ப்பதற்கு வங்கி சரியான மதிப்பீட்டை செய்திருக்கவில்லை.<br><br>(ஆ)ஆரம்ப கட்டங்களில், கடன் தகவல் பணியக அறிக்கை மற்றும் | 2021/2022 /2023 | அனுமதிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் தகுதிவாய்ந்த வாடிக்கையாளருக்கு கடன் மற்றும் முற்பணங்களை வழங்கி, வினைத்திறனானதும் செயற்திறனானதுமான வகையில் நிலுவைத் தொகைகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கவும். | ஆதனமானது வங்கியினால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. | 2024 பெப்ரவரி 06 இல் உள்ளவாறு மொத்த கடன் நிலுவை மீதி ரூபா 222,381,178 ஆக இருந்தது. இந்த ஆதனத்தினை ஏலத்திற்கு பின்னர் 2024 பெப்ரவரி 06 அன்று வங்கிக்கு உரிமையாக்கப்பட்டது. எனினும், 2024 யூலை 04 இல் உள்ளபடியான இந்த |

வணிகங்களின் சாதகமற்ற நிலை காரணமாக கடனை வழங்குவதற்கு இயக்குனர் சபையும் கடன் குழுவும் உடன்பட்டிருக்கவில்லை. எனினும், இறுதியாக கடன் தகவல் பணியக அறிக்கை நிலுவைகளைக் கருத்தில் கொள்ளாமல், வாடிக்கையாளர்களிடமிருந்து DTA கொள்கையை எடுக்காமல், திருப்பிச் செலுத்தும் காலத்தை 15 ஆண்டுகளில் இருந்து 20 ஆண்டுகள் வரை நீடித்தும், நடைபெற்ற விசேட இயக்குனர் சபைக் கூட்டத்தில் 75 சதவீத பெறுமதி விகிதத்திற்கான கடனை விஞ்சியும் மேற்படி கடனை வழங்குவதற்கு இயக்குனர் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

(இ) ஏனைய இயக்குனர்கள் மற்றும் கடன் பெறுபவர் ஒருவரின் வருகையுடன் கூடிய மேற்கூறிய விசேட கூட்டத்திற்கு , குறித்த கடனுக்கான அங்கீகாரத்தை வழங்க மறுத்த திறைசேரி பிரதிநிதி உட்பட இரண்டு இயக்குனர் சபை பணிப்பாளர்கள் அழைக்கப்பட்டிருக்க

காணிக்காக பெற்ற மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இந்த காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 197,400,000 ஆக இருந்தது. எனவே, எஞ்சிய நிலுவை மீதியான ரூபா 24,981,178 தொகையினை அறவிடுதல் குறித்து கேள்விக்குறியாக உள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| வில்லை. அதனால், இயக்குனர் சபை தீர்மானங்களின் வெளிப்படைத்தன்ை ம கே ˙விக்குரியதாக உள்ளது.<br><br>(ஈ)கடன் பெற்றவர் இரண்டு தவணைகளை மாத்திரமே செலுத்தியுள்ளார். 2022 யூலை 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை கடன் ரூபா 252,236,697 ஆக காணப்பட்டது, மேலும் இறுதி மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 210,000,000 ஆதனத்தின் மொத்த பெறுமதியில் இருந்து அதை அறவிட முடியாது.<br><br>(உ) 2022 ஏப்ரல் மாதத்தில் கடன் பெற்றவர்கள் செய்த கோரிக்கைக்காக தண்டப்பணம் மற்றும் முன்கூட்டியே தீர்ப்பனவுக் கட்டணங்களை விட்டுவிடுவதற்கு வங்கி தீர்மானித்திருந்தது. எனினும், அவர்கள் இதுவரை மீதமுள்ள மீதியை செலுத்தியிருக்கவில்லை. | | | | |
| வங்கி 2018 யூன் 14 இல் மக்கள் வங்கியுடன் இணைந்து ஒருங்கிணைந்த கடனை RPI பிறைவேட் லிமிட்டட்டிற்கு (மாலத்தீவு) வழங்கியது. | 2021/2022 /2023 | அனுமதிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் தகுதிவாய்ந்த | பணிப்பாளர் சபை 2023 ஜூன் 09 அன்று நடாத்திய கூட்டத்தில் “RPI நிறுவனத்திற்கு | வங்கியினால் கடனை மீளப்பெற முடியவில்லை என்பதுடன் 2024 மே 31 இல் |

| | | | |
|---|---|---|---|
| வங்கி மற்றும் மக்கள் வங்கியால் முறையே ஐ.அ.டொலர் 09 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 01 மில்லியன் வழங்கப்பட்டது. கணக்காய்வு திகதியான 2022 ஆகஸ்ட் 16 இல் உள்ளவாறு கடன் பெற்றவர் எந்த மூலதன மீள்கொடுப்பனவுகளையும் செலுத்தியிருக்காததுடன் நிலுவை வட்டி ஐ.அ.டொலர் 2.15 மில்லியன் ஆக இருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>(அ) வணிக நோக்கங்களுக்காக வெளிநாட்டு கம்பனிக்கு கடன்களை வழங்குவது தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கெல்லைக்கு உட்பட்டிருக்காத போதிலும் மேற்கூறிய கடன் சுற்றுலாத்துறையின் கீழ் ஒரு நிர்மாண நோக்கத்திற்காக வெளிநாட்டு கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டது.<br><br>(ஆ) வங்கி கடனை வழங்குவதற்கு முன்னர் வங்கி விரிவான கடன் மதிப்பீடு அல்லது இடர் மதிப்பீடுகளை செய்ததா என்பதை நிரூபிப்பதற்கு எந்த சான்றாதாரமும் | வாடிக்கையாளருக்கு கடன் மற்றும் முற்பணங்களை வழங்கி, வினைத்திறனானதும் செயற்திறனானதுமான வகையில் நிலுவைத் தொகைகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கவும். | இணைந்த கடனின் தற்போதைய நிலைமை” தொடர்பான விடயத்தை சட்டமா அதிபரின் அறிவுரையை எதிர்பார்த்து குறிப்பிடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. வங்கி 2023 ஜுன் 19 அன்று கடித இலக்கத்தில் (LD/2023/374) கௌரவ சட்டமா அதிபருக்கு ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | உள்ளவாறு மொத்த நிலுவைத் தொகை (மூலதனம் + வட்டி ) 13.18 மில்லியன் டொலர் ஆன அதேவேளை கடன் சேவை ஒதுக்கக் கணக்கில் குறைந்தபட்ச மீதியை 2024 மே 31 இல் உள்ளவாறு கடன் பெற்றவர் பேணவில்லை. அந்த டொலர் 27,533.53 ஆக இருந்தது. சட்டமா அதிபரின் கடிதம் நிலுவையில் உள்ளது. |

காணப்படவில்லை.

(இ) பிந்தைய கடன் மீளாய்வு பொறிமுறை தொடர்பான 1641/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வங்கி அங்கீகாரம் அளித்து 3 மாதங்களுக்குள் கடன் வசதியை மதிப்பாய்வு செய்திருக்கவில்லை.

(ஈ) 2018 யூன் 21 இல் வங்கி கடனின் முதல் மீளப்பெறலில் இருந்து மூலதன மீள்கொடுப்பனவிற்காக ஒரு வருடத்திற்கான ஆரம்ப கருணைக் காலப்பகுதியை வங்கி வழங்கியுள்ள போதிலும் 2018 யூன் முதல் 2022 யூன் வரை மூலதனம் மற்றும் வட்டி மீள்கொடுப்பனவிற்கான ஆரம்ப கருணைக் காலப்பகுதி பல காரணங்களின் கீழ் பல முறை நீடிக்கப்பட்டிருந்தது.

(உ) கடன் தவணைப்பணம் காலந்தாழ்த்தி (Moratorium) செலுத்துதல் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால வெளியிடப்பட்ட 2020 இன் 5 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் பணிப்பாளர் சபை

மேற்படி செயற்திட்டத்திற்கு கடன் தவணைப்பணம் காலந்தாழ்த்தி செலுத்தும வசதிகளை வழங்கியிருந்த போதிலும் சேவைநாடுநர் கம்பனி ஒரு வெளிநாட்டு கம்பனி என்பதால் மேற்படி கடன் மேற்படி சுற்றறிக்கையின் கீழ் வரவில்லை.

(ஊ) 2021 யூலைக்குப் பின்னரான காலப்பகுதிக்கு காப்புறுதி பூட்கையை வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(எ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஐ.அ.டொலர் 270,000 குறைந்தபட்ச பெறுமதியுடன் கடன் சேவை ஒதுக்க கணக்கு தேசிய சேமிப்பு வங்கியில திறக்கப்பட்டு பேணப்பட வேண்டும். எனினும், கடன் சேவை ஒதுக்கு கணக்கில் குறைந்தபட்ச மீதி கடன் பெற்றவரால் (RPI) பேணப்பட்டிருக்காததுடன் அதன் தற்போதைய மீதி 2022 ஒக்தோபர் 21 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 39,310

| | | | | |
|---|---|---|---|---|
| ஆக இருந்தது.<br><br>(ஏ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வழங்குபவர்கள் செயற்திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கு ஒரு சுயாதீன செயற்திட்ட கண்காணிப்பாளராக ஹோட்டல் நிர்மாணத்தில் தகைமைபெற்ற நிபுணர் ஒருவரை நியமிக்க வேண்டும். எனினும், கடன் வழங்குபவர்கள் அத்தகைய நபரை நியமித்திருக்காததுடன் கடன் பெற்றவர் (RPI கம ்பனி (பிறைவேட்) லிமிட்டட்) மூலம் நியமிக்கப்பட்ட பட்டய அளவையாளரின் முன்னேற்ற அறிக்கையை நம்பியிருந்தார்கள். | | | | |
| அநுராதபுரம், எல்பிட்டிய, கல்நேவ, கதிர்காமம், கிரிந்திவெல, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் கெக்கிராவ ஆகிய இடங்களில் உள்ள காணிகளில் நிர்மாணப் பணிகளுக்காக வங்கி ரூபா 83.6 மில்லியன் தொகையை செலவிட்டிருந்த போதிலும் 2021 அம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்தக் காணிகளின் சட்டபூர்வ உரிமைத்துவம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2021/2022 /2023 | அந்த காணிகள் தொடர்பான குத்தகை உடன்படிக்ககளைப் பெற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 1. மொனராகலை – மொனராகலை பிரதேச செயலகத்தினால் காணி ஆணையாளர் நாயகத்திற்கு தேவையான நடவடிக்கைக்காக கடித ஆவணங்கள் அனுப்பி இந்த செயற்பாடுடன் தொடர்பில் வரிகள் செலுத்தியுள்ளது.<br><br>2. கிரிந்திவெல – குத்தகை உடன்படிக்கை | 2024 செப்தெம்பர் 30 வரை சம்பந்தப்பட்ட காணிகளின் குத்தகை உரிமையை பெற்றுக்கொள்ள வங்கிக்கு முடியவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| ல. | | | வரைவில் தேவையான திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>3. கெக்கிரவா – 2021 ஒக்தோபர் 22 அன்று நினைவூட்டல் அனுப்பப்பட்டது<br>4. அனுராதபுரம் – 2021.11.22 அன்று நினைவூட்டல் அனுப்பப்பட்டது.<br>5. எல்பிட்டிய – 2021.10.22 அன்று நினைவூட்டல் அனுப்பப்பட்டது.<br>6. கல்நேவ - வரைவு குத்தகை உடன்படிக்கை 2023 ஜுன் 07 அன்று சட்டத் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளது.<br>7. கதிர்காமம் - வங்கி நீண்ட கால குத்தகைக்கு கையெழுத்திட்டுள்ளதுடன் இறுதி உடன்படிக்கையில் இன்னும் பெறப்படவில்லை.<br>8. இரத்தினபுரி - 2024 ஒக்தோபர் 21 அன்று நினைவூட்டல் அனுப்பப்பட்டது | |
| 38.8 பேர்ச்கள் பரப்பளவிலான காணியொன்றை வங்கி 2008 ஆம் ஆண்டு முதல் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து 50 வருட காலத்திற்கு எடுத்திருந்தது. குறித்த காணியில் புதிய கட்டிடம் | 2021/2022 /2023 | வங்கி விளைவற்ற சொத்தாக வைத்திருக்காமல் குறிப்பிட்ட நோக்கத்திற்காக காணியை பயன்படுத்த வேண்டும். | வங்கியின் தலைமை அலுவலகத்தை ஒட்டியிருக்கும் கூப்பர்ஸ் ஒழுங்கை நிலத்தை ஆக்கிரமிப்பாளர்களுக்கு காணித்துண்டுகளை மாற்றப்படவேண்டியத | 2024 செப்தெம்பர் 30 வரை வங்கி எவ்வித நிர்மாண நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்றை அமைப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்திருந்த போதிலும் இதுவரை எவ்வித நிர்மாண நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | ால் நகர அபிபிருத்தி அதிகாரசபையால் (UDA) வங்கிக்கு இந்த காணியில் நிரந்தர அபிவிருத்திகளில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டது. தற்போதுள்ள ஆதனங்களுக்குப் பதிலாக கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் காணி கோரப்பட்டுள்ளது. | |
| கிளை முகாமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலின் படி, 2023 ஏப்ரல் 30 நிலவரப்படி வழங்கப்பட்ட ரூபா.328,969,565 கடன் தொடர்பான 425 கடன் கோப்புகள் காணாமல் போயுள்ளன. 134 தனிநபர் கடன் கோப்புகள், 272 வீட்டுக் கடன் கோப்புகள், 10 சட்டக் கோப்புகள் மற்றும் நிலையான வைப்புகளுக்கு எதிராக வழங்கப்பட்ட 9 கடன கோப்புகள் ஆகியவை இதில் அடங்கும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் முன்வைக்கப்படுகின்றன.<br><br>(i) இந்த 425 கடன் கோப்புகளில், 30 சதவீதம் அல்லது 126 எண்ணிக்கையிலான கடன் கோப்புகள் செயல்படாத பிரிவின் கீழ் கடன் தொடர்பானவை. அவற்றில் 30 | 2022/2023 | கோப்பு முகாமைத்துவம் தொடர்பில் முகாமைத்துவ கட்டுப்பாடுகள் ஒவ்வொரு கிளைகளிலும் வலுப்படுத்தப்பட வேண்டும். | தொலைந்த கடன் கோப்புகள் மாதாந்தம் கண்காணிக்க சகல பிராந்திய முகாமையாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>கடன் குழு காலாண்டு அடிப்படையில் புதுப்பிக்கப்படுகிறது. | 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு தொலைந்த கோப்புக்களின் எண்ணிக்கை 330 வரை குறைக்கப்பட்டுள்ளது. ரூபா 262,295,557 பெறுமதியான தொலைந்த கடன் கோப்புக்களில், 95 தனிநபர் கடன் கோப்புக்கள், 229 வீட்டுக் கடன் கோப்புக்கள், 4 சட்டக் கோப்புக்கள், மற்றும் 2 நிலையான வைப்புக்களுக்கு எதிராக வழங்கப்பட்ட கடன் கோப்புக்கள் ஆகியவை உள்ளடங்குகின்றன. |

கோப்புகள் வீட்டுக் கடன்கள் தொடர்பானவை, 95 கோப்புகள் தனிநபர் கடன்கள் தொடர்பானவை மற்றும் ஒரு கோப்பு வைப்புகளுக்கு எதிரான கடன் தொடர்பானது. 2023 ஏப்ரல் 30 நிலவரப்படி அந்த செயல்படாத கடன்களின் மொத்த நிலுவைத் தொகை ரூபா.50,325,463 ஆகும், இது வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில் 66 சதவீதமாகும்.

(ii) தொலைந்த 425 கடன் கோப்புகளில், ரூபா.2,766,086 நிலுவையில் உள்ள 10 கடன் கோப்புகள் சட்டப்பூர்வ கோப்புகளாகும். இந்த கோப்புகள் காணாமல் போனதால், கடன் வாங்கியவர்கள் மீது வங்கியால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியவில்லை, கடனை வசூலித்த பிறகு வாடிக்கையாளர்களின் பத்திரத்தை வெளியிட முடியாது. இது நீண்ட கால நோக்கில் வங்கியின் நற்பெயரைக் குலைக்கக்கூடும்.

(iii) வெள்ள நிலைமை காரணமாக கடுவெல கிளையில் தொலைந்த 425

| | | | | |
|---|---|---|---|---|
| கடன் கோப்புகளில் 254 கடன் கோப்புகள் அல்லது 59 வீதமானவை ஆகும். இவற்றில், 35 கடன் கோப்புகள் செயல்படாத பிரிவின் கீழ் உள்ள கடன்கள் தொடர்பானவையாகும். இக்கடன்களின் மொத்த நிலுவைத் தொகை ரூபா.16,266,596 ஆகும்.<br><br>(iv) தலைமை அலுவலகக் கிளையில் காணாமல் போன கடன் கோப்புகள் 24 ஆகும், அவற்றில் 20 கடன் கோப்புகள் செயல்படாத வீட்டுக் கடன் பிரிவின் கீழ் இருந்தன, அவற்றில் 16 கோப்புகள் அந்த கிளையின் ஊழியர் செய்த மோசடி தொடர்பானவை. கடன் கோப்புகள் கிடைக்காததால் மோசடியில் ஈடுபட்ட ஊழியர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது கேள்விக்குறியாக உள்ளது. | | | | |
| பொது தன்னியக்க இயந்திர சுவிட்சின் (CAS) செயற்பாடுகள் தொடர்பாக 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்வு முறைமை சட்டத்தின் கீழ் 2022 பெப்ரவரி 28 ஆம் திகதியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க பொது வழிகாட்டல் இலக்கத்தின் | 2022/2023 | முக்கிய செயல்பாடுகளுக்கான தானியங்கி காப்புப்பிரதி செயல்முறை சீரான செயல்பாட்டிற்காக அட்டை மையத்தால் பராமரிக்கப்பட வேண்டும். | நல்லிணக்கம் மற்றும் அட்டை முகாமைத்துவ முறைமை போன்ற பகுதிகளை உள்ளடக்கி அட்டை மையம் அதன் அனைத்து தானியங்கி செயற்பாடுகளுக்கும் தானியங்கி காப்புப்பிரதிகளை நடைமுறைப்படுத்தியு | அட்டை மையம் 2024 மே 31 இல் உள்ளவாறு இணக்கம் மற்றும் முகாமைத்துவ முறைமை தவிர அதன் அனைத்து பிரதான செயற்பாடுகளுக்கும் |

| | | | |
|---|---|---|---|
| 02 ஆம் பிரிவின் 5.6 இன் பிரகாரம், ஒவ்வொரு தன்னியக்க இயந்திர உறுப்பினரும் வழக்கமான மீட்புக்கும் பொறுப்பாக இருக்க வேண்டும். தரவுத்தளங்கள், அதன் அனைத்து தகவல்கள் மற்றும் தரவுகளின் வழக்கமான காப்புப்பிரதிகளை உருவாக்குவதற்கும் முறைமை செயலிழப்பு அல்லது தரவு ஊழல் அல்லது தரவு இழப்பு ஏற்பட்டால் மீட்பு நடைமுறைகளை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் பொறுப்பாவார்கள். இருப்பினும், வாடிக்கையாளர் பணத்தைத் திரும்பப் பெறுதல், தகராறு கையாளுதல், கட்டணத் திரும்பப் பெறுதல் மற்றும் சமரசங்கள் போன்ற சில முக்கிய செயல்பாடுகளுக்கு தானியங்கி காப்புப்பிரதி நடைமுறையைப் பராமரிக்க அட்டை மையம் தவறிவிட்டது. | | ள்ளது. இந்த காப்புப்பிரதிகள் சேவையகம் மற்றும் தரவுத்தள மட்டங்களில் தகவல் தொழில்நுட்பப் பிரிவால் விடாமுயற்சியுடன் கையாளப்படுகின்றன. இருப்பினும், மீள்கட்டண செயலாக்கம், பிரச்சினை கையாளுதல், பணத்தைத் திரும்பப் பெறுதல் மற்றும் கூடுதல் சமரச அறிக்கைகள் உள்ளிட்ட தினசரி கையேடு பணிகள் பயனர் கணினிகளில் சேமிக்கப்படுகின்றன. தற்போது, இந்த பணிகளுக்கான காப்புப்பிரதிகள் கைமுறையாக எடுக்கப்பட்டு வெளிப்புற வன்வட்டில் மட்டுமே சேமிக்கப்படுகின்றன. அட்டை மையத்தின் மேசை கணினிகளுக்கு குறிப்பாக வடிவமைக்கப்பட்ட மிகவும் முறையான மற்றும் பாதுகாப்பான காப்புப்பிரதி அமைப்பை நிறுவ தகவல் தொழில்நுட்ப பிரிவுடன் தற்போது பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. | தானியங்கு காப்புப்பிரதி செயல்முறையை பராமரிக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2022 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி பெருநிறுவனக் கடன்களின் மொத்த நிலுவை தொகை ரூபா 90,191.55 மில்லியன் ஆகும், அதில் ரூபா 5,908.13 மில்லியன் செயற்பாடற்ற கடன் பிரிவின் கீழ் உள்ளது. இந்த மொத்த நிலுவைத் தொகை 2023 மே மாத இறுதியில் ரூபா.90,445 மில்லியனாக உயர்த்தப்பட்டு, அதில் ரூபா.5,730 மில்லியன் செயல்படாத பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட செயல்படாத் கடன் தொகையில், 66 சதவீதம் வெளிநாட்டுக் கடனையும், 29 சதவீதம் திறைசேரி உத்தரவாதத்தால் பாதுகாக்கப்பட்ட இரண்டு அரசு தொடர்பான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களையும் குறிக்கிறது. | 2022/2023 | வங்கி கடன் வழங்குவதற்கு முன்னர் முறையான வாடிக்கையாளர் மதிப்பீடுகளைச் செய்ய வேண்டும் மற்றும் கடன் நிலுவைத் தொகையை மீளப்பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். | கடனை மீளப்பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகளில் ஆலோசனை / இணக்கத்தைப் பெறுவதற்காக குறிப்பிடப்பட்ட வெளிநாட்டுக் கடன் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>இரண்டு அரச நிறுவனங்களுடன் தொடர்புடைய செயற்பாடற்ற கடன்களில் ஒன்றின் மீதிகள் தீர்க்கப்பட்டுள்ளன. மற்றைய அரச நிறுவனத்துடன் தொடர்புடைய கடன் குறித்து நிதியமைச்சின் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டு சிக்கலைத் தீர்ப்பதற்கு உதவி கோரப்பட்டுள்ளது.<br><br>அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் 2023.06.21 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் இந்த விடயம் குறித்து கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெருநிறுவன கடன்களின் மொத்த நிலுவை ரூபா 80,202.94 மில்லியான இருந்நது, இதில் ரூபா 5,955.57 மில்லியன் செயற்படாத வகையின் கீழ் இருந்தது. இந்த மொத்த நிலுவை மீதி 2024 மே மாத இறுதியில் ரூபா 79,941 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 5,933 மில்லியன் செயற்படாத வகையின் கீழ் வகைப்படுத்த ப்பட்டுள்ளது. |

வைக்கப்பட்டுள்ளதாக வங்கிக்கு அறிவித்துள்ளார்.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளரைத் தொடர்பு கொண்ட வங்கி, இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடுமாறு ஒரு கூட்டத்தைக் கோரியது. கூட்டத் திகதி திகதி இன்னும் வழங்கப்படவில்லை.

## 3.5 இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமையாண்மை ரூபா | வரிக்குப் பின் இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 62,963,591,055 | 56,328,825,053 | 6,353,515,999 | 547,287,343 | முனைப்பழியற்ற |
| **2022** | 62,882,057,803 | 55,884,400,728 | 6,716,407,077 | 326,325,400 | முனைப்பழியற்ற |
| **2023** | 67,941,107,381 | 59,532,025,601 | 8,127,831,780 | 1,376,359,784 | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | **2.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவுகள** | | | | |
| | ரூபா.1,032,542 பெறுமதியுடைய இனங்காணப்படாத சம்பள முற்பணம் 05 வருடங்களுக்கும் மேலாக 2500901001 என்ற பேரேட்டுக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு கணக்காய்வின் போது இதே பிரச்சினை எழுப்பப்பட்ட போதிலும், இப்பிரச்சினையை சரிசெய்வதற்கு உரிய அதிகாரிகளால் திருப்திகரமான நடவடிக்கைகள எடுக்கப்படவில்லை. | 2023 | எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகளைத் தடுக்க வலுவான உள்ளகக் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | இந்த உருப்படிகள் இனங்காணப்படாததைவ மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவின் விசாரணை நடந்து வருகிறது. இது குறித்து இயக்குனர் சபைக் குழுவிற்கும் (**BAC**) அறிக்கையிடப்பட்டுள்ளது. விசாரணை முடியும் வரை நாங்கள் வருமான அறிக்கைக்கு ஏற்பாட்டை செய்துள்ளோம். | முதலில் இந்த உருப்படிகள் இனங்காணப்படாதவை என அடையாளப்படுத்தப்பட்டவுடன், சம்பளம் தொடர்பான செலவு என தனியான பேரேட்டுக் கணக்கு உருவாக்கப்பட்டு சம்பள முற்பணக் கணக்கில் இருந்து சம்பளம் தொடர்பான செலவுக் கணக்கிற்கு ரூபா 1,032,542 தொகை மாற்றப்பட்டது. மேலும், |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இவ்வாறான சிரமங்களை தவிர்த்துக்கொள்ள மருத்துவ பட்டியல் முற்பணங்கள் மற்றும் சம்பள முற்பணங்களுக்கு தனித் தனியாக கணக்கீடு செய்யப்பட்டு சகல கொடுக்கல் வாங்கல்கள் ஒப்பீடுகள் நாளதுவரையாக செய்யப்பட்டுள்ளன. |
| **2.2 செலுத்த வேண்டியவைகள்** | | | | |
| **(i) ஏல விற்பனை மூலம் பெறப்பட்ட மேலதிக மீட்பு (1310190028)**<br><br>கையகப்படுத்தப்பட்ட ஆதனங்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த ரூபா 902,213 மேலதிக தொகை, அந்தந்த வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்படாமல் 2023 திசெம்பர் 31 அன்று ஒரு வருடத்திற்கும் மேலாக இந்தக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | 2023, 2022 | மேலதிகமாக மீட்டெடுக்கப்பட்ட தொகையைத் எந்தத் தாமதமும் இன்றி தீர்க்கப்பட வேண்டும். | இவை 2024 ஆம் ஆண்டினுள் தீர்க்கப்படும். | இவை 2024 ஆம் ஆண்டினுள் தீர்க்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ii) மேலதிக காசு - 1310190004** ரூபா. 200,973 தொகையான அதிகப்படியான பணத்தினை 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் மேலாக, மேலே உள்ள பேரேட்டுக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது | 2023 | நீண்ட காலம் முதல் செலுத்த வேண்டியதாக உள்ள மீதிகளினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவை இனங்காணமுடியாத காசாளரிடமுள்ள மேலதிகமாகவுள்ள பணமாகும். எனினும், அதிகப்படியான நிலுவைகளை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | காசு மற்றும் தன்னியக்க இயந்திர மேலதிகத்திற்கான மாதாந்த இணக்கங்கள் நேரத்திற்கு செய்யப்படுவதோடு, மேலதிகத்தை தீர்ப்பனவு செய்வதற்கு கிளைகளிடம் தொடர்ச்சியாக அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. |

**2.3 முற்பணங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| **(i) ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் (Olympus Constructions (Pvt) Ltd)** ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக கோரப்பட்ட ரூபா.350 மில்லியன் கடன் வசதிக்கு 2019 ஜூன் 07 ஆம் திகதி நடைபெற்ற விசேட சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன்படி, 2019 ஜூலை 08 ஆம் திகதி மற்றும் 2019 ஒக்டோபர் 28 ஆம் திகதிகளில் முறையே ரூபா 100 மில்லியன் | 2023, 2021 | கடன்களை வழங்குவதற்கு முன்னர் முறையான வாடிக்கையாளர் மதிப்பீடு செய்து, அந்தக் கடன்களை அறவிடுவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. வங்கியினால் சொத்துக்களை அகற்றுவதற்கான சாத்தியப்பாடுகளை ஆய்வு செய்தும் வருகிறது. | வங்கியினால் 2019 இல் கடன் வசதி அனுமதிக்கப்பட்டது, 2021 திசெம்பர் மாதத்தில் அழைப்பாண அனுப்பப்பட்டுள்ளது. 2022 ஜனவரி மாதத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு, 2022 மே 25 இல் வழக்கு விசாரிக்கப்பட்டது. 2024 ஏப்ரல் மாதத்தில் வாடிக்கையாளரினால் தீர்வு ஒன்றினை முன்மொழிந்தார் என்பதுடன், தற்போதைய |

| | |
|---|---|
| மற்றும் ரூபா 150 மில்லியன் பெறுமதியான கடன் வசதிகளை இந்தக் கம்பனிக்கு வங்கி வழங்கியிருந்தது.<br><br>மேலும், கடன் வழங்கும் நேரத்தில் வங்கியுடன் செய்துகொள்ளப்பட்ட விசேட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு வாடிக்கையாளர் இணங்க தவறிவிட்டார். மண்ணின் பெறுமதியை அளவிட முடியாது என்று உள்ளக மதிப்பீட்டு அதிகாரி அறிக்கையிடப்பட்டதால் உள்ளக மதிப்பீட்டு அறிக்கை நிலுவையில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், சபைக் குறிப்பு இலக்கம் 01/SPL/06/2019 (ஆவண இல. 01) ஊடாக 07 ஜூன் 2019 அன்று இந்த கடனுக்கு சபை அனுமதி வழங்கியது. எனவே, காணியின் பெறுமதி மற்றும் மண் வருமானம் இரண்டையும் கருத்திற்கொண்டு காணியை மதிப்பிட்ட வெளி மதிப்பீட்டு அலுவலரினால் (இலங்கை வங்கியின் குழு மதிப்பீட்டாளர்) வழங்கப்பட்ட ரூபா 1 பில்லியன் மதிப்பீட்டைக் கருத்திற்கொண்டு | சட்ட நடவடிக்கைகள் மற்றும் சொத்து பறிமுதல் ஆகியவற்றை குறிப்பிட்டு வங்கி இதனை நிராகரித்தது.<br><u>தற்போதைய நிலை</u><br>CHC/14/2022 ஆம் இலக்க வழக்கு அடுத்த நடவடிக்கை - 2024.10.07 மற்றும் 2024.10.11 வழக்கு விசாரணை / தீர்ப்பனவு மேற்கொள்ளல் |

கடன் வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2019 யூன் 07 ஆம் திகதி உள்ளக மதிப்பீட்டு அலுவலரினால் மணல் விற்பனையினை உள்ளடக்காமல் ரூபா 72 மில்லியனுக்கான (FSV) காணி மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அதேபோல், நில மதிப்பில் புலனாகாத சொத்து மதிப்பை இணைக்க வேண்டாம் என்று அவர் பரிந்துரைத்துள்ளார்.

கடன் வழங்கலின் ஆரம்ப கட்டத்தில் 2020 ஜனவரி 07 அன்று செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டது. காணியை விற்பதற்காக வங்கி இரண்டு தடவைகள் (2022 நவம்பர் 18 மற்றும் 2021 ஜூன் 22) செய்தித்தாள்களில் விளம்பரம் செய்திருந்த போதிலும், ரூபா 44 மில்லியனுக்கு ஒரேயொரு விலைமனு மாத்திரமே கிடைத்துள்ளது. ஆனால், டெண்டர் குழு சொத்தை விற்க மறுக்கின்றனர்.

2023 திசெம்பர் 31 ஆம் திகதி

| | | | | |
|---|---|---|---|---|
| நிலவரப்படி கடனின் மொத்த நிலுவை மீதி ரூபா 303,805,400 ஆகும். வங்கி ஒரு சட்ட வழக்கை தாக்கல் செய்துள்ளதுடன், அது நடந்து கொண்டிருக்கிறது. | | | | |
| **(ii) பிம்புத் பைனான்ஸ் பிஎல்சி (Bimputh Finance PLC)**<br><br>கடன் தொகுதி பிணையம் மற்றும் தயா குழுமத்தின் பெருநிறுவன உத்தரவாதத்தின் பேரில் வங்கி 2018 ஜூலை 18 ஆம் திகதி பிம்புத் பைனான்ஸ் பி.எல்.சி.க்கு ரூப.350 மில்லியனை வழங்கியது. இந்த கடன் 2021 டிசம்பர் 31 நிலவரப்படி செயல்படும் கடன் பிரிவில் இருந்தது மற்றும் இது 2022 ஜூன் 29 அன்று செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டது. மேலும், பலவீனமான மூலதனமயமாக்கல், திரவத்தன்மை ஆபத்து மற்றும் சொத்துக்களின் தரத்தில் ஏற்பட்ட கடுமையான சரிவு போன்ற காரணிகளை பிரதானமாக கருத்தில் கொண்டதன் பின்னர் பிம்புத் பைனான்ஸ் பி.எல்.சி. இன் ∴பிட்ச் தரப்படுத்தல் (Fitch rating) ஆனது “BB (lka)” இலிருந்து “CC (lka)” க்கு | 2023, 2021 | கடன்களை வழங்குவதற்கு முன்னர் முறையான வாடிக்கையாளர் மதிப்பீடு செய்து, அந்தக் கடன்களை அறவிடுவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். வங்கியானது வாடிக்கையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்ததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தாக்கல் செய்யப்பட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. | ஆரம்பத்தில் வலுவான நிதிகளைக் கொண்ட எச்.டி.எப்.சி வங்கியின் பிரதான வாடிக்கையாளராக இருந்த பிம்புத் பைனான்ஸ் பி.எல்.சி, அரசாங்க கொள்கை மாற்றங்கள், கோவிட்-19 தாக்கங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக கடன் மீளப்பெறல் மற்றும் இலாபத்தில் வீழ்ச்சியை எதிர்கொண்டது. திருப்பிச் செலுத்துதல்களை நிர்வகித்த ஒரு காலத்திற்குப் பிறகு, அவர்கள் 2022 மே மாதத்திற்குப் பிறகு அனுப்பத் தவறிவிட்டனர், இது 2023 |

| | | | | |
|---|---|---|---|---|
| தரமிறக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கியினால் 2023 செப்டெம்பர் 01 ஆம் திகதி நிறுவனத்தின் உரிமம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.<br><br>2023 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி கடனின் மொத்த நிலுவை மீதி ரூபா 307,008,053 ஆகும். மேலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வங்கியினால் மூடல் நடவடிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | | | | செப்டம்பர் 1, அன்று அவர்களின் உரிமம் இரத்துசெய்யப்பட்டதுடன் வங்கியின் சட்ட நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தது.<br><u>தற்போதைய நிலை</u><br>பிம்புத் கலைப்பு தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் (சிவில்) எண். 41/24Co என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பத்திரிகை அறிவிப்பு /ஆதரவு - 24/9/2024. |
| **(iii)மாடம்பே மில் (பிரைவேட்) லிமிடட் (Madampe Mills (Pvt) Limited)**<br>வங்கி 2016 செப்டெம்பர் 13 ஆம் திகதி 2 வருட வட்டி சலுகை காலத்துடன் 5 வருட காலத்திற்கு 9 சதவீத சலுகை வட்டி வீதத்தின் கீழ் ஒரு வாடிக்கையாளருக்கு ரூபா 50 மில்லியன் மூலதனத்தை வழங்கியது. மேலும் சலுகைக் காலம் உட்பட கடன் மீள்கொடுப்பனவுக் காலம் 7 1/2 வருடங்கள் வரை | 2023, 2021 | கடன்களை வழங்குவதற்கு முன்னர் முறையான வாடிக்கையாளர் மதிப்பீடு செய்து, அந்தக் கடன்களை அறவிடுவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம்.<br><br><u>தற்போதைய நிலைமை</u><br>ஆதனத்தை உடமையாக்க வாடிக்கையாளர் தாக்கல் செய்த வழக்கு, CHC 19/24/MR. 16/02/2024 அன்று தீர்வு ஏற்பட்டது. உடன்பாட்டு அறிக்கை 14.08.2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது . | ஏலத்தை நிறுத்துவதற்காக வாடிக்கையாளர் 2024 பெப்ரவரி மாதத்தில் ரூபா.40 மில்லியன் செலுத்தினார், ஆனால், 2024 மாரச் மாதமளவில் எஞ்சிய தொகையை செலுத்தத் தவறிவிட்டார், இதனால் வங்கி ஏல நடவடிக்கைக |

நீடிக்கப்பட்டுள்ளது. கம்பனியானது செயற்திட்ட முன்மொழிவுக்கு ஏற்ப அவர்களின் திட்டமிடப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடைய நிறுவனம் தவறிவிட்டது. கடனைப் பெற்ற பின்னர், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 109.4 மில்லியன் மற்றும் ரூபா 12.9 மில்லியன் நட்டத்தை நிறுவனம் பதிவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் முன்வைக்கப்படுகின்றன.

கடன் செயல்பாட்டு கையேட்டில் 4.2.11 ஆம் பிரிவிற்கு மாறாக, வங்கி அடமான சொத்தின் கட்டாய விற்பனை மதிப்பில் 78.13 சதவீதத்தை கடனாக வழங்கியது, மேலும் நில அடமானத்திற்கு மேலதிகமாக, மேற்கூறிய கடன் வசதிக்கு கம்பனியின் இரண்டு இயக்குனர்கள் தனிப்பட்ட உத்தரவாததாரர்களாக உறுதியளித்திருந்தனர்.

கடன் செயல்பாட்டு கையேட்டின் 3.4.5 (அ) பிரிவிற்கு மாறாக, வங்கி மூன்றாம் தரப்பு சொத்தை பிணையமாக பெற்றுள்ளது. அடமானச் சொத்தின் உரிமை கம்பனியின் பணிப்பாளர் அல்லாத முகாமைத்துவ

ளை மீண்டும் தொடங்கியது. பணிப்பாளர் சபை 60% வரம்பை மீறி 78.13% அதிகரித்த LTV விகிதத்திற்கு ஒப்புதல் அளித்தது, இது. சட்ட அனுமதி பெறப்பட்டு, அடமானப் பத்திரம் நிறைவேற்றப் பட்டது.

<u>தற்போதைய நிலைமை</u>

வாடிக்கையாளர் தாக்கல் செய்த CHC 19/24/MR என்ற வழக்கு 16/02/2024 அன்று தீர்க்கப்பட்டது.

உடன்பாட்டு அறிக்கை 14.08.2024 அன்று தாக்கல் செய்யப்பட்டது .

| | | | | |
|---|---|---|---|---|
| இயக்குனரின் மனைவிக்கு சொந்தமானதாகும். வங்கிக்கு இன்னம் அடமான நிலத்தை கையகப்படுத்த தவறவிட்டது.<br><br>2023 டிசம்பர் 31 இல் உ்ள்ளவாறு மொத்த கடன் நிலுவை மீதி ரூபா 70,418,522 ஆகும், மேலும் வாடிக்கையாளருக்கு எதிராக வங்கியால் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | | | | |
| **(iv)தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திர அமைப்பின் (NEMO) கணக்கில் அரச பொறியியல் கூட்டுத்தாபணம் (SEC)**<br><br>வங்கி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திர சாதன அமைப்பின் சார்பில் உறுதிமொழி குறிப்பினை ஈடாக வைத்து ரூபா 71.40 மில்லியன் கடன் வசதியை வழங்கியுள்ளது. கடன் வசதியை வழங்கும் நேரத்தில் எதிர்பார்த்தபடி இந்த நிறுவனம் செயல்படவில்லை மற்றும் தற்போது கடன் வசதியானது செயல்படாத பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள் | 2023, 2021 | கடன்களை வழங்குவதற்கு முன்னர் முறையான வாடிக்கையாளர் மதிப்பீடு செய்து, அந்தக் கடன்களை அறவிடுவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். வங்கியினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | செயற்பாட்டு மூலதனமாக வழங்குவதற்கு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 150 மில்லியனை வங்கி அனுமதியளித்ததுடன், ரூபா 71.93 மில்லியன் வழங்கியுள்ளது. தேசிய இளைஞர் படையணியிடமிருந்து மொத்தம் ரூபா.36,808,935 தொகையுடைய இரண்டு கொடுப்பனவுகள் பெறப்பட்டுள்ளன,. அரச பொறியியல் கூட்டுத்தாபனம் (SEC) திருப்பிச் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ளது. வாடிக்கையாளரின் கடன் தகுதியை சரியாக மதிப்பீடு செய்யாமல் வங்கி மேற்கூறிய கடனை வழங்கியுள்ளது. 2023 திசெசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி மொத்த கடன் நிலுவை மீதி ரூபா 41,572,112 ஆகும், மேலும் வாடிக்கையாளருக்கு எதிராக வங்கியால் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | | | | | செலுத்தும் திட்டத்தை சமர்ப்பிக்காததால் சட்ட நடவடிக்கை நடைபெற்று வருகிறது, அடுத்த வழக்குத் திகதி 2024 ஒக்தோபர் 4 இல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது<br><br>தற்போதைய நிலைமை<br>இலக்கம் CHC 8/21 MR என்ற வழக்கு – வழக்கு விசாரணை 04.10.2024 |
| **(v) நொமிக் இன்டனெஷனல் (Nomic International)**<br><br>நொமிக் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்தினால் போர்ட்போலியோ வளர்ச்சி (Portfolio growth) மற்றும் தற்போதுள்ள கடனை (கடன் இலக்கம் 114730000006) மீட்டெடுப்பதற்காக ரூபா.50 மில்லியன் கடன் வசதி கோரப்பட்டதுடன், இது 2022 ஜனவரி 27 அன்று நடைபெற்ற கடன் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. | 2023 | | கடன் ஒப்பந்தம் மற்றும் கடன் சலுகைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும். இந்த கடனை வசூலிக்க திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தேவையான அனைத்து ஆவணங்களும் 2024.08.14 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டியுள்ளது.<br><br>. | கடனை மீள் அறவீடு செய்வதற்கான சிக்கல்களை மேற்கோள் காட்டி நோமிக் இன்டர்நேஷனல் லிமிடெட் 2022 நவம்பர் மாதம் முதல் முதல் ரூபா.25 மில்லியன் பெருநிறுவன கடன் வசதியினை செலுத்தவில்லை. திருப்பிச் செலுத்தும் திட்டத்திற்கான கோரிக்கைக |

அதற்கமைய 2022 பெப்ரவரி 17 ஆம் திகதி வங்கி குறித்த கம்பனிக்கு ரூபா 25 மில்லியன் கடன் வசதியை வழங்கியிருந்தது. வங்கி அவர்களின் கடன் போர்ட்போலியோவுக்கு எதிராக இந்த கடனை வழங்கியதுடன், இயக்குனர்களிடமிருந்து தனிப்பட்ட உத்தரவாதங்களைப் பெற்றிருந்தது. பின்னர் 2023 மார்ச் 09 அன்று செயல்படாத கடன் பிரிவுக்கு மாற்றப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- 2023 ஜூன் 20 அன்று கள விஜயம் செய்த பின்னர் அழைப்பாணைக் கடிதம் அனுப்புவதற்கு வங்கி முடிவு செய்யப்பட்டது.
- கடன் ஒப்பந்தத்தில் (i) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட நிபந்தனைகளின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் கம்பனியின் இரண்டு பணிப்பாளர்களினால் சான்றுதி செய்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளாய்விற்காக வங்கிக்கு

ள் இருந்தபோதிலும், அவை பதிலளிக்கவில்லை. நோமிக்கின் தலைமை நிர்வாக அதிகாரி நிறுவன மாற்றங்களை சுட்டிக்காட்டியதுடன், நிறுவனம் கடன் வழங்குவதை நிறுத்திவிட்டது. அவர்கள் மற்றொரு ஆதனத்தினை அடமானம் வைக்க முன்மொழிந்தனர், ஆனால் தேவையான ஆவணங்களை வழங்கத் தவறிவிட்டனர். எச்.டி.எப்.சி வங்கி பெறப்பட்ட ஆலோசனையின் படி 2024 ஜூன் 24 சட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

தற்போதைய நிலைமை:

தேவையான அனைத்து ஆவணங்களும் 2024.08.14 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்

சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2022 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை வங்கி பெறத் தவறிவிட்டது.

- கடன் ஒப்பந்தத்தில் (ii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பாட்டில் உள்ள கடன்களின் பட்டியல் புதுப்பிக்கப்பட்டு பணிப்பாளர்களினால் அரையாண்டுக்கு சான்றுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அது வங்கியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இருப்பினும், 2022 ஆம் ஆண்டிற்கான 2 வது அரையாண்டு போர்ட்போலியோவைப் பெறத் வங்கி தவறிவிட்டது.
- டிசம்பர் 31 நிலவரப்படி மொத்த நிலுவைக் கடன் தொகை ரூபா 27.5 மில்லியன் ஆகும் என்பதுடன் நிலுவையில் உள்ள நாட்களின் எண்ணிக்கை 388 ஆகும். வங்கியினால் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டியுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| **(vi) மிக முக்கியமான நிபுணர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள்**<br><br>2016 செப்டெம்பர் 28 ஆம் திகதிய GCL/2016/210 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வங்கி மிக முக்கியமான தொழில் வல்லுநர்களுக்கு (VIP) வீடமைப்புக் கடன் வசதியை அறிமுகப்படுத்தியதுடன், இத்திட்டத்தின் கீழ் மொத்தம் ரூபா 282,985,000 தொகையிலான 140 கடன்கள் வழங்கப்பட்டன. அவற்றில் மொத்தம் ரூபா 47,198,171.41 அல்லது 16.68 சதவீதமான 27 கடன்கள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி செயலற்றவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், கடன்பிணை காணப்படாமையினால் மீள்அறவீடு செய்வதற்குஇரண்டாம் வாய்ப்பினை வங்கி இழந்துவிட்டது. | 2023, 2022, 2021 | அந்த கடன்களை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் | மிக முக்கிய பிரமுகர்களின் கடன்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பல கடன்கள் ஏற்கனவே வசூலிக்கப்பட்டுள்ளன. தற்போது ரூபா 34.65 மில்லியன் கடன் மூலதனத்துடன் 23 கடன் செயற்பாடற்ற கடனான உள்ளன. | மிக முக்கிய பிரமுகர்களின் கடன்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது பல கடன்கள் ஏற்கனவே வசூலிக்கப்பட்டுள்ளன. தற்போது ரூபா 42.8 மில்லியன் செயற்பாடற்ற கடன் மூலதனத்துடன் 26 கடன்கள் உள்ளன.<br><br><u>தற்போதைய நிலைமை</u><br><br>2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதி நிலவரப்படி செயற்பாடற்ற கடன் வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மிக முக்கிய பிரமுகர்களின் கடன் 23 ஆகும் என்பதுடன் மொத்த நிலுவை மூலதனம் ரூபா 34.65 மில்லியன் ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(vii) எம்.த போல்**<br>வங்கியின் கொழும்பு கிளையினால் ரூபா 16 மில்லியன் பெறுமதியான ஊழியர் சேமலாப நிதிய மிதக்கும் கடன் வசதியை 2021 டிசம்பர் 02 ஆம் திகதி மேற்படி வாடிக்கையாளருக் வழங்கியதுடன், அது 2022 ஏப்ரல் 3 ஆம் திகதி செயற்படாத வகைக்கு மாற்றப்பட்டது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலுவைத் தொகை ரூபா 20,784,782.07 ஆகவும், நிலுவையாக உள்ள நாட்கள் (DPD) 701 ஆகவும் காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் முன்வைக்கப்படுகின்றன.<br>• 2021 மார்ச் முதல் 2023 திசெம்பர் வரையிலான காலகட்டத்தில் வங்கி இந்த வாடிக்கையாளரிடமிருந்து ரூபா 112,970 ஒரே ஒரு கட்டணத்தை மட்டுமே பெற்றிருந்தது.<br>• சந்தேகத்திற்கிடமான காரணத்திற்காக மத்திய வங்கி இந்த வாடிக்கையாளரிடமிருந்து ஊழியர் சேமலாப நிதியை பிடித்து வைத்திருந்தது. எனவே, 2022 | 2023 | இந்த கடனை வசூலிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | வாடிக்கையாளர் 2021 திசெம்பர் மாதத்தில் ரூபா.16 மில்லியன் கடனை எமது கொழும்பு கிளையில் பெற்றதுடன், இந்தக் கடன் அவரது ஊழியர் ஊழியர் சேமலாப நிதியிலிருந்து பாதுகாக்கப்பட்டது. அவர் ஷெல்லியின் வடிவமைப்பு ஸ்டுடியோவின் நிர்வாக இயக்குநராக இருந்தார், மேலும் சம்பளத்தில் இருந்து தவணைகளை கழிப்பதற்கு நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தக் கடன் தொகை விடுவிக்கப்பட்டது. அவர் தனது ஊழியர் சேமலாப நிதியைத் திரும்பப் பெறுவதற்கான திட்டங்கள் குறித்து 2022 நவம்பர் 22 அன்று எங்களுக்குத் தெரிவித்தார், |

| | | | | |
|---|---|---|---|---|
| திசெம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி ரூபா.5,522,788 நிலுவைக் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டது.<br>• தொழில்தருநர் ஏற்றுக்கொண்ட படி கடன் வாடிக்கையாளரின் சம்பளம் HDFC வங்கிக்கு அனுப்பப்படவில்லை. | | | | ஆனால் மோசடியான மீளப்பெறும் முயற்சிகள் குறித்த சந்தேகத்தின் காரணமாக தொழில் அலுவலகத்திலிருந்து இடைநிறுத்தக் கோரிக்கையை மத்திய வங்கி சுட்டிக்காட்டியது. விசாரணை நடந்து வருவதுடன், கம்பனி சமமான மாத தவணைக் (EMI) கொடுப்பனவுகள் குறித்து தவறான உத்தரவாதங்களை வழங்கியுள்ளது. மேலும் அது மூடப்பட்டதை பின்னர் வெளிப்படுத்தியது. |
| **(viii)** மொத்தம் ரூபா 3,621 மில்லியன் தொகையுடைய 5,237 சேமலாப நிதியக் கடன்கள் 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன, அவற்றில் ரூபா.1,441 மில்லியன் தொகையுடைய 2,114 ஊழியர் சேமலாப நிதிய | 2023 | இந்த கடன்களை வசூலிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | தற்போது EPF கடன்கள் BSO உடன் வழங்கப்படுகின்றன. மேலும், பணியமர்த்தப்பட்ட கடன் பெற்றவர்களின் சம்பளத்தினை வங்கிக்கு அனுப்புவதற்கு வங்கி |

| | | | | |
|---|---|---|---|---|
| கடன்கள் (40 சதவீதம்) 2023 ஆம் ஆண்டில் ஒரு தவணை கூட செலுத்தப்படவில்லை. | | | | முயற்சிக்கிறது. |
| **2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை** | | | | |
| (i) 2011 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டலின் B.2.5 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் பல்வேறு தொழில்கள், வணிகங்கள் மற்றும் தனிப்பட்ட பிரிவுகளில் கடன் வாங்குபவர்களின் மதிப்பீட்டு வாரியான விநியோகத்தை மதிப்பீடு செய்ய வங்கி தவறிவிட்டது. எங்களின் அவதானிப்புக்களின் பிரகாரம முறைமை புதுப்பிப்பு இன்னும்இடர் முகாமைத்துவ பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கவில்லை.தொழில்கள், வணிகங்கள் மற்றும் பிரிவுகள் வாரியான இடர் மதிப்பீடுகளை மதிப்பிடுகையில், வணிகக் கடன்கள் (பெருநிறுவன கடன் மற்றும் வணிக அடகு) (NPL) மீதான செயற்பாடற்ற கடன்கள் விகிதம் | **2023** | வங்கிச் சட்ட வழிகாட்டுதலுக்கு இணங்க வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | இடர் தரப்படுத்தல் வசதிகள் கோர் பேங்கிங் முறைமையில் இணைக்கப்படும் வரை கைமுறை தீர்வுக்கான ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2023 திசெம்பர் 31 நிலவரப்படி மொத்த வணிகக் கடன் கடன் இலாகாவில் அண்ணளவாக 75 சதவீதமாக இருப்பது கவனிக்கப்பட்டது, | | | | |
| (ii) 2011 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டலின் D.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் செயல்பாட்டு அபாய நிகழ்வுகளின் தீவிரத்தை குறைக்க ஆபத்து தணிப்பு பயன்பாடு பரிந்துரைக்கப்படுகிறது. வணிக தொடர்ச்சி மற்றும் பேரழிவு மீட்பு திட்டத்தின் ஒரு பகுதியாக போதுமான தகவல் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்வதும் இடர் தணிப்புக்கு இன்றியமையாதது. மேலும், 2014 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மத்திய வங்கியின் பணிப்புரையின் பிரகாரம், தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான அடிப்படை பாதுகாப்பு நியமங்களை வங்கிகள் 2015 ஜூலை 1 ஆம் திகதி முதல் அமுல்படுத்த வேண்டும். இருப்பினும், 9 ஆண்டுகளாக பின்வரும் பாதுகாப்பு கட்டுப்பாடுகள் | 2023 | வங்கிச் சட்ட வழிகாட்டுதலுக்கு இணங்க வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | தகவல் பாதுகாப்பு முகாமைக் கட்டுப்பாடுகளுக்கான அடிப்படை பாதுகாப்பு நிலைப்பாடுகள் ISMS (தகவல் பாதுகாப்பு முகாமையின் ISO தரநிலை) செயல்படுத்தலின் கீழ் உள்ளன. |

பூர்த்தி
செய்யப்படவில்லை.
இந்த நிலைமை
வங்கியில் அதிக
செயல்பாட்டு
ஆபத்தை
உருவாக்கக்கூடும்.

| கட்டுப்பாட்டின் பெயர் | கட்டுப்பாட்டின் எண்ணிக்கை | பூரணப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு எண்ணிக்கை |
|---|---|---|
| தகவல் பாதுகாப்பு நிகழ்வு முகாமைத்துவம் | 5 | 3 |
| தகவல் முறைமையின் கையகப்படுத்தல், அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு | 13 | 5 |
| செயற்பாட்டு பாதுகாப்பு | 16 | 10 |
| வணிக தொடர்ச்சி முகாமைத்துவம் | 5 | 1 |

(iii)

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) செயல்பாட்டு கையேட்டின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் 36 வங்கிக் கிளைகளில் 2023.12.31 திகதியுள்ளவாறு மொத்தமான வைப்பு மீதி ரூபா.180,589,212.86 தொகையுடைய 71,661 ஆரம்ப சேமிப்பு கணக்குகளை வாடிக்கையாளர்களின் முறையான விண்ணப்ப படிவம் (mandate) மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் இல்லாமல் வங்கி பராமரித்து வந்தது. | 2023 | எதிர்காலத்தில் இது போன்ற நிலைமைகளை தவிர்க்க வலுவான உள்ளகக் கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | எச்.டி.எப்.சி ஒரு சங்கமாக செயல்பட்டபோது முழுமையற்ற விவரங்களுடன் சில கணக்குகள் திறக்கப்பட்டன. பிரதிலாப சேமிப்புக் கணக்குகளுக்கு மீதிகளை மாற்றுதல், செயற்பாடற்ற கணக்குகளை கைவிடப்பட்ட சொத்தாகக் CBS முறைமை அளவுருக்களை சரிசெய்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தகவல தொழில்நுட்ப பிரிவு பழைய முறைமையிலிருந்து தேவையான தரவை மீட்டெடுத்து வருகிறது. |

**2.5 தகவல் தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாடுகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| **போதிய தகவல் தொழில்நுட்ப ஊழியர்கள் இல்லை** தரவுத்தள நிர்வாகிகள் (Data Base Administrators) (டிபிஏக்கள்) வங்கியின் முக்கியமான தகவலக்ளைப் | 2023 | முக்கியமான தகவல் தொழில்நுட்ப பதவிகளுக்கு பொருத்தமான நபர்களை உடனடியாக நியமிக்க வேணடும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | தொழில் இடம்பெயர்வு காரணமாக தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களின் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை |

பாதுகாப்பதிலும் பாதுகாப்பு மீறல்களைத் தடுப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் தரவுத்தள நிர்வாகிக்கு ஒரு பதவி உள்ளது. வங்கியின் தரவுத்தள நிர்வாகி பதவி 2023 ஜூன் 21 முதல் வெற்றிடமாக இருப்பது கவனிக்கப்பட்டது. மேலும், 2023 டிசம்பர் 31 நிலவரப்படி வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலையில் தகவல் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஆய்வாளர், முகாமையாளர் IS, முகாமையாளர் SOC, SOC ஆய்வாளர், நிர்வாக GRC (இரண்டு பதவிகள்) முகாமையாளர் DBA, முகாமையாளர்-டிஜிட்டல் வங்கியியல், மென்பொருள் மேம்பாட்டில் தொழில்நுட்ப முன்னணி, டிஜிட்டல் வங்கியில் தொழில்நுட்ப முன்னணி, மென்பொருள் பொறியாளர் -IV ஆவது முக்கிய பதவிகள், நிர்வாக ஆளுமை இடர் மற்றும் இணக்கம், உதவி பொறியாளர் பதவிகளும் வெற்றிடமாக உள்ளன.

எனவே, இது வங்கியின் தகவல் தொழில்நுட்ப செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க இடரை உருவாக்கலாம்.

யை உருவாகியுள்ளது. தனியார் நிறுவனங்கள் அதிக சம்பளத்தை வழங்கக்கூடிய இயலுமையை கொண்டுள்ளதுடன் எச்.டி.எப்.சி அங்கீகரிக்கப் பட்ட சம்பள விகிதங்கள் மற்றும் நிலையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன.

இதன் விளைவாக, இந்த பதவிகளை விளம்பரப்படுத்த முகாமைத்துவம் முயற்சிகளை தொடர்ந்து எடுத்த போதிலும், தகவல் தொழில்நுட்ப வெற்றிடங்களை நிரப்புவது மிகவும் சவாலானதாகி விட்டது.

**2.6 செயற்பாட்டு மீளாய்வு**

**2.6.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| **(i) அம்பாறை கிளையில் வழங்கப்பட்ட மோசடியான கடன்கள்**<br><br>2018 ஆம் ஆண்டில் அம்பாறை கிளையினால் தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு ரூபா 8,000,000 பெறுமதியான மோசடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அது செயற்பாடற்ற கடன் பிரிவுக்கு மாற்றப்பட்டது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை மீதி ரூபா 14,957,108 ஆகும். | 2023, 2022, 2021 | எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகளைத் தடுக்க முகாமைத்துவம் வலுவானதும் பயனுள்ளதுமான உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். சட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. | வழக்கு எண். 1329/M மாவட்ட நீதிமன்றம் மஹியங்கனை -1வது பிரதிவாதி, 2வது மற்றும் 3வது பிரதிவாதிகளுக்கு கிராம உத்தியோகத்தரால் சம்மன் அனுப்பபட்டுள்ளது. - 4வது பிரதிவாதி எக்ஸ்பரேட் ட்ரயல், ஆரம்ப விசாரணை 2024.10.04 அன்று நிகழும். வழக்கு எண் B 3228/23 மற்றும் B2381/22- 2024.10.16 அன்று EQD அறிக்கை தொடர்பான மேலதிக விசாரணைக்கு வருகின்றன. முதல் பிரதிவாதிக்கு எதிரான வழக்கு எண் 6296/M மாவட்ட நீதிமன்றம் அம்பாறை – 2024.10.21 விசாரணைக்கு வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ii) கடன் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக EPF நிதிகள் / பதிவுகள் கிடைக்காமை**<br><br>கடன் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக ஊழியர் சேமலாப நிதி / பதிவுகள் கிடைக்காமை 2022 ஆம் ஆண்டுக்கான 70 ஊழியர் சேமலாப நிதி வாடிக்கையாளர்களின் மொத்த நிலுவைத் தொகையான ரூபா.3.45 மில்லியனை செலுத்த மத்திய வங்கி மறுத்துவிட்டது. அதனால், வங்கிக்கு ரூபா.12.49 மில்லியன் இழப்பை ஏற்படுத்தலாம். | 2023, 2022 | கோடிடப்பட்ட பரிவர்த்தனைகளினால் (underlined transactions) வங்கிக்கு ஏற்படும் நட்டத்தை தடுக்க அல்லது குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பிரதான உள்ளக கணக்காய்வாளர் முழுமையான உள்ளக விசாரணையை நிறைவு செய்துள்ளதுடன், தற்போது மத்திய வங்கியிடமிருந்து உரிய தகவல்களை பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.<br><br>அது நிறைவடைந்த பின்னர், அறிக்கையினை பணிப்பாளர் சபை கணக்காய்வு குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.முகாமைத்துவத்தினால் வசூலிக்க வேண்டிய தொகையினை அறவீடு செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணமான அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளக கணக்காய்வு பிரிவு (IAD ) ஒரு விரவான விசாரணையை நடாத்தி அதன் அறிக்கையினை பணிப்பாளர் சபை கணக்காய்வு குழு மற்றும் இயக்குனர் சபையிடம் சமர்ப்பித்துள்ளது.<br><br>வெளியாள் கணக்காய்வு கம்பனி தற்போது ஒரு தனி விசாரணையினை நடாத்தி வருவதுடன், அவர்களின் அறிக்கையையும் பணிப்பாளர் சபை கணக்காய்வு குழுவிடம் சமர்ப்பிக்கும். |
| **(iii) நிவி டெய்ரி ∴.பார்ம் (தனியார்) லிமிடெட்**<br><br>வங்கியின் கடன் செயற்பாட்டு கையேட்டின் பிரிவு 4.2.1.1 இன் படி, வணிக நோக்கங்களுக்காக கடன் வழங்கும் போது சொத்தை அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் கட்டாய விற்பனை மதிப்பில் 60 சதவீதத்தை கடன் தொகையாக கருதலாம். மேற்படி | 2023 | எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகளைத் தடுக்க முகாமைத்துவத்தினால் வலுவானதும் பயனுள்ளதுமான உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த வேண்டும் | வாடிக்கையாளருக்கு எதிராக வழக்குத் தொடர சிவன் குரே அவர்களிடம் ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. | வாடிக்கையாளரைக் காணவில்லை மற்றும் முகவரி சமீபத்தில் கணடுபிடிக்கப் பட்டதால் வங்கியினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. |

தேவைப்பாடுகளுக்கு முரணாக, குளியாப்பிட்டிய கிளையினால் நிவி பாற்பண்ணைக்கு மொத்தம் ரூபா. 49,603,274 தொகையுடைய 03 வணிக கடன்களை (602725000177, 602730000001 மற்றும் 602730000002) வழங்கியுள்ளது, இது அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் கட்டாய விற்பனை பெறுமதியில் 124 சதவீதமாகும். எவ்வாறாயினும வங்கி மேற்குறித்த சொத்துக்களை 2019 ஆகஸ்ட் 01 ஆம் திகதி கையகப்படுத்தியிருந்தது டன், அது 2021 ஒக்டோபர் 08 ஆம் திகதி ரூபா.31 மில்லியனுக்கு விற்கப்பட்டிருந்ததுடன், மேற்கூறிய கடன்களை பகுதியளவில் செலுத்தியிருந்தது. மேலும், தீர்க்கப்படாத கடன் தொகை ரூபா 39.81 மில்லியனாக இருந்ததுடன், எந்தவொரு பிணையும் இன்றி இருந்தது, இது வங்கிக்கு நட்டமாக அமையும்.

| கடன் இலக்கம் | அறவிட வேண்டிய தொகை (ரூபா) | அறவிடப்பட்ட தொகை ( | அறவிடப்படாத தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா) | (ரூபா) | |
| 60272500177 | 19,914,715 | 19,914,715 | 0 | தீர்க்கப்பட்டது |
| 60273000001 | 31,114,145 | 11,828,411 | 19,285,734 | செயற்பாடாத கடனாக கருதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 60273000002 | 20,521,095 | 0 | 20,521,095 | |

**2.6.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| | | | |
|---|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி கையகப்படுத்தப்பட்ட ஆதனங்களின் (VP) கீழ் வகைப்படுத்தப்பட்ட நிலுவைக் கடன் தவணை மற்றும் நிலுவை வட்டி பெறுமதி ரூபா 393,718,086 ஆகும். | 2023 சொத்துக்களை விற்று நிலுவைத் தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக கையகப்படுத்தப்பட்ட 84 ஆதனங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| அவற்றில் ரூபா 29,584,465 பெறுமதியான பறிமுதல் செய்யப்பட்ட 84 ஆதனங்களின் சொத்துக்கள் ஐந்து வருட காலப்பகுதிக்கு மேலாக ஏலம் விடப்படாமல் இருந்தன. | | | | உள்ளன. இதில் எல்லை சரிபார்ப்பு சிக்கல்களுடன் 51 ஆதனங்கள் உள்ளன. எனினும், 9 ஆதனங்களின் உரிமையை தீர்ப்பதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சிய ஆதனங்கள் (24 ஆதனங்கள்) தொடர்பில் பலமுறை டென்டர் விடப்பட்ட போதிலும் நியாயமான முனைவுகள் கிடைக்கப்பெறவில்லை. |
| **2.7 பெறுகை** | | | | |
| வங்கியானது கடன் மீட்பு முகாமை முறைமை செயற்திட்டத்தினை எவோனட் டெக்னாலஜிஸ் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்திற்கு 2018 இல் ரூபா.12 மில்லியனுக்கு 2018 இல் வழங்கியதுடன் 2019 மே 21 அன்று மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தந்தின் பிரகாரம் ரூபா 9.9 மில்லியன் கிரயமாக இருந்தது. | 2022 | பெறுகை நடவடிக்கைகளுக்கு முறையான ஆவணங்களை பராமரிக்க வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | முகாமைத்துவம் விற்பனையாளர்களுடன் கலந்துரையாடியதுடன், இதன் விளைவாக செலவைக் குறைத்தது. எதிர்கால நடவடிக்கைகளை ஆவணப்படுத்த செயல்படுத்தப் |

| | | | |
|---|---|---|---|
| (அ) பேச்சுவார்த்தையின் பிரகாரம் வங்கி விலைக்குறைப்புக்கள் தொடர்பில் ஏலதாரர்களிடமிருந்து எழுத்து மூலமாக பெற வேண்டும். எனினும், அத்தகைய ஆவணத்தை கணக்காய்வுக்கு வங்கி சமர்ப்பிக்க தவறிவிட்டது. | | | பட்ட ஆவணங்களை பராமரிப்பதில் உள்ள பலவீனங்கள் குறித்து உங்கள் அவதானத்தினை ஏற்றுக்கொள்கிறோம். அத்துடன், எதிர்காலத்தில் ஆவணங்களை எவ்வாறு பராமரிப்பது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) செயல்திறன் பத்திரம் 2020 மார்ச் 05 அன்று காலாவதியானதுடன், இந்த பத்திரத்தினை நீட்டிப்பதற்காக் டென்டர் குழுவின் செயலாளரால் 2020 பெப்ரவரி 26 அன்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இருப்பினும், நீட்டிக்கப்பட்ட செயல்திறன் பத்திரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 | அவதானிப்புடன் உடன்படுகிறோம். கருத்தை ஏற்றுக்கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்குநருடன் பேச்சுவார்த்தை நடாத்தி, 2023 மே மாத இறுதிக்குள் அல்லது அதற்கு முன் புதிய செயல்திறன் பாதுகாப்பைச் சமர்ப்பிக்க ஒப்புக்கொண்டனர். இதுபோன்ற தவறுகளைத் தவிர்ப்பதற்காக, நாங்கள் அந்தந்த அதிகாரிகளுக்கு ஒழுங்கு நடவடிக்கைகளைத் தொடங்குவோம். | அதிகாரிகள் வழங்குனர்களுடன் கலந்துரையாடி 2023 மே மாத இறுதிக்குள் அல்லது அதற்கு முதல் புதிய செயல்திறன் பாதுகாப்பை சமர்ப்பிக்க இணங்கினர். இவ்வாறான தவறுகளை தவிர்க்க நாங்கள் உரிய அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கையை ஆரம்பிப்போம் |

**2.8 மனித வள முகாமைத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| கீழே குறிப்பிடப்பட்டுள்ள | 2023 | முக்கிய **பிரதி பொது** | கடன் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| முக்கிய முகாமைத்துவ பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாக உள்ளதை அவதானிக்க முடிந்தது. இந்ந நிலைமை வங்கியின் செயல்திறனில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.<br>• பிரதி பொது முகாமையாளர் - கடன்<br>• உதவி பொது முகாமையாளர் - கடன் (2022 திசெம்பர் 22 முதல்)<br>• உதவி பொது முகாமையாளர் (வசூலிப்பு)<br>• பிரதான தகவல் உத்தியோகத்தர்<br>• உதவி பொது முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம்<br>• பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தர் - (2023 மார்ச் 04 முதல்) | முகாமைத்துவ பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு உடனடியாக மேற்கொள்ள வேண்டும். | **முகாமையாளர் - கடன்**<br><br>**உதவி பொது முகாமையாளர் - கடன்**<br><br>**உதவி பொது முகாமையாளர் (வசூலிப்பு)**<br><br>-----------------------<br>பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பு நடவடிக்கை நடைபெற்று வருகிறது.<br><br>**பிரதான தகவல் உத்தியோகத்தர் மற்றும் உதவி பொது முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம்**<br><br>தலைமை தகவல் அதிகாரியானவர் தகவல் தொழில்நுட்ப பிரிவின் தலைவராக பணி புரிகிறார். அத்தகைய பதவி இன்மேல் நிறுவனத்தில் காணப்படாது. எனினும், மனித வள பணிப்பாளர் சபைக் குழுவானது தகவல் தொழில்நுட்ப பிரிவினை மீள்கட்டமைக்க ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கும், புதிய கோர் பேங்கிங் முறைமையினை அமுல்படுத்தவும் தீர்மானித்துள்ளது. நிபுணத்துவ | வசூலிப்பு தலைவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு சபை அனுமதித்துள்ளது- ஒரு பதவி (அனுமதிக்கப் பட்ட சபை குறிப்பினை பாரக்கவும்) 2024.09.09 அன்று 4 வது தடைவ மீண்டும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் அதிக சம்பள எதிர்பார்ப்பு காரணமாக தகவல் தொழில்நுட்ப தலைவர் CIO ஆக செயற்படுகிறார். இந்தப் பதவி இனிமேல் ஒழுங்கமைப்பில் காணப்படாது. எனினும், தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தினை மீள்கட்டமைப்பதற்கும் புதிய கோர் பேங்கிங் முறைமையினை அமுல்படுத்துவதற்கும் ஆலோசகர் ஒருவரை |

| | |
|---|---|
| முன்மொழிவுகளின் அடிப்படையில் திணைக்களம் மீள்கட்டமைக்கப்படும் . | நியமிக்க BHRC மற்றும் சபை என்பன தீர்மானித்தது. நிபுணத்துவ முன்மொழிவுகளின் அடிப்படையில் திணைக்களம் மீள்கட்டமைக் கப்படும். |
| **பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தர்** கிளைகளின் எண்ணிக்கை மற்றும் அளவின் பிரகாரம் இந்த பதவி வங்கிக்கு தேவையில்லை என்று சபை முடிவு செய்தது. பிரதி பொது முகாமையாளர் - கடன் மற்றும் வசூலிப்பு, மற்றும் பிரதான முகாமையாளர்களை ஆடசேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள துடன் பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தர் என்பவர் பிரதான நிர்வாக அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. | கிளைகளின் எண்ணிக்கை மற்றும் அளவின் பிரகாரம் இந்த பதவி வங்கிக்கு தேவையில்லை என்று சபை முடிவு செய்தது. பிரதி பொது முகாமையாளர் - கடன் மற்றும் வசூலிப்பு, மற்றும் பிரதான முகாமையாளர்களை ஆடசேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தர் என்பவர் பிரதான நிர்வாக அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. |

## 3.6 பிரதேச அபிவிருத்தி வங்கி

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | தேறிய சொத்துக்கள் ரூபா | வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 245,889,512,000 | 230,496,189,000 | 15,393,322,000 | 306,303,000 | முனைப்பழியற்றது |
| **2022** | 285,395,150,000 | 269,169,023,000 | 16,226,127,000 | 1,349,395,000 | முனைப்பழியற்றது |
| **2023** | 299,717,438,000 | 281,851,716,000 | 17,865,722,000 | 863,518,000 | முனைப்பழியற்றது |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | SLFRSs ஐ ஏற்றுக்கொண்டதன் காரணமாக மேலதிக கணிப்பீடுகள் எழுந்தன. எனவே, நிதிக்கூற்றுக்களை மூடும் செயற்பாட்டின் போது பொதுப் பேரேடுகளிற்கு சீராக்கம் செய்யப்படாமல் பதிவுகள் நேரடியாக நிதிக்கூற்றுக்களிற்கு சீராக்கம் செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2021, 2022, 2023 | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | முகாமைத்துவத்தால் எந்த தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முகாமைத்துவத்தால் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | தனித்தனியாக குறிப்பிடத்தக்க வாடிக்கையாளர்களுக்கு மீளாய்வு செயன்முறை கிடைக்காதமை தனிப்பட்ட நட்டக்கழிவு கணிப்பீட்டு செயன்முறையின் செயற்திறனைத் தடுக்கலாம். மேலும் அதற்கு மேலதிக மேம்பாடுகள் | 2021, 2022, 2023 | கண்காணிப்பதற்கு சரியான பொறிமுறையை நிறுவுதல் மற்றும் நட்டக்கழிவு கணிப்பீட்டு செயன்முறையின் சரியான தன்மையை உறுதிப்படுத்துதல் | முகாமைத்துவத்தால் எந்த தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முகாமைத்துவத்தால் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

தேவைப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| இதே விளக்கத்தின் கீழ் பல பொது பேரேட்டு கணக்குகள் வங்கியால் உருவாக்கப்பட்டன, அவை தொடர்புடைய பேரேட்டு கணக்குகளுக்கு மீதிகளை பதிவுசெய்யும் போது குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. மேலும், சில வருமானக் கணக்குகள் தொடர்பாக கழித்தல் மீதிகள் அவதானிக்கப்பட்டன. | 2021, 2022, 2023 | நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பாக தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | தகவல் தொழில்நுட்பப் பிரிவோடு ஒருங்கிணைத்தும் CBS விற்பனையாளரின் உதவியுடனும் தொடர்புடைய பேரேட்டுக் கணக்குகளில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு வங்கி எதிர்பார்க்கிறது. | எனினும் இந்த சிக்கல் இன்னும் தீர்க்கப்படவில்லை. |
